NOT FOR COMMERCIAL PURPOSE
படிப்பதற்கு மட்டும். அச்சடித்து விற்பதற்கு அல்ல.

بسم الله الرحمن الرحيم

# مجلس السلف الصالحين

# சான்றோர் பாடசாலை

பாகம் 1

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் رحمه الله
அவர்கள் எழுதிய அஸ்ஸுஹ்து என்ற நூலிலிருந்து...
இமாம் ஹசன் பஸரி رحمه الله அவர்களின் நாற்பது கூற்றுகள்

அரபியில்
**இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ்**

பொருள் மற்றும் கருத்துரை
**உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்**
குர்ஆன், சுன்னா பணியாளர்

دار الهدى
DARUL HUDA
إن هدى الله هو الهدى
(இஸ்லாமிய) அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழி

# உள்ளே...

பதிப்புரை ........ 5

நுழையும்முன்... ........ 7

1. விடிந்தால் மறுமை ........ 17
2. தீமைகள்தான் மிஞ்சி உள்ளன ........ 20
3. முஃமினின் நிலை ........ 24
4. விசித்திரமான மரணம்! ........ 28
5. ஏன் இந்தக் கவலை? ........ 31
6. உள்ளம் மென்மையாக ........ 34
7. நீங்கள் எப்படி...? ........ 37
8. கடினமான இபாதத் எது? ........ 45
9. திரு குர்ஆன் விளைவிக்கும் மாற்றம் ........ 48
10. அச்சமூட்டுவோருடன் அமருங்கள் ........ 53
11. சிலை வணக்கத்தின் தோற்றம் ........ 57
12. மறுமைக்காக வாழ்ந்தவர்கள் ........ 61
13. உன்னை மறந்து விடாதே ........ 65
14. துன்யாதாரியின் முடிவு ........ 67
15. கெடுக்கும் துன்யா ........ 70
16. சான்றோரின் தயக்கம்! ........ 75
17. யாசிப்பவரை விரட்டாதீர்! ........ 79
18. உத்தமர்களின் வாழ்வும் உலகத்தார்களின் நிலையும் ........ 84
19. உண்மையான கல்வியாளர் ........ 89
20. சகித்துக்கொள்! உனது இறைவன் பால் திரும்பு! ........ 94

21. அர்ப்பணிப்பு ........ 100
22. தன்னடக்கம் ........ 105
23. கல்வியே சிறந்தது ........ 109
24. எளிமையான வாழ்வு ........ 113
25. பிற கடமைகளை மறக்காதே! ........ 117
26. விளம்பரம் வேண்டாம்! ........ 121
27. ரஹ்மானைப் புகழாமல் இருக்க முடியுமா? ........ 124
28. மறைக்கப்பட்ட அமலில்தான்... ........ 127
29. ஈடுகட்ட முடியாத இழப்பு ........ 130
30. என்னவென்று சொல்வேன் என் நிலையை! ........ 134
31. இறைநம்பிக்கையாளர் எப்படி இருப்பார்? ........ 140
32. திவாலானவன் ........ 144
33. உன் இறையச்சத்தை பகட்டாக்காதே! ........ 148
34. செல்வத்தை பயந்த சான்றோர் ........ 150
35. கண்ணியம் வேண்டுமா? ........ 156
36. மமதையும் வேண்டாம்! மனக்கவலையும் வேண்டாம்! ...... 160
37. பெற்றோரைப் பேணுவோம்... ........ 165
38. இரவு வணங்குவதற்காக... ........ 171
39. எது ஈமான்? ........ 176
40. எது நன்மை தரக்கூடியது? ........ 182

# பதிப்புரை

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

நமது சான்றோர் நமக்கு சிறந்த முன்மாதிரி ஆவார்கள். அவர்கள் தங்கள் வாழ்வை அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டிலும் மார்க்கப் பணிகளிலும் பிற மக்களுக்கு நன்மைகளை எடுத்துச் சொல்வதிலும் அவர்களை தீமைகளிலிருந்து தடுப்பதிலும் கழித்தனர். அல்லாஹ்விற்காகவே வாழ்ந்தனர். உலக மோகத்தை வெறுத்தனர். உலக இன்பத்தைத் துறந்தனர். எப்போதும் மறுமையை முன்னிறுத்தினர்.

இப்படிப்பட்ட நல்லோரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களின் உபதேசங்களையும் நபிமொழி நூல்கள் பலவற்றில் நாம் பார்ப்பது போன்று ‘ஆசார்’ آثار என்று குறிப்பிட்டு தனி நூல்களிலும் அவற்றை நாம் பார்க்கலாம்.

உள்ளத்தை மறுமை சிந்தனையிலும் உலக பற்றின்மையிலும் பண்படுத்துவதற்காக **‘الزهد’** ‘அஸ் ஸுஹ்து’ (உலக பற்றின்மை) என்று தலைப்பிட்டு பல நூல்களை நமது சான்றோர் எழுதியுள்ளனர். அவற்றில் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ அவர்கள் எழுதிய “அஸ்ஸுஹ்து” என்ற நூல் பிரபலமான ஒன்றாகும்.

அவர்களின் இந்நூலில் முன்னோர் பலரின் கூற்றுகள் எழுதப்பட்டுள்ளன. அந்த வரிசையில் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களின் பொன்மொழிகள் பலவற்றை இமாம் அஹ்மது ﵀ அவர்கள் அதிகம் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றில் ஒவ்வொன்றும் குர்ஆன், ஹதீஸின் ஆழ்ந்த தத்துவங்களாக விளங்குகின்றன; உள்ளத்தை பண்படுத்துகின்றன; ஈமானை அதிகப்படுத்துகின்றன; முன்னோரின் தியாக வாழ்க்கையை நமக்கு நினைவூட்டுகின்றன; மறுமையின் பக்கம் நமது கவனத்தைத் திருப்புகின்றன; உலக

மோகத்தை நமது உள்ளங்களை விட்டும் சுத்தப்படுத்துகின்றன. அல்லாஹ்வின் பக்கம் நமது ஆசையையும் ஆர்வத்தையும் அதிகப்படுத்துகின்றன.

இமாம் ஹசன் பஸரியை ﵀ பொறுத்தவரை எல்லாத் தரப்பு அறிஞர்களும் அவர்களை மதிப்பார்கள். தஃப்சீர் (குர்ஆன் விரிவுரை), ஹதீஸ் (நபிமொழி), ஃபிக்ஹு (மார்க்கச் சட்டம்), உசூல் (சட்ட அடிப்படைகள்), தாரீக் (வரலாறு), நஹ்வு (இலக்கணம்), பலாகா (இலக்கியம்), ஷிஅர் (கவிதை) என பல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒரு மாபெரும் அறிஞர் ஆவார் அவர்.

இமாம் அவர்கள் நபித்தோழர்களிடம் கல்வி படித்தவர். அன்னை உம்மு ஸலமா ﵂ அவர்களிடம் வளர்ந்தவர்.

இவர்களின் கருத்துக்களும் உபதேசங்களும் நல்லோரிடம் பெரும் மதிப்புமிக்கவை, அறிஞர்களிடம் மிகவும் போற்றப்படுபவை ஆகும்.

இந்த நூலில் இமாம் அஹ்மது ﵀ உடைய **“அஸ்ஸுஹ்து”** என்ற நூலில் பதிவு செய்யப்பட்ட இமாம் ஹசன் பஸரியின் ﵀ கூற்றுகளில் நாற்பதையும் அவற்றின் விளக்கங்களையும் பார்ப்போம், இன் ஷா அல்லாஹ்.

இந்நூலுக்கு சான்றோர் பாடசாலை என்று பெயரிட்டோம்.

இந்நூலை அல்லாஹ் ஏற்பானாக! இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் காலங்காலமாக பயன்பெறும்படி செய்வானாக!! ஆமீன்.

அவற்றின் மூலம் படிப்பினை பெற்று நாமும் சீர்திருந்துவதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!

**அ. உமர் ஷரீஃப்**
குர்ஆன், சுன்னா பணியாளர்

# நுழையும் முன்...

நமது மார்க்கத்தில் குர்ஆன், சுன்னாவிலிருந்து அதிகமான விஷயங்களை நாம் படிக்கின்றோம். ஈமான், தக்வா, ஃபிக்ஹ் இன்னும் இதுபோன்ற பல கல்விகளைக் கற்கின்றோம். ஆனால் நாம் படித்த, கேட்ட விஷயங்களிலிருந்து சிறிதளவே பின்பற்றுகின்றோம். ஆர்வத்துடன் அதிகமான விஷயங்களை படிக்கின்ற, கேட்கின்ற நாம் அதை பின்பற்றுவதில் மிகவும் அலட்சியம் செய்கின்றோம்.

நாம் பின்பற்ற முடியாத விஷயங்களை அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு கற்றுத்தரவில்லை. அப்படியென்றால் குறை நம்மிடம்தான் இருக்கிறது.

ஏனெனில், அந்த விஷயங்களை தமது வாழ்க்கையில் முழுமையாகப் பின்பற்றி நடந்தவர்களை நாம் முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளவில்லை. அப்படிப்பட்ட நல்லவர்களுடன் நாம் வாழவும் இல்லை.

ஒவ்வொன்றுக்கும் ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறது. ஒரு விஷயத்தை சொல்லிப் புரியவைப்பதைவிட செய்துகாட்டி புரியவைப்பது மிக இலகுவானதாகும்.

கண்ணியமிக்க ஸஹாபாக்களுக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்களின் புறத்திலிருந்து சொல்வழியான வழிகாட்டுதல், செயல்வழியான வழிகாட்டுதல் இரண்டும் ஒரு சேரக்கிடைத்தன.

எனவே, மார்க்கத்தை நூறு சதவிகிதம் பின்பற்றுவது அந்த நபித் தோழர்களுக்கு மிக எளிதாக இருந்தது.

அதன் பிறகு, கண்ணியத்திற்குரிய தாபியீன்களுக்கு ஸஹாபாக்கள் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். எதை ஸஹாபாக்களிடமிருந்து

சொல்வழியாக தாபியீன்கள் கேட்டார்களோ அதை ஸஹாபாக்களிடம் செயல் வடிவிலும் பார்த்தார்கள். எனவே, தங்கள் வாழ்க்கையில் மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்றி நடப்பது தாபியீன்களுக்கு மிக எளிதாக இருந்தது.

அதன் பிறகு காலங்கள் செல்லச் செல்ல மார்க்கத்தை சொல்பவர்கள் அவர்களுடைய வாழ்க்கையில் அதன் படி செயல்படுவது குறைந்து கொண்டே வர, அவர்களுடைய சொற்களைக் கேட்கின்ற மக்களிடத்திலும் அதை பின்பற்றி வாழக்கூடிய உறுதியும் உற்சாகமும் குறைந்து கொண்டே வந்தது.

எனவேதான், "நமது சிறப்பிற்குரிய முன்னோரைப் பற்றி அவர்கள் இந்த தீனின்படி எப்படி வாழ்ந்தார்கள்; அல்லாஹ்வையும் மறுமையையும் எப்படி புரிந்துணர்ந்தார்கள் என்பதை அதிகமாக நாம் படிக்கும்போதும் பேசும்போதும் கண்டிப்பாக இந்த குர்ஆனும் சுன்னாவும் பின்பற்றப்படுவதற்கு மிக இலகுவானதே, நாமும் அதை பின்பற்ற முடியும், நமக்கும் இந்த மார்க்கம் மிக எளிதானதுதான் என்ற உணர்வு நமக்குள் வரும். அத்துடன் அவர்களைப் போன்று நாமும் முடிந்தளவு நமது வாழ்க்கையை மார்க்கத்திற்கு ஏற்ப மாற்றுவதும் இலகுவாக இருக்கும்.

இன்று நமக்கும் அந்த சிறப்பிற்குரிய முன்னோர்களுக்கும் இடையில் ஒரு பெரும் இடைவெளி இருக்கின்றது.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!

நாம் அன்றாடம் செய்தித் தாள்களைப் படிப்பதற்கும் அல்லது செய்திகளைக் கேட்பதற்கும் அல்லது வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கும் கேட்பதற்கும் எந்த அளவு நேரங்களை ஒதுக்குகின்றோம்!

ஆனால், நமது சிறந்த முன்னோர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு நாம் இதுவரை எவ்வளவு நேரத்தை செலவழித்து இருக்கின்றோம்.

எத்தனை ஸஹாபாக்களைப் பற்றி, எத்தனை தாபியீன்களைப் பற்றி, எத்தனை தபவுத் தாபியீன்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என நம்மிடம் கேட்கப்பட்டால் நாம் என்ன பதில் கூறமுடியும்?

அதிகமான நல்ல கல்விகளையும் நமது சான்றோரின் வரலாறு களையும் கொண்டு நமது அறிவை நிரப்புவதற்குப் பதிலாக குப்பைக் கூலங்களையும் அற்ப உலக விஷயங்களையும் கொண்டுதான் நமது சிந்தனைகளை நிரப்பி இருக்கின்றோம். அதன் காரணத்தினால்தான் இந்த மார்க்கம் நமது உள்ளத்தில் இறங்காமல் இருக்கிறது.

நல்லவர்களைப் பற்றிய அறிவு, சான்றோர்களைப் பற்றிய சிந்தனை நமது உள்ளத்தில் இருந்திருக்குமேயானால் குர்ஆனின் வசனங்கள் நமக்கு ஓதிக் காட்டப்படும்போது நபி ﷺ அவர்களின் பொன்மொழிகள் நமக்கு சொல்லிக் காட்டப்படும்போது அது நமது உள்ளத்தை பண்படுத்தியிருக்கும்; நமது வாழ்க்கையை மாற்றியிருக்கும்.

ஆனால், நாம் நமது உள்ளத்தில் வைத்திருப்பதோ அல்லாஹ்வின் எதிரிகளை; பாவிகளை; அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர்களை அல்லாஹ்வின் மார்க்கத்தை விட்டு வெகு தூரம் விலகியவர்களைத் தான். அவர்களைப் பற்றி நாம் அறிந்திருப்பது நல்லவர்களைப் பற்றி நாம் அறிந்திருப்பதைவிட அதிகமாக இருக்கிறது.

நல்லவர்களைப் பற்றிய அறிவும் அவர்களின் வரலாறுகளைப் படிக்கும்போது நமக்குள் ஏற்படக்கூடிய நல்ல உணர்வும் அதிகமாகும்போதுதான் குர்ஆன், ஹதீஸ்கள் நமக்குள் நல்ல மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் உண்டாக்கும், எப்படி உழப்பட்ட விளைநிலத்தில் பெய்யக்கூடிய மழை நல்ல விளைச்சலை உண்டாக்குகிறதோ அதுபோன்று...

நல்லவர்களைப் பற்றிக் கேட்கும்போதும் அவர்களின் வரலாறுகளைப் படிக்கும்போதும் அவர்களில் ஒருவரைப் போன்று நாமும் ஆகவேண்டுமே என்ற நல்ல உணர்வு நமக்குள் ஏற்படும்.

அதன் பிறகு, திரு குர்ஆனை நாம் ஓதினால், ஹதீஸ்களை படித்தால்

அவை உள்ளங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும். அந்த மாற்றங்கள் செயல் வடிவத்திலும் வரும்.

எனவே, இன்றைய காலகட்டத்தில் அந்த நல்லவர்களான சான்றோர்களைப் பற்றி நாம் அதிகம் அதிகம் தெரிந்து கொள்வது மிக அவசியம்.

அந்த வரிசையில் சிறந்த நல்லோர்களில் ஒருவரான, எல்லோராலும் அறியப்பட்ட மார்க்க மேதையான இமாம் ஹசன் அல்பஸரி ﵀ அவர்களைப் பற்றி நாம் படிக்க இருக்கின்றோம்.

இமாம் அவர்கள் நபித்தோழர்களின் காலத்தில் அதாவது கலீஃபா உமர் ﵁ அவர்களின் ஆட்சியின் இறுதி காலத்தில் (ஆட்சியின் முடிவு இரண்டாண்டு காலம் இருக்கும் நிலையில்) பிறந்த ஓர் அறிஞர்.

இவருடைய தந்தை இராக் உடைய பகுதியிலிருந்து அடிமையாக மதினாவுக்கு கொண்டு வரப்பட்டவர்.

அவர் மதினாவில் ஓர் அன்சாரி குலப் பெண்ணைத் திருமணம் செய்கிறார். அந்த இருவருக்கும் பிறந்தவர்தான் இமாம் ஹசன் அல்பஸரி ﵀ ஆவார்.

இமாம் அவர்களின் தாயார் அன்னை உம்மு ஸலமா ﵅ அவர்களிடம் பணிப்பெண்ணாக இருந்தார்கள். பல நேரம் அந்தத் தாய் தன் எஜமானியின் வேலை நிமித்தமாக வெளியே செல்லும்போது கைக்குழந்தையான இமாம் அவர்கள் அழுவார்கள். அந்த நேரத்தில் அன்னை உம்மு ஸலமா ﵅ அவர்கள் தமது மடியைக் கொடுத்து அக்குழந்தையின் அழுகையை நிறுத்துவார்கள்.

சில சமயம், அன்னை உம்மு ஸலமா ﵅ அவர்கள் இமாம் அவர்களை மூத்த சஹாபாக்களிடம் பணிவிடைக்காக அனுப்பி வைப்பார்கள். அப்போது அந்த மூத்த ஸஹாபிகள் இமாம் அவர்களுக்காக துஆ செய்வார்கள். கலீஃபா உமர் ﵁ அவர்களின் நாவினாலும் இமாமவர்கள் துஆவைப் பெற்றார்கள்.

ஒரு நாள் பணிவிடை செய்து கொண்டிருந்த சிறிய குழந்தையான ஹஸன் பஸரியைப் பார்த்து, உமர் ﷺ அவர்கள், யா அல்லாஹ்! இவருக்கு கல்வி ஞானத்தை வழங்குவாயாக! மக்களிடத்தில் இவரை விருப்பமானவராக ஆக்குவாயாக! என துஆ செய்வார்கள்.

கலீஃபா உமர் ﷺ அவர்களின் இந்தப் பிரார்த்தனை இமாம் அவர்களின் வாழ்க்கையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திய தெனில், பிற்காலத்தில் மார்க்க அறிஞர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாகத் திகழும் அளவிற்கு அல்லாஹு தஆலா இவருடைய விஷயத்தில் அந்த பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான்.

இவ்வாறு, இமாம் அவர்கள் அதிகமாக ஸஹாபாக்களின் அரவணைப் பிலேயே வாழ்ந்திருக்கிறார்கள். வாலிபத்தின் ஒரு பெரும் பகுதியை ஜிஹாதில் கழித்தார்கள். அதன் பிறகுதான் மார்க்கக் கல்வியைக் கற்பதிலும் அதைத் தேடுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டார்கள்.

இவர்களுடைய காலத்தில் மார்க்கம் சம்பந்தமான அனைத்து விஷயங்களிலும் இவர்களுக்கு நிகராக வேறு யாருமில்லை என்று அன்றைய அறிஞர்களால் போற்றப்படக்கூடிய அளவிற்கும் மேலும் இவர்களிடத்தில் மாணவராகச் சேர்ந்து கல்வி கற்பதை அன்றைய அறிஞர்கள் விரும்பக்கூடிய அளவிற்கும் அல்லாஹு தஆலா இவர்களை உயர்த்தினான்.

கண்ணியத்திற்குரிய ஸஹாபாக்களுக்கு இவர்கள் ஆற்றிய பணி விடையும் ஸஹாபாக்கள் இவர்களுக்கு செய்த துஆவும் இவர்களை இந்த அந்தஸ்திற்கு உயர்த்தியது.

இவர்களின் கல்வி ஞானத்தையும் இறையச்சத்தையும் மறுமை பயத்தையும் பற்றற்ற வாழ்க்கையையும் அன்றைய மார்க்க அறிஞர்களும் மன்னர்களும் பாராட்டிக் கூறியதை வரலாற்று நூல்களில் நாம் காண முடிகிறது.

இமாம் முஹம்மது இப்னு ஸஅத் ﵀ கூறுகிறார்: "இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் அனைத்து கலைகளையும் கற்று நன்கு தேர்ச்சி பெற்ற ஓர் அறிஞராகவும் மிக உயர்ந்தவராகவும் மார்க்க சட்டத் துறையின் வல்லுநராகவும் மிக அழகிய தோற்றமுடையவராகவும் இருந்தார்."

தாபியீன்களில் பலர் கூறுகிறார்கள்: "நாங்கள் நபித்தோழர்களுக்கு இணையாக இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களைத் தவிர வேறு ஒருவரையும் பார்த்ததில்லை."

தாபியீன்களில் மிகப்பெரும் கல்விமானாகிய அபூ கதாதா ﵀ அவர்கள் சொல்கிறார்கள்: "மக்களே! இந்த அறிஞரை நீங்கள் விட்டுவிடாதீர்கள். இந்த அறிஞரோடு எப்போதும் இருங்கள். இவரை விட வேறு எவரையும் உமர் ﵁ அவர்களின் அறிவுக்கு நிகராக இருப்பதை நான் பார்த்ததில்லை."

நபி ﷺ அவர்களின் பணியாளரான அனஸ் இப்னு மாலிக் ﵁ அவர்களின் மிக விசேஷமான மாணவர்தான் இமாம் அவர்கள்.

அனஸ் இப்னு மாலிக் அவர்களின் இறுதி காலத்தில் மார்க்க விஷயமாக சந்தேகம் கேட்டு அவர்களிடத்தில் மக்கள் வந்தால் "நீங்கள் ஹசன் பஸரியிடம் சென்று கேளுங்கள், அவர் நிறைய விஷயங்களை மனனம் செய்து வைத்திருக்கிறார், வயது முதிர்வின் காரணமாக பல விஷயங்களை நான் மறந்திருக்கலாம். எனவே நீங்கள் அவரிடத்தில் செல்லுங்கள்" என்று கூறுவார்கள்.

தாபியீன்களில் ஒருவர் சொல்கிறார்: "இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் மறுமையைப் பற்றி எங்களிடம் பேசினால் அந்த மறுமையை நேராகப் பார்த்து வந்தவரைப் போன்று அவருடைய பேச்சு இருக்கும்."

இன்று, பேசுபவர்களுக்கும் அந்த உணர்வு வருவதில்லை, கேட்பவர்களுக்கும் அதைப் பற்றிய பயம் ஏற்படுவதில்லை.

ஆனால், இமாம் அவர்கள் மறுமையைப் பற்றிப் பேசும்போது அங்கே இருக்கக்கூடியவர்களின் உள்ளங்கள் அச்சத்தால் நடுங்கியதை வரலாறுகளில் படிக்கின்றோம்.

தாபியீன்களில் இமாம் ஸயீது இப்னு முஸய்யிப், உர்வா, காசிம் ﵏ போன்றோர் மிகப்பெரிய அறிஞர்களாவர். இமாம் அவர்களைப் பற்றி இந்த தாபியீன்கள் கூறுகின்றார்கள்: "இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களைப் போன்று ஒருவரை நாங்கள் பார்த்ததில்லை. இவர் நபித்தோழர்களின் காலத்தில் வாழ்ந்திருந்து இவருடைய வயதும் நபித்தோழர்களுடைய வயதும் சமமாக இருந்திருக்குமானால் கல்வி விஷயத்தில் ஹசன் பஸரியை முந்தி அவர்கள் பேசியிருக்க மாட்டார்கள்."

இராக் உடைய கவர்னர்களில் ஒருவர் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களைப் பற்றி அவருடைய மாணவர்களில் ஒருவரிடம் பஸராவைச் சேர்ந்த இமாம் ஹசன் பஸரி அவர்களின் சிறப்பைப் பற்றி கூறுங்களேன் என்றார். அம்மாணவர், அமீர் அவர்களே! அல்லாஹ் உங்களை சீர்திருத்தம் செய்யட்டும். கண்டிப்பாக நான் அவரைப் பற்றி சொல்கின்றேன்.

"நான் அவருக்கு மிக நெருக்கமான மாணவர்களில் ஒருவன். அவருடைய சபையில் எப்போதும் அமர்ந்திருப்பேன். மற்றவர்களை விட அவரை நான் நன்கு அறிந்தவன். அவருடைய வெளிரங்கப் பேச்சு எப்படி இருக்குமோ அப்படித்தான் அவரின் உள்ரங்கமும் இருந்தது. அவருடைய சொல் எப்படியோ அதன்படிதான் அவரின் செயல்கள் இருக்கும். ஒரு விஷயத்தை மிகத் தெளிவாக, துள்ளியமாக செய்து முடிப்பவர். மக்களுக்கு அவர் ஒரு விஷயத்தை ஏவினால் மக்களைவிட அவர்தான் அந்த விஷயத்தை விரைந்து செயல்படுத்துபவராக இருப்பார். மக்களை ஒரு விஷயத்திலிருந்து தடுத்தால் மக்களைவிட அவர்தான் அந்த விஷயத்தைவிட்டு முதலில் விலகுபவராக இருப்பார். மக்களைவிட்டு எப்போதும் ஒதுங்கி, அவர்களின் பக்கம் தேவையாகாமல் இருப்பார். ஆனால், மக்களோ இமாம் அவர்களின் பக்கம் தேவையுள்ளவர்களாக இருந்தனர்."

இவ்வாறு அந்த மாணவர் கூறியபோது, போதும்! போதும்! இத்தகைய ஒரு மனிதர் ஒரு கூட்டத்திலிருக்கும்போது அந்தக் கூட்டத்தினர் வழிகெட மாட்டார்கள் என்று அமீர் கூறினார்.

இமாம் அஸ்வத் ﵀ அவர்கள் கூறுகின்றார்கள்: “ஒரு மனிதர் துஆ செய்ததை நாங்கள் பார்த்தோம். அல்லாஹ்வே! ஹசன் பஸரி உடைய உலகப் பற்றின்மையை எனக்குத் தா!

அல்லாஹ்வே! முஹம்மது இப்னு சிரீன் உடைய பேணுதலை எனக்குத் தா!

அல்லாஹ்வே! ஆமீர் இப்னு அப்து கைஸ் உடைய இபாதத்தை எனக்குத் தா!

அல்லாஹ்வே! ஸயீது இப்னு முஸய்யிப் உடைய அறிவு ஞானத்தை எனக்குத் தா!

அல்லாஹ்வே! முதர்ரிப் இப்னு சிஹ்ஹி உடைய இறை நினைவை எனக்குத் தா!

இவ்வாறு அந்த மனிதர் கேட்டபோது இமாம் அஸ்வதும் அவருடன் இருந்தவர்களும் கூறினார்கள்: “இவருடைய இந்த துஆவில் எந்தெந்த அறிஞர்களுடன் என்னென்ன சிறப்புகளைப் பற்றி இணைத்துச் சொன்னாரோ அந்த எல்லா சிறப்பு அம்சங்களும் இமாம் ஹசன் பஸரியிடம் முழுமையாக இருப்பதை நாங்கள் பார்த்தோம்.”

இமாம் அவர்களின் மாணவர்களில் ஒருவர் சொல்கிறார்: “இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் ஒவ்வொரு மாதமும் அய்யாமுல் பீழ்” என்று சொல்லக்கூடிய மூன்று நாட்களிலும் இஸ்லாமிய மாதங்களில் அல்அஷ்அருல் ஹுரூம் என்று சொல்லக்கூடிய புனித நான்கு மாதங்களிலும் ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் நோன்பு நோற்பதை வழமையாக்கிக் கொண்டிருந்தார்கள்.

இதிலிருந்து, இமாம் அவர்கள் தமது வாழ்க்கையில் பெரும் பகுதி நோன்பு நோற்றிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

இமாம் ஹசன் பஸரியைப் பற்றி அறிஞர் அல்கமா ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: “அதிகமாக கவலையில் இருந்த ஒரு மனிதரை நாங்கள் ஹசன் பஸரியைவிட வேறு எவரையும் பார்த்ததில்லை. அவரை நாங்கள் எப்போது பார்த்தாலும் ஏதோ பெரிய முஸீபத்திலிருந்து இப்போதுதான் திரும்பி வந்தவரைப் போன்று அவருடைய கவலை முகத்தில் தெரியும்.

எனவேதான் அக்காலத்தில் இவர்களின் சபையில் அறிஞர்களும் மன்னர்களும் மந்திரிகளும் அமர்ந்து கல்வி பயின்று இருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சான்றோரான இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களுடைய அறிவுரைகளையும் விளக்கவுரைகளையும் ஞானக் கருத்துக்களையும் இனி வரக்கூடிய பக்கங்களில் நாம் படிப்போம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் அந்த சான்றோர்களின் ஞானத்தையும் கல்வியையும் விளங்கச் செய்வானாக!

அதன்படி அமல்செய்யக்கூடிய நேர்வழியையும் நற்பாக்கியத்தையும் தந்தருள்வானாக!

ஆமீன்.

بسم الله الرحمن الرحيم

## أَخْبَارُ الْحَسَنِ بْنِ أَبِي الْحَسَنِ رَحِمَهُ اللهُ تَعَالى

## இமாம் ஹசன் இப்னு அபுல் ஹசன் رحمه الله அவர்களின் கூற்றுகள்.

## விடிந்தால் மறுமை...

١٤٤٥ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ سَابِقٍ حَدَّثَنَا مَالِكُ بْنُ مِغْوَلٍ عَنْ حُمَيْدٍ قَالَ بَيْنَمَا الْحَسَنُ فِي يَوْمٍ مِنْ رَجَبٍ فِي الْمَسْجِدِ وَهُوَ يَمُصُّ مَاءً وَيَمُجُّهُ تَنَفَّسَ تَنَفُّسًا شَدِيدًا ثُمَّ بَكَى حَتَّى رُعِدَتْ مَنْكِبَاهُ ثُمَّ قَالَ لَوْ أَنَّ بِالْقُلُوبِ حَيَاةً لَوْ أَنَّ بِالْقُلُوبِ صَلَاحًا لَأَبْكَيْتُكُمْ مِنْ لَيْلَةٍ صَبِيحَتُهَا يَوْمُ الْقِيَامَةِ إِنَّ لَيْلَةً تُمْخَضُ عَنْ صَبِيحَةِ يَوْمِ الْقِيَامَةِ مَا سَمِعَ الْخَلَائِقُ بِيَوْمٍ قَطُّ أَكْثَرَ فِيهِ عَوْرَةً بَادِيَةً وَلَا عَيْنٌ بَاكِيَةٌ مِنْ يَوْمِ الْقِيَامَةِ .

**1445.** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் ஒரு நாள் ரஜப் மாதத்தில் மஸ்ஜிதில் இருந்தபோது தண்ணீரை உறிஞ்சி துப்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெரு மூச்சு விட்டார்கள், பிறகு, அழுதார்கள். அதனால், அவர்களுடைய இரு புஜங்களும் குலுங்கின. பிறகு, கூறினார்கள் "(நமது) உள்ளங்களில் உயிர் இருந்திருந்தால், (நமது) உள்ளங்களில் சீர்திருத்தமும் இருந்திருந்தால் ஓர் இரவை நினைவு கூர்ந்து உங்களை நான் அழவைத்திருப்பேன்."

அந்நாளின் விடிகாலை மறுமை நாளாகும். நிச்சயமாக விடிந்தால் மறுமை நாளாக அமைகின்ற அந்த ஓர் இரவு, அந்த மறுமை நாளை விட அதிகமாக மறைவிடங்கள் வெளிப்படுகின்ற, கண்கள் அழுகின்ற ஒரு நாளை படைப்பினங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள்.

**கருத்து:**

இமாம் அவர்கள் அதிகம் மறுமையைப் பயப்படுபவர்களாக, அதை

அதிகம் நினைவு கூர்பவர்களாக, அதைப் பற்றி மக்களை அதிகம் எச்சரிப்பவர்களாக இருந்தார்கள்.

இதுதான் உண்மையான மார்க்க அறிஞர் செய்யவேண்டிய கடமை யாகும். இதுதான் நல்ல கல்விமான்களுடைய அடையாளமாகும்.

நல்ல கல்விமான்கள் நபிமார்களின் வாரிசுகள் ஆவார்கள். நபிமார்கள் மக்களுக்கு மறுமையைப் பற்றித்தான் எச்சரித்தார்கள். மாறிவரும் துன்யாவைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டது இல்லை. அது பற்றி மக்களை பயமுறுத்தியதுமில்லை.

மறுமையின் பயம் உள்ளங்களில் வரவேண்டுமென்றால் உள்ளம் சுத்தமாக இருக்கவேண்டும். உள்ளத்தில் இறைநம்பிக்கை என்ற உயிரும் இறையச்சம் என்ற சீர்திருத்தமும் இருந்தால்தான் நல்லுபதேசம் பலனளிக்கும். இல்லையென்றால் பாறையில் பெய்கின்ற மழையைப் போன்றுதான் நல்லுபதேசம் பயனற்றுப் போகும்.

அந்த மறுமையில் மக்கள் ஆடையில்லாமல் எழுப்பப்படுவார்கள். அன்று அங்கு அழுவதைப் போன்று வேறு எங்கும் அழுதிருக்க மாட்டார்கள். அங்கு மக்கள் அழுகின்ற அழுகையின் கண்ணீரில் கப்பலே மிதக்கும். அந்த அளவு அழுவார்கள்.

ஒவ்வொரு நாள் இரவில் தூங்கும் போதும், அன்று விடிந்தால் மறுமை நிகழ்ந்து விடுமோ என்ற பயத்தில்தான் ஒரு முஃமின் இருக்க வேண்டும்.

ஒருவருக்கு ஏற்படும் மரணமும் அவருக்கு ஒரு மறுமைதான். ஒருவன் மரணித்து விட்டால் அவனுடைய மறுமை அவனுக்கு நிகழ்ந்து விடுகிறது. அவனுடைய சொர்க்க, நரகம் அவனுக்கு காண்பிக்கப்படுகிறது. அவனுடைய செயல்கள் பற்றி அவனிடம் விசாரணை செய்யப்படுகிறது.

அல்லாஹ் நம் அனைவரையும் மறுமையின் துன்பங்கள், துயரங்களிலிருந்து பாதுகாப்பானாக!

அழக்கூடிய கண்கள் மறுமையை நினைத்து அழட்டும்! தனது பாவங்களை நினைத்து அழட்டும்! அல்லாஹ்விற்கு முன் நிற்கின்ற அந்த நாளின் திடுக்கத்தை நினைத்து அழட்டும்! இறுதி இல்லம், நிலையான தங்குமிடம் எது என்று நினைத்து அழட்டும்! ஏடுகள் எந்த கரத்தில் கொடுக்கப்படும் என்று நினைத்து அழட்டும்!

நன்மையின் தட்டுகள் கனக்குமா தீமைகள் தட்டு கனக்குமா என்று நினைத்து அழட்டும்! வலதுபக்கம் திருப்பப்படுவோமா அல்லது இடது பக்கமா என்பதை எண்ணி அழட்டும்!

யா நஃப்ஸீ யா நஃப்ஸீ என்று மக்கள் அல்லல்படும் அந்தக் காட்சியை நினைத்து அழட்டும்! தாய், தந்தை, மனைவி, மக்கள், சகோதரன் சகோதரிகளை விட்டு மனிதன் விரண்டு ஓடுகின்ற நாளை நினைத்து அழட்டும்!

குழந்தைகளின் தலை நரைத்துவிடும் நாளை நினைத்து அழட்டும்! உள்ளங்களின் இரகசியங்கள் வெளிப்படும் நாளை நினைத்து அழட்டும்! சிராத் பாலத்தை கடக்கவேண்டிய நிலையை நினைத்து அழட்டும்! இன்னும் ஆயிரக்கணக்கான அமலிகள் உடைய நாளை நினைத்து அழட்டும்!

அதை நினைத்துதான் இமாம் கூறுகிறார்கள், "உயிருள்ள உள்ளத்தை உடைய கண்கள்தான் அழும். சீர்திருத்தம் பெற்ற இதயத்தை உடைய கண்கள்தான் அழும்."

- **அல்லாஹ் நமக்கு அந்த உள்ளத்தை தருவானாக! அழக்கூடிய கண்களை தருவானாக! உள்ளம் இறுகுவதை விட்டும் கண்கள் அழாமல் இருப்பதை விட்டும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!**

ஆமீன்!

• • •

## தீமைகள்தான் மிஞ்சி உள்ளன!

١٤٤٦ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ سَابِقٍ حَدَّثَنَا مَالِكٌ عَنْ عَوْنِ بْنِ جُحَادَةَ عَنِ الْحَسَنِ قَالَ ذَهَبَتِ الْمَعَارِفُ وَبَقِيَتِ الْمَنَاكِرُ وَمَنْ بَقِيَ مِنَ الْمُسْلِمِينَ فَهُوَ مَغْمُومٌ.

**1446.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: “நன்மைகள் சென்று விட்டன, தீமைகள் மிஞ்சிவிட்டன, முஸ்லிம்களில் மீதம் இருப்பவர் கவலையடைந்துள்ளார்.”

**கருத்து:**

இமாம் அவர்கள் ஸஹாபாக்களின் இறுதி காலத்தில் வாழ்ந்தவர்கள். அது போன்று, மூத்த தாபிஈன்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள். இப்படி நல்லவர்கள் பலர் இந்த உலகத்தை விட்டு சென்று கொண்டே இருக்க குழப்பங்களும் அனாச்சாரங்களும் பெருகிக் கொண்டே இருந்தன. இதைக் குறித்து இமாம் அவர்கள் மிகுந்த கவலைப்பட்டார்கள்.

அதைத்தான் இமாம் அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்.

நமது காலத்தில் நடக்கின்ற நன்மைகள் பார்ப்பதற்கு நமது பார்வையில் அதிகமாக தோன்றினாலும் அவை நமது முன்னோரின் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகக் குறைவே.

நமது முன்னோரின் காலத்தில் குழப்பங்கள், அனாச்சாரங்கள் குறைந்தே இருந்தன. நபித்தோழர்கள் நபி ﷺ அவர்களுடன் வாழ்ந்த

காலத்தில் அவர்களது மார்க்கம் பாதுகாப்பாக இருந்தது. அப்போது அனாச்சாரமோ, குழப்பமோ இல்லை. உண்மையும் சத்தியமும் தெளிவாக இருந்தன.

இன்றோ சத்தியமும் அசத்தியமும் ஒன்றோடு ஒன்று கலந்து விட்டது. பொய்யும் உண்மையும் ஒன்றுக்குள் ஒன்று மறைந்து விட்டது.

மக்கள் மன இச்சையை மார்க்கத்தில் நுழைத்து விட்டனர். மார்க்கத்தை அரசியலாக்கி விட்டனர். அரசியலை அராஜகமாக ஆக்கிவிட்டனர். அந்நியர்களின் கலாச்சாரமே அதிகமானவர்களால் விரும்பப்படுகிறது. மாற்றார்களின் கொள்கையும் கோட்பாடும் அதிகமாக மோகம் கொள்ளப்படுகிறது.

ஷைத்தானின் வழிகளில் மக்கள் அதிகம் செல்கின்றனர். அநாகரிகங்கள் நாகரிகமாக மாறிவிட்டன. ஒழுக்கங்கள் பழமை வாதமாகவும் கட்டுப்பாடுகள் அடிமைத்தனமாகவும் பார்க்கப்படுகிறது.

சுன்னத்துகள் மக்களுக்கு அந்நியமாக ஆகிவிட்டன. பித்அத்துகள் மக்களுக்கு நற்செயல்களாக ஆகிவிட்டன.

சுன்னத்துகள் வெறுக்கப்படுகின்றன. பித்அத்துகள் விரும்பப்படு கின்றன. சுன்னத்துகள் புறக்கணிக்கப்படுகின்றன. பித்அத்துகள் வரவேற்கப்படுகின்றன.

சுன்னத்துகள் அசிங்கமாகவும் பித்அத்துகள் அழகாகவும் ஆகிவிட்டன.

இப்படி மாறிவிட்டதை நினைத்துதான் இமாம் அவர்களும் அவர் களைப் போன்ற சான்றோரும் அக்காலத்தில் கவலைப்பட்டனர்.

அவர்களது காலத்திலேயே இந்த நிலை என்றால் நமது காலத்தைப் பற்றி என்ன சொல்வது?!

மார்க்கக் கல்வியும் முன்னோர் வழிமுறையும் உருமாற்றப்பட்டு விட்டன.

நபித்தோழர்களின் வழிமுறைகள் கைவிடப்பட்டுவிட்டன.

பின் தோன்றியவர்களின் புதுமைகள் மார்க்கமாகவும் மார்க்கத்தின் அடையாளச் சின்னமாகவும் மாறிவிட்டன.

சுன்னத்துகளை பின்பற்றுவோர் குழப்பவாதிகளாகவும் பித்அத்து களை செய்வோர் மார்க்கப் பற்றுள்ளவர்களாகவும் பார்க்கப்படு கின்றனர்.

சான்றோர் பாதையில் பயணிப்பவர்கள் பிரிவினைவாதிகளாகவும் கல்வி ஞானமற்ற பின்னோர் பாதையில் பயணிப்போர் தக்வாதாரி களாகவும் அறியப்படுகின்றனர்.

பித்அத்துகள் மீதுள்ள பற்று சுன்னத்துகள் மீது இல்லை.

பித்அத்துகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஃபர்ளுகளுக்கு கொடுக்கப்படுவதில்லை.

பித்அத்துகளை செய்வதில் காட்டப்படும் ஆர்வமும் ஈடுபாடும் கட்டாயக் கடமைகளை செய்வதில் காட்டப்படுவதில்லை.

சுன்னத்துகளையும் ஃபர்ளுகளையும்விட பித்அத்துகள்தான் மார்க்க அடையாளச் சின்னங்களாக காட்சி அளிக்கின்றன.

சுன்னத்துகளை தானும் பேணி, பிறரையும் பேணச் சொல்பவர்கள் பழமைவாதிகள், அடிப்படைவாதிகள், பிற்போக்குவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

சுன்னத்துகளுக்கு எங்கும் எதிர்ப்பு! அனாச்சாரங்களுக்கோ அரசாங்கமே ஆதரவும் பொருளாதார உதவியும் செய்கின்றது.

இதை நினைத்து உண்மையான முஸ்லிம் எப்படி கவலைப்படாமல் இருக்கமுடியும்!?

அல்லாஹ்தான் போதுமானவன்.

- **அல்லாஹ்வே! எங்களை நல்லோர் சென்ற வழியில் செலுத்துவாயாக! தீயோரின் வழியிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக!**
- **சுன்னத்துகளை பாதுகாப்பவர்களாக, பித்அத்துகளை பிடுங்கி எறிபவர்களாக எங்களை ஆக்கு!**

ஆமீன்!

• • •

# முஃமினின் நிலை

١٤٤٧ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا عُبَيْدُ اللهِ بْنُ شُمَيْطٍ حَدَّثَنِي أَبِي قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ إِنَّ الْمُؤْمِنَ يُصْبِحُ حَزِينًا وَيُمْسِي حَزِينًا وَيَنْقَلِبُ بِالْيَقِينِ فِي الْحُزْنِ يَكْفِيهِ مَا يَكْفِي الْعُنَيْزَةَ الْكَفُّ مِنَ التَّمْرِ وَالشَّرْبَةُ مِنَ الْمَاءِ

**1447.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: நிச்சயமாக முஃமின் காலையிலும் கவலையுற்றவராக இருப்பார். மாலையிலும் கவலையுற்றவராக இருப்பார். 'யகீன்' -உறுதியான இறை நம்பிக்கையுடன் கவலையில் புரண்டு கொண்டே இருப்பார். ஆட்டுக் குட்டிக்கு போதுமான அளவு -பேரித்தம் பழத்தில் ஒரு பிடியும், தண்ணீரில் ஒரு மிடறும்- அவருக்குப் போதுமானதாகும்.

**கருத்து:**

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டு வாழ்கின்ற ஒருவர் உலக இன்பங்களில் மனதைப் பறிகொடுத்து விடமாட்டார். உலகத்தின் சுகபோகங்கள் அவரை திசை திருப்பி விடாது. தங்கமோ வெள்ளியோ, பொன்னோ பொருளோ, ஆட்சியோ அதிகாரமோ, இலாபமோ நஷ்டமோ, வெற்றியோ தோல்வியோ, இன்பமோ துன்பமோ, சுகமோ துக்கமோ, எந்த ஒன்றும் அவரை மறுமையின் பாதையிலிருந்து சறுகச் செய்துவிடாது.

மறுமையை முன்வைத்து வாழ்கின்ற முஃமின் உலக இன்பத்திலும்

மகிழ்ச்சியிலும் மனதை எப்படி பறிகொடுப்பார்!? மறுமையின் விசாரணை சாதாரணமானதன்றே! அதை எப்படி அவரால் மறக்க முடியும்!

அல்லாஹ் கூறுகின்றான்:

***(நல்லவர்கள்) தங்கள் இறைவனின் தண்டனையை பயந்துகொண்டே இருப்பார்கள். (அல்குர்ஆன் 70:27)***

***(நல்லவர்கள்) கூறுவார்கள்: நிச்சயமாக நாங்கள் இதற்கு முன்னர் எங்கள் குடும்பத்தில் (உலகத்தில் இருந்தபோது மறுமையை) பயந்தவர்களாக இருந்தோம். (அல்குர்ஆன் 52:26)***

***(நல்லவர்கள்) தாங்கள் செய்கின்ற நன்மைகளை செய்து கொண்டே இருப்பார்கள், அவர்களது உள்ளங்களோ "தாங்கள் தங்கள் இறைவனின் பக்கம் திரும்பச் செல்லக் கூடியவர்கள்" என்று நடுங்கிக் கொண்டே இருக்கும். (அல்குர்ஆன் 23:60)***

***உள்ளங்களும் பார்வைகளும் புரளுகின்ற (மறுமை) நாளை அவர்கள் பயப்படுவார்கள். (அல்குர்ஆன் 24:37)***

முஃமின் மறுமை விஷயத்தில் உறுதியான நம்பிக்கையோடு இருப்பார். யகீன் என்ற பலமான நம்பிக்கை மறுமை விஷயத்தில் அவருடைய உள்ளத்தில் மிக்க வலுவாக இருக்கும்.

மறுமைக்காக வாழ்பவர் இந்த உலகத்தில் உள்ள தனது நிலையைப் பற்றி கவலையே படமாட்டார். உலகத்தை தேடி அலைந்து மறுமையை தொலைத்து விடமாட்டார்.

உலகத்துக்காக மறுமையை இழந்து விடமாட்டார். மறுமைக்காக உலகத்தை தியாகம் செய்வார்.

மறுமையை விற்று உலகத்தை வாங்க மாட்டார்.உலகத்தை துறந்து மறுமையை வாங்க ஆசைப்படுவார்.

ஹலாலான வருமானம், ஹலாலான செல்வம், ஹலாலான வாழ்க்கை அது அற்பமாக, சொற்பமாக இருந்தாலும் அதுவே அவருக்குப் போதுமானதாகும்.

உலக செல்வத்தின் மீது ஆசைப்பட்டு, அதிகமான வசதிகள் மீது மோகம் கொண்டு வழிபாடுகளையும் மார்க்கப் பற்றையும் விட்டு விடமாட்டார்.

இப்படி வாழ்ந்தவர்கள்தான் நபி ﷺ அவர்களும் அவர்களது தோழர்களும் அவர்கள் வழியில் வந்த நல்லவர்களும் رحمهم الله.

இன்று நம்மில் பலர் மறுமையைப் பற்றி எவ்வித கவலையும் இன்றி இருக்கின்றனர்.

எப்போதும் உலகக் கவலைகளே அவர்களை ஆட்டிப் படைக்கின்றன.

சதா இவ்வுலகத்திலேயே தங்கிவிடுவதைப் போன்று இவ்வுலகமே கதி என்று இருக்கின்றனர். தங்கள் குடும்பத்தில் பலர் மரணிப்பதை பார்த்தாலும் தங்களுக்கு மரணமே வராது என்பதைப் போல் அவர்கள் அலட்சியமாக வாழ்கின்றனர்.

வணக்க வழிபாடுகளில் நாட்டம் இல்லாமல், தான தர்மங்கள் ஏதும் செய்யாமல், உலக இன்பங்களில் மூழ்கி, சொத்து சுகங்களை சேர்ப்பதில் ஈடுபட்டு, வெளிப்பகட்டு வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, அல்லல்பட்டு அயராது உழைத்து திடீர் மரணத்தை சந்தித்து எந்தத் தயாரிப்புமே இல்லாமல் திரும்பி வரமுடியாத, பணமும் பிள்ளைகளும் பலன்தராத ஒரு உலகத்திற்கு வெறும் கையாக, பிறந்த மேனியுடன் சென்றுவிடுகின்றனர்.

இங்கு கவலை இன்றி இருந்தனர். அங்கோ என்றும் கவலையுடன் இருக்கப்போகின்றனர்.

இங்கு சிறிது காலம் மகிழ்ச்சியாக இருந்தனர். அங்கு நிரந்தரமாக முடிவில்லாத காலம் துக்கத்தில் மூழ்கப் போகின்றனர்.

இங்கு அற்ப இன்பங்களைத் தேடி அலைந்தனர். அங்கு வர்ணிக்க முடியாத துன்பத்தை சந்திக்க போகின்றனர்.

ஒரு முஃமின் -இறைவிசுவாசி- இங்கு சிறிது காலம் கவலையுடன், பயத்துடன், சிரமத்துடன், இன்னல்களை சகித்து, இறைவழிபாட்டிலும் நல்லறங்களிலும் வாழ்ந்தார். ஆகவே, அங்கு முடிவில்லாத காலம் சுகமாக, மகிழ்ச்சியாக, இன்பமாக வாழப்போகிறார்.

இவரல்லவா புத்திசாலி! இவரல்லவா வெற்றியாளர்!

- **அல்லாஹ்வே! நல்லவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மறுமைக்காக வாழ்கின்ற நல்லோரில் எங்களையும் ஆக்குவாயாக!**
- **நஷ்டமடைந்தவர்களில் எங்களை ஆக்கிவிடாதே!**

ஆமீன்!

• • •

# விசித்திரமான மரணம்!

١٤٤٨ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ عِيسَى الْيَشْكُرِيُّ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ إِنَّ الْمَوْتَ فَضَحَ الدُّنْيَا فَلَمْ يَتْرُكْ لِذِي لُبٍّ فَرَحًا

**1448.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: நிச்சயமாக மரணம் உலகத்தை இழிவுபடுத்தி விட்டது. அறிவுள்ள ஒருவருக்கு அது மகிழ்ச்சியை விட்டுவைக்கவில்லை.

**கருத்து:**

ஆம், மரணம் அதைப் போன்று ஒரு பெரிய சோதனை ஏதும் இல்லை. நண்பர்களைப் பிரித்து விடுகிறது. உறவுகளை அறுத்து விடுகிறது. அதிகாரத்தை அழித்து விடுகிறது. அரசனை மண்ணில் தள்ளிவிடுகிறது. மாட மாளிகைகளில் வாழ்ந்தவரை மண்ணறையில் சாய்த்து விடுகிறது. ஜொலிக்கும் மிடுக்கு ஆடைகளை அணிந்தவரை கஃபனுக்குள் கட்டிப்போட்டு விடுகிறது. மென்மையான மேனிகளை புழுக்களுக்கும் பூச்சிகளுக்கும் இரையாக்கி விடுகிறது.

கணவன் மனைவியை, பெற்றோர் பிள்ளைகளை நிரந்தரமாகப் பிரித்து விடுகிறது. சேர்த்த சொத்துகளையும் கட்டிய வீட்டையும் வாங்கிய வாகனத்தையும் தங்கி மகிழ உருவாக்கிய தோட்டம் துரவுகளையும் இனி காண முடியாமல், அனுபவிக்க முடியாமல் மனிதனை புதைகுழிக்குள் சிறைப்படுத்தி விடுகிறது.

மணவறையில் இருந்தவர்களை மண்ணறையில் தள்ளிவிடுகிறது.

தேனிலவு சென்றவர்களை வீடு திரும்பாமல் செய்து விடுகிறது.

விண்வெளியில் பறந்தவர்களை மண்வெளியில் படுக்கவைத்து விடுகிறது.

கப்பலில் உல்லாசம் சென்றவர்களை கரை காணாமல் செய்து விடுகிறது.

இப்படி மரணம் செய்கின்ற விசித்திரங்களோ ஏராளம், ஏராளம்!

இதைவிட உலகில் பெரும் துன்பமோ சோதனையோ வேறு ஏதும் உண்டோ!?

ஆம், அந்த மரணத்திற்குப் பின் ஒரு நன்மையைக் கூட செய்ய முடியாமல் போய்விடுகிறது.

இருண்ட நெருக்கமான வசதியற்ற ஒரு மண் குழியில் படுக்கவைத்து விடுகிறது.

முன்கர் நகீரை சந்திக்க வைத்துவிடுகிறது. சொர்க்க நரகத்தை பார்க்க வைத்து விடுகிறது. தனது மறுமையின் முடிவை அறிய வைத்து விடுகிறது. வெற்றியா தோல்வியா என புரிய வைத்து விடுகிறது.

இப்படிப்பட்ட மரணத்தை தீர்க்கதரிசிகளும் இறைநேசர்களும் பயந்து வாழ்ந்தனர். இந்த மரணம் அந்த நல்லோரின் கண்களை சதா கலங்க வைத்துக் கொண்டு இருந்தது. அவர்களின் உள்ளங்களை உலுக்கிக் கொண்டு இருந்தது.

இந்த மரணம் உலக இன்பங்களையும் சுகங்களையும் விட்டு அவர்களை தூரமாக்கியது.

மரணத்தை நினைத்து நினைத்து ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு மணியும் அல்ல, ஒவ்வொரு நொடியும் அவர்களை நல்ல அமல்களில் வெகு வேகமாய் விரையவைத்தது. படுக்கையிலிருந்து விலாக்களை விலக்கியது. கண்களிலிருந்து தூக்கத்தை கலைத்தது.

அல்லாஹ்வின் பக்கம் அவர்களை விரண்டோட வைத்தது.

தான் மரணிப்போம் என்று அறிந்த ஒருவன் எப்படி இவ்வுலகத்தில் உண்மையான மகிழ்வை எதிர் பார்ப்பான்!? இந்த உலக இன்பங்களில் எவ்வாறு தன் மனதை பறி கொடுப்பான்!?

- **அல்லாஹ்வே! எங்களை இந்த உலக இன்பங்களில் ஏமாற வைத்து விடாதே! எங்களை மறுமையை நினைவுகூறும் மக்களாக ஆக்குவாயாக! மறுமையின் வெற்றியாளர்களில் எங்களையும் ஆக்குவாயாக!**

ஆமீன்!

# ஏன் இந்தக் கவலை?

١٤٤٩ – حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ عِيسَى الْيَشْكُرِيُّ قَالَ مَا رَأَيْتُ أَطْوَلَ حُزْنًا مِنَ الْحَسَنِ وَمَا رَأَيْتُهُ قَطُّ إِلَّا حَسِبْتُهُ حَدِيثَ عَهْدٍ بِمُصِيبَةٍ

**1449.** இப்ராஹிம் இப்னு ஈஸா கூறுகிறார்: "நான் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களை விட நீண்ட நேரம் கவலையில் இருப்பவரை பார்த்ததில்லை. இன்னும் அவரை நான் புதிதாக ஒரு துன்பத்தில் சிக்கியவராக கருதியே தவிர பார்த்ததில்லை."

**கருத்து:**

இமாம் அவர்கள் மறுமைக்காக வாழ்ந்த சான்றோரில் ஒருவர். இவரைப் போன்று இவருடைய காலத்தில் வாழ்ந்த பலரைப் பற்றி இது போன்ற பல செய்திகளை வரலாற்றில் படிக்கிறோம். வாலிபத்தில் பெரிய போர் வீரராக இருந்து அரசாங்கத்தின் பல பொறுப்புகளில் இருந்து பின்னர் மார்க்கக் கல்வியைப் படிப்பதிலும் மறுமையைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் தனது வாழ்நாளைக் கழித்தார்கள்.

உலகத்தைப் பற்றி மக்களுக்கு புரியவைத்தார்கள். மறுமையின் பக்கம் மக்களின் கவனத்தைத் திருப்பினார்கள். கல்வி திறமைகள் எல்லாம் இருந்தும் அரசாங்கப் பதவிகளை எல்லாம் விட்டு விலகி மறுமைக்கான அமல்களை செய்வதில் ஈடுபட்டார்கள்.

மன்னர்களும் மந்திரிகளும் இமாமுக்கு செய்த மரியாதையோ

கொடுத்த மதிப்போ சுப்ஹானல்லாஹ்! மிக மிக அதிகம். ஆனால், அவர்களிடமிருந்து உலக இலாபங்களையோ உலக வஸ்துக்களையோ இமாம் அவர்கள் பெற்றதில்லை.

அவர்கள் இறந்தபோது அவர்களது வீட்டில் செல்வமோ பொருட்களோ ஏதும் இல்லை. ஒரு சாதாரண கயிற்றுக் கட்டிலில் விரிப்பு ஏதும் இல்லாமல் படுத்து இருந்தார்கள்.

இமாம் அவர்கள் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்ததற்குக் காரணம் மரணம் மற்றும் மறுமையைப் பற்றி அவர்கள் அறிந்ததும் புரிந்ததும் தான்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடைய ஒரு நபிமொழியை சிந்தியுங்கள்:

يَا أُمَّةَ مُحَمَّدٍ وَاللهِ لَوْ تَعْلَمُونَ مَا أَعْلَمُ لَضَحِكْتُمْ
قَلِيلًا وَلَبَكَيْتُمْ كَثِيرًا

முஹம்மதின் உம்மத்தே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் அறிவதை நீங்கள் அறிந்தால் குறைவாக சிரித்திருப்பீர்கள்; அதிகம் அழுதிருப்பீர்கள். (ஸஹிஹுல் புகாரி எண்: 1044)

وَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ لَوْ تَعْلَمُونَ مَا أَعْلَمُ
لَبَكَيْتُمْ كَثِيرًا وَلَضَحِكْتُمْ قَلِيلا

முஹம்மதுடைய உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக நான் அறிவதை நீங்கள் அறிந்தால் குறைவாக சிரித்திருப்பீர்கள்; அதிகம் அழுதிருப்பீர்கள். (ஸஹிஹுல் புகாரி எண்: 6637)

சான்றோர்கள் நன்மைகளையும் நல்லறங்களையும் சதா செய்து கொண்டிருந்தே இப்படி கவலைப்பட்டார்கள்.

நாமோ நன்மையையும் குறைவாக செய்கிறோம். நமது பாவங்களோ, அவற்றின் எண்ணிக்கையை அல்லாஹ் தான் அறிந்தவன்.

ஆனால், பாருங்கள்! நமக்கு மரணத்தைப் பற்றியும் கவலை இல்லை, மறுமையைப் பற்றியும் நினைவு இல்லை, விசாரணை நாளைப் பற்றி பயமும் இல்லை.

- **அல்லாஹ்வே! எங்கள் இந்த அலட்சியத்திலிருந்து எங்களை பாதுகாப்பாயாக!!**
- **மறுமையின் அமல்களில் எங்களை அதிகமதிகம் ஈடுபடுத்து வாயாக! மறுமையின் வெற்றியை எங்களுக்குத் தருவாயாக!**

ஆமீன்!

• • •

## உள்ளம் மென்மையாக...

١٤٥٠ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا هَاشِمٌ حَدَّثَنَا حَسَنٌ عَنِ الْحَسَنِ قَالَ ابْنَ آدَمَ كَيْفَ يَرِقُّ قَلْبُكَ وَهَمُّكَ فِي آخَرَ

**1450.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஆதமின் மகனே! உனது உள்ளம் எப்படி மென்மையாக ஆகும்? உனது கவலையோ (மறுமை அல்லாத) வேறு ஒன்றில் இருக்கிறதே!

**கருத்து:**

உள்ளம் மென்மையாக இருந்தால்தான் அறிவுரைகள் அதில் நற்பலன் தரும். உள்ளம் மென்மையாக இருந்தால்தான் கண்கள் இறையச்சத்தால் கலங்கும். உள்ளம் இறுகிவிட்டால் அதில் அறிவுரைகள் பலனளிக்காது.

மறுமையின் கவலையில் இருக்கின்ற உள்ளம்தான் மென்மையாகவும் இலகியதாகவும் இருக்கும். அதுதான் அறிவுரைகளை செவியுறும் போது மறுமையின் அச்சத்தால் அழும், தன் பாவங்களை எண்ணி அழும், அல்லாஹ்வின் அன்பால் அழும், அல்லாஹ்வின் பயத்தால் அழும், அதுதான் நல்லவர்களின் நட்பை நாடும். அதுதான் இறை வணக்கத்தில் நாட்டம் கொள்ளும். இறைவேதத்தை ஓதுவதில் இன்பம் காணும். ஏழை எளியவர்களின் மீது பரிவு காட்டும். அனாதைகள் மீது அன்பு காட்டும்.

உலக மோகத்தில் மூழ்கியுள்ள உள்ளமோ இறுக்கமாக இருக்கும்.

அது கடினமான கல்லாக இருக்கும். அந்த உள்ளத்தில் இறை பயம் இருக்காது. அந்த உள்ளத்தில் அறிவுரை பலனளிக்காது. இறையச்சத்தால் அது அழாது. அல்லாஹ்வின் மீது அன்பும் கொள்ளாது. அவனை அஞ்சவும் செய்யாது. நல்லவர்களின் நட்பில் நாட்டம் கொள்ளாது. ஏழை எளியவர்கள் மீது பரிவும் காட்டாது. செல்வந்தர்கள் பக்கமே அதன் கவனம் இருக்கும். தங்கம் வெள்ளியின் பக்கமே அதன் நாட்டம் இருக்கும். பணம்தான் அதன் கிப்லா. செல்வம் தான் அதன் உறவு. வசதிதான் அதன் நோக்கம். உலகம்தான் அதற்கு எல்லாம்.

இப்படிப்பட்ட உள்ளம் மிக மோசமானது. இதன் முடிவு மிகக் கேவலமானது. இதன் கொள்கை மிகக் கெட்டது. இதன் குணம் மிகக் கொடூரமானது. அந்த உள்ளத்தில் தர்மம் இருக்காது, நீதம் இருக்காது, மனசாட்சி இருக்காது.

அல்லாஹ் கூறுகிறான்:

فَوَيْلٌ لِلْقَاسِيَةِ قُلُوبُهُمْ مِنْ ذِكْرِ اللهِ أُولَئِكَ فِي ضَلَالٍ مُبِينٍ (٣٩:٢٢)

***அல்லாஹ்வின் நினைவை விட்டு விலகி இறுகிவிட்ட உள்ளங்களுக்கு கேடுதான். அவர்கள்தான் தெளிவான வழிகேட்டில் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 39:22)***

تَقْشَعِرُّ مِنْهُ جُلُودُ الَّذِينَ يَخْشَوْنَ رَبَّهُمْ ثُمَّ تَلِينُ جُلُودُهُمْ وَقُلُوبُهُمْ إِلَى ذِكْرِ الله (٣٩:٢٣)

***தங்கள் இறைவனை பயப்படுகிறவர்களின் தோல்கள் அதனால் (குர்ஆனை செவிமடுப்பதால்) சிலிர்க்கின்றன. பிறகு, அவர்களுடைய தோல்களும் உள்ளங்களும் அல்லாஹ்வின் நினைவின் பக்கம் மென்மை அடைகின்றன. (அல்குர்ஆன் 39:23)***

- **அல்லாஹ்(வின் நினைவை விட்டும் தூரமான) இத்தகைய உள்ளங்களிலிருந்து (அல்லாஹ்) நம்மைப் பாதுகாப்பானாக!**

- **நமது உள்ளங்களை உலக மோகத்திலிருந்து பாதுகாப்பானாக!**
- **மென்மையான உள்ளத்தையும் அல்லாஹ்வின் அச்சத்தால் அழுகின்ற கண்களையும் நமக்குத் தருவானாக!**
- **அறிவுரைகள் மூலம் நல்லுணர்வு பெறுகின்ற உள்ளங்களை நமக்குத் தருவானாக!**

ஆமீன்!

• • •

# நீங்கள் எப்படி...?

١٤٥١ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ سَابِقٍ حَدَّثَنَا مَالِكُ بْنُ مِغْوَلٍ قَالَ قَالَ الْحَسَنُ رَحِمَهُ اللهُ غَدَا كُلُّ امْرِئٍ فِيمَا يُهِمُّهُ وَمَنْ هَمَّ بِشَيْءٍ أَكْثَرَ مِنْ ذِكْرِهِ أَنَّهُ لَا عَاجِلَةَ لِمَنْ لَا آخِرَةَ لَهُ وَمَنْ آثَرَ دُنْيَاهُ عَلَى آخِرَتِهِ فَلَا دُنْيَا لَهُ وَلَا آخِرَةَ وَمَنْ أَحْسَنَ الْقَوْلَ وَأَسَاءَ الْفِعْلَ كَانَ .

**1451.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஒவ்வொருவரும் அவருக்கு முக்கியமானவற்றில் விரைகிறார். யார் ஒன்றை அதிகம் நேசிப்பாரோ அதையே அதிகம் நினைவு கூர்வார். மறுமை இல்லாதவருக்கு இம்மை இல்லை. யார் மறுமையை விட இம்மையைத் தேர்ந்தெடுப்பாரோ அவருக்கு இம்மையும் இல்லை, மறுமையும் இல்லை. யார் சொல்லை அழகு படுத்தி செயலைக் கெடுத்து விட்டாரோ அவர் இழிவடைந்து விட்டார்.

غَدَا كُلُّ امْرِئٍ فِيمَا يُهِمُّهُ

“ஒவ்வொருவரும் அவருக்கு முக்கியமானவற்றில் விரைகிறார்.”

**கருத்து:**

ஆம், எவர் எதை முக்கியம் என்று கருதுகிறாரோ அதை அடைய அவர் நேரம் செலவழிக்கிறார். அதற்காக அவர் பெரும் முயற்சி செய்கிறார். அதன் கவனத்திலேயே அவர் இருக்கிறார். அது கிடைத்தால் மகிழ்ச்சி அடைகிறார். அது தவறிவிட்டால் வருத்தப்படுகிறார்.

உலகம் முக்கியம் என்று கருதியவர்கள் அதற்காக முயற்சிக்கிறார்கள். மறுமைதான் முக்கியம் என்று கருதியவர்கள் அதற்காக முயற்சிக்கிறார்கள்.

உலகத்திற்கு முக்கியத்துவம் தருபவர்கள் மறுமையை இழக்கத் தயாராகி விடுகின்றனர். மறுமைக்கு முக்கியத்துவம் தருபவர்கள் உலகத்தை இழக்கத் தயாராகி விடுகின்றனர்.

முதலாமவர்கள் அழியாததை இழந்து அழியக்கூடியதை வாங்குகின்றனர். இரண்டாமவர்கள் அழியக்கூடியதை இழந்து அழியாததை வாங்குகின்றனர்.

பலருக்கு உலகம்தான் நோக்கம். சிலருக்கு பணம்தான் எல்லாம். சிலருக்கு பதவிதான் எல்லாம். சிலருக்குப் பெயர் புகழ்தான் எல்லாம். சிலருக்குப் பெண்கள்தான் எல்லாம். சிலருக்கு சொத்துகள்தான் எல்லாம். இப்படி பலர் மறுமையை மறந்துவிட்டு இந்த உலகத்திற்குப் பின்னர் தங்கள் இம்மை வாழ்வைத் தொலைப்பதைப் பார்க்கிறோம்.

ஆனால், இவர்களுக்கு அல்லாஹ் முடிவு செய்ததைத் தவிர வேறு ஏதும் கிடைத்துவிடப் போவதில்லை. சிலரை மண்ணாசை அழித்தது. சிலரை பொன்னாசை அழித்தது. சிலரை பதவி ஆசை அழித்தது. சிலரை பெண்ணாசை அழித்தது.

وَمَنْ هَمَّ بِشَيْءٍ أَكْثَرَ مِنْ ذِكْرِهِ

யார் ஒன்றை அதிகம் நேசிப்பாரோ அதையே அதிகம் நினைவு கூர்வார்.

**கருத்து:**

எதனுடைய நேசம் உள்ளத்தில் இருக்குமோ அதன் நினைவு தான் மனதில் மீண்டும் மீண்டும் வரும். எதனுடைய அன்பு உள்ளத்தில் இருக்குமோ அதனுடைய ஞாபகம்தான் அதிகம் இருக்கும். எதன் மீது பற்று அதிகம் இருக்குமோ அதன் மீதுதான் கவனம் இருக்கும்.

ஒருவருக்கு எது பிடித்துவிட்டதோ அவர் அதை பற்றியே பேசுவார். ஒருவர் ஒருவரை நேசித்துவிட்டால் அவர் ஞாபகமாகவே இருப்பார். ஒருவருக்கு ஒருவர் மீது அன்பு வந்து விட்டால் அவரைப் பற்றியே அவர் யோசித்துக் கொண்டு இருப்பார். எப்போதும் அவருடைய நினைவு அவரது மனதில் ஓடிக்கொண்டே இருக்கும்.

அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்தவர்கள் அவ்விருவரையும் பற்றி அதிகம் பேசுவார்கள். அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய்வார்கள். நபியின் மாண்புகளை உயர்வுகளைப் பற்றி அதிகம் எடுத்துச் சொல்வார்கள். அல்லாஹ்வின் நினைவுதான் அவர்களது உள்ளத்தில் நிலைப் பெற்று இருக்கும். அல்லாஹ்வின் நினைவை மறக்கடிக்கின்ற எதிலும் அவர்கள் ஈடுபட மாட்டார்கள்.

அல்லாஹ்வை நேசிக்கின்ற நல்லவர்கள் வணக்க வழிபாட்டுக்கு வெளியிலும் அல்லாஹ்வை நினைவு கூருவார்கள், மஸ்ஜிதிற்கு வெளியிலும் அல்லாஹ்வின் நினைவில் இருப்பார்கள்.

அல்லாஹ்வை நேசிக்காத பாவிகள் வணக்க வழிபாட்டில் கூட அல்லாஹ்வை நினைக்க மாட்டார்கள். நினைத்தாலும் மிகக் குறைவாகவே நினைப்பார்கள். வழிபாட்டிலேயே இந்த நிலை என்றால் அதற்கு வெளியில் என்னவென்று சொல்வது!

அல்லாஹ்வை நேசிப்பவர்கள் தொழுகைக்கு நின்றால் அல்லாஹ்வையும் மறுமையையும் சொர்க்க நரகத்தையும் நினைத்து அழுவார்கள், உள்ளம் நடுங்குவார்கள், அல்லாஹ்வை விட்டு கவனத்தைத் திருப்ப மாட்டார்கள்.

அல்லாஹ்வை நேசிக்காதவர்கள் தொழுகையில் நின்றால் உலகத்தை நினைப்பார்கள், உலகச் செல்வங்களை நினைப்பார்கள், உலக இன்பங்களை எண்ணிக்கொண்டு இருப்பார்கள். உலகத்தில் தாங்கள் நேசிக்கின்ற வஸ்துக்களையும் மனிதர்களையும் நினைத்துக்கொண்டு இருப்பார்கள். அல்லாஹ்வின் பக்கமும் மறுமையின் பக்கமும் அவர்களது கவனம் திரும்பாது,

எனவேதான் அல்லாஹ்வை நேசிக்காதவர்களுக்கு வணக்க வழிபாடுகள் கடினமாகத் தோன்றும், சுமையாக இருக்கும், அவற்றில் ஆர்வம் வராது. வணக்க வழிபாட்டில் அவர்களை ஈடுபடுத்தினால் தண்ணீருக்கு வெளியில் மீன் துடிப்பதைப் போன்று அவர்களது நிலை இருக்கும்.

பாவத்தில் அவர்கள் மூழ்கினாலோ, உலக இன்பத்தில் திளைத்தாலோ அவர்களுக்கு நேரம் போவதே தெரியாது, அதிக நேரமும் கொஞ்ச நேரமாகத்தான் தெரியும். அதற்காக அவர்கள் படுகின்ற சிரமங்களும் சந்திக்கின்ற இன்னல்களும் அவர்களுக்கு இன்பமாகவே தெரியும். அதற்காக செல்வத்தை கணக்கின்றி செலவழிப்பார்கள், சிறிதும் அது குறித்து வருந்த மாட்டார்கள்.

அல்லாஹ்வை நேசிக்கின்ற நல்லவர்கள் அல்லாஹ்வை வணங்குவதில் கலைப்புறுவார்கள், அதில் ஏற்படும் சிரமங்களை சகிப்பார்கள், வழிபாட்டில் அதிக நேரம் ஈடுபடுவார்கள், குர்ஆன் ஓதுவதில் திக்ரு செய்வதில் அதிகம் ஈடுபடுவார்கள், செல்வங்களை நல்லறங்களில் அளவின்றி அள்ளிக் கொடுப்பார்கள், தங்களுக்கு அளவாக செலவு செய்வார்கள், இறைக் கல்வியில் ஆர்வம் கொள்வார்கள். இப்படியாக வாழ்வையும் செல்வத்தையும் இறைப்பொருத்தத்தை அடைவதில் மட்டுமே செலவு செய்வார்கள்.

அல்லாஹ்வின் மீது நேசம் கொண்டவர்கள் அவனையே அதிகம் நினைப்பார்கள்.

உலகத்தின் மீது நேசம் கொண்டவர்கள் அல்லாஹ்வை நினைக்க வேண்டிய இடத்திலும் உலகத்தையே அதிகம் நினைவு கூருவார்கள்.

إِنَّهُ لَا عَاجِلَةَ لِمَنْ لَا آخِرَةَ لَهُ وَمَنْ آثَرَ دُنْيَاهُ عَلَى آخِرَتِهِ فَلَا دُنْيَا لَهُ وَلَا آخِرَةَ

மறுமை இல்லாதவருக்கு இம்மை இல்லை. யார் மறுமையை விட இம்மையை தேர்ந்தெடுப்பாரோ அவருக்கு இம்மையும் இல்லை, மறுமையும் இல்லை.

**கருத்து:**

இவ்வுலக வாழ்க்கையில் மறுமைக்கான அமல்களை செய்து மறுமையின் வெற்றியோடு இவ்வுலகை விட்டு யார் பிரிந்தாரோ அவர்தான் வெற்றியாளர். அவர்தான் இவ்வுலக வாழ்கையைப் பெற்று அதனை உண்மையான முறையில் பயன்படுத்திக் கொண்டவர்.

அவர் அல்லாஹ் அனுமதித்த ஹலாலான முறையில் வாழ்ந்து உலகத்தையும் அனுபவித்தார். மறுமையையும் வென்றார். இவர் உலகிலும் வெற்றியாளர், மறுமையிலும் வெற்றியாளர்.

யார் மறுமையை மறந்து உலக இன்பங்களில் மூழ்கி அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாக வாழ்ந்தாரோ அவர் இவ்வுலகில் செல்வந்தராக, அல்லது பெரும் பதவியை வென்றவராக, அல்லது உலகத்தின் அற்ப இன்பங்களை அதிகம் பெற்றவராக வாழ்ந்து இருக்கலாம்.

ஆனால், முடிவு கண்டிப்பாக மரணம்தான். மரணத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது. இவர் இவ்வுலகத்தில் அனுபவித்த இன்பமும் சுகமும் நிரந்தரமற்றவை. இறுதியாக மறுமையில் இவர் அனுபவிக்க இருக்கின்ற துன்பங்கள் துயரங்களோ நிரந்தரமானவை, எண்ணில் அடங்காதவை, சொல்ல முடியாதவை.

அங்கு அவர் தங்கப்போகின்ற காலமோ முடிவில்லாதவை. பல்லாயிரம் கோடி ஆண்டுகள் முடிந்தாலும் மறுமை முடியாது. அப்படி என்றால் அவர் உலகத்தைப் பெற்று அதில் இன்பமாக இருந்து, வசதியாக வாழ்ந்து, சுகமாக சுற்றித்திரிந்து என்னதான் பலன்!?

அது அவருக்கு இவ்வுலகிலும் நிரந்தரமாக இருக்கவில்லையே! மறுமையிலோ வகை வகையான வேதனைகளிலும் தண்டனைகளிலும் அல்லவா வாழப்போகிறார்! அங்கு கொதி நீரும் கொழுந்து விட்டெரியும் நெருப்பும் அல்லவா இவருக்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றன! கள்ளிமரமும் கொதித்த சீழ் சலமும்தான் அவருக்கு உணவும் குடிப்பும்.

இப்படிப்பட்டவன் அங்கு உலக இன்பத்தை நினைத்துப் பார்ப்பானா?! உலக சுகம் அவனுக்கு அங்கு ஞாபகம் வருமா?

மலக்குகளின் சம்மட்டி அடிகளுக்கும் தேள், பாம்புகளின் விஷ கடிகளுக்கும் இடையில் துடிதுடித்துக் கொண்டு இருக்கின்றவன் உலக இன்பத்தை எவ்வாறு நினைத்துப் பார்ப்பான்!? (உலகின் எந்த இன்பத்தை நினைத்துப் பார்ப்பான்?)

சிற்றின்பத்திற்காக பேரின்பத்தை இழந்தவன் எதைப் பெற்றான்!?

நிலையற்ற இன்பத்திற்காக நிலையான இன்பத்தை இழந்தவன் எதை அடைந்தான்!?

அற்ப சுகத்திற்காக நிரந்தர வேதனையில் சிக்கியவன் எதைக் கண்டான்!?

وَمَنْ أَحْسَنَ الْقَوْلَ وَأَسَاءَ الْفِعْلَ كَانَ

யார் சொல்லை அழகுபடுத்தி செயலைக் கெடுத்து விட்டாரோ அவர் இழிவடைந்து விட்டார்.

**கருத்து:**

சிலருடைய சொல் இனிப்பாக இருக்கும். ஆனால், செயல் கசப்பாக இருக்கும்.

சிலருடைய பேச்சு கவர்ச்சியாக இருக்கும். ஆனால், செயல் கண்றாவியாக இருக்கும்.

சிலருடைய வார்த்தை அன்பாக இருக்கும். ஆனால், குணம் அரக்க குணமாக இருக்கும்.

சிலர் அறிவாளிகளின் பேச்சுகளைப் பேசுவர். ஆனால், அறிவிலிகளின் செயல்களை செய்வர்.

சிலர் ஞானிகளைப் போன்று உரையாற்றுவார்கள். ஆனால், மூடர்களைப் போல் நடந்து கொள்வார்கள்.

சிலரின் சொல்லில் இறையச்சம் இருக்கும். ஆனால், அவர்களின் செயலோ பாவிகளின் செயலாக இருக்கும்.

இப்படிப்பட்டவர்களை அல்லாஹ்வும் நேசிக்க மாட்டான். அல்லாஹ்வின் அடியார்களும் நேசிக்க மாட்டார்கள்.

நல்லதை பிறருக்குச் சொல்வதற்கு முன் தான் அதை எடுத்து நடக்க வேண்டும். அழகியதை மக்களுக்கு சொல்வதற்கு முன் தான் அதை பின்பற்ற வேண்டும்.

பிறருக்கு அறிவுரை சொல்வதற்கு முன் அந்த அறிவுரையை தனது வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும்.

நல்லதை ஏவுவதற்கு முன் அதை தான் கடைப்பிடிக்க வேண்டும்.

சொல்லும் செயலும் ஒருசேர அழகாக இருப்பவர்களை அல்லாஹ் வும் நேசிக்கின்றான். அவனுடைய அடியார்களும் நேசிக்கின்றனர்.

தான் சொல்வதை தனது வாழ்க்கையில் எடுத்து நடப்பவரை மக்கள் தங்கள் முன்மாதிரியாக வழிகாட்டியாக தலைவராக எடுத்துக் கொள்கின்றனர்.

நமது சான்றோர்கள் இப்படித்தான் வாழ்ந்தார்கள். தாங்கள் செய்த நல்லதை மக்களுக்குச் சொல்வார்கள். மக்களுக்கு எந்த நல்லதை சொல்வார்களோ அதை முதலாவதாக அவர்கள் எடுத்துச் செயல்படுத்துவார்கள்.

இப்படிப்பட்டவர்கள் அல்லாஹ்விடமும் அவனது அடியார் களிடமும் கண்ணியம் பெறுவார்கள்.

ஒருவர் பிறருக்கு நன்மையை ஏவி, பிறரை தீமையிலிருந்து விலக்கி, பிறகு அவர் அந்த நன்மையை செய்யவில்லையெனில், அவர் அந்த தீமையைவிட்டு விலகவில்லையெனில் அவருக்கு இம்மையிலும் கேவலம் உண்டு. மறுமையிலும் மிகப் பெரிய கேவலமும் தண்டனையும் உண்டு.

- **இத்தகைய இழிவிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!**
- **நன்மையை சொல்பவர்களாகவும் தீமையை விட்டு மக்களைத் தடுப்பவர்களாகவும் தீமையிலிருந்து விலகியவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!**
- **அல்லாஹ்வே! எங்களை மறுமைக்கு முக்கியத்துவம் தருபவர்களாக ஆக்குவாயாக!**
- **யா அல்லாஹ்! உனது நேசத்தையும் உனது நினைவையும் எங்களுக்கு அருள்வாயாக!**
- **அல்லாஹ்வே! எங்களை மறுமையை அதிகம் நினைவுகூறும் மக்களாக ஆக்கு! எங்களை மறுமையை தேர்ந்தெடுத்த நல்லவர்களில் ஆக்கு!**

ஆமீன்!

## கடினமான இபாதத் எது?

١٤٥٢ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا حَسَنُ بْنُ مُوسَى حَدَّثَنَا يَحْيَى بْنُ دِينَارٍ حَدَّثَنَا مُعَاوِيَةُ بْنُ قُرَّةَ قَالَ أَتَيْنَا الْحَسَنَ فَسَأَلْنَاهُ أَيُّ الْعِبَادَةِ أَشَدُّ؟ قَالَ فَقَالَ قَائِلٌ مِنَّا أَشَدُّ الْعِبَادَةِ الْجِهَادُ فِي سَبِيلِ اللهِ وَقَالَ قَائِلٌ أَشَدُّ الْعِبَادَةِ الصَّلَاةُ وَقَالَ قَائِلٌ أَشَدُّ الْعِبَادَةِ الزَّكَاةُ وَقَالَ قَائِلٌ الصِّيَامُ قَالَ فَقُلْتُ بَيْنِي وَبَيْنَ نَفْسِي لَأُكَلِّمَنَّهُ قَالَ قُلْتُ يَا أَبَا سَعِيدٍ إِنِّي لَمْ أَجِدْ مِنَ الْعِبَادَةِ أَشَدَّ مِنَ الْوَرَعِ فَقَالَ لَا أَبَا لَكَ فَهَلْ يُنْتَفَعُ بِشَيْءٍ مِنْ هَذَا إِلَّا بِالْوَرَعِ قَالَ فَقَالَ الْحَسَنُ إِنِّي لَمْ أَجِدْ مِنَ الْعِبَادَةِ شَيْئًا أَشَدَّ مِنَ الصَّلَاةِ فِي جَوْفِ هَذَا اللَّيْلِ .

**1452.** முஆவியா இப்னு குர்ரா ﵀ கூறுகிறார்: நாங்கள் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் வந்தோம். எந்த இபாதத் மிகக் கடினமானது என்று அவர்களிடம் கேட்டோம். எங்களில் ஒருவர் கூறினார், "இபாதத்தில் மிகக் கடினமானது அல்லாஹ்வின் பாதையில் போரிடுவது." மற்றொருவர் கூறினார்: "இபாதத்தில் மிகக் கடினமானது, 'ஸலாஹ்' தொழுகையாகும். "வேறு ஒருவர் "நோன்பு" என்று கூறினார். வேறு ஒருவர் "ஜகாத்" என்றார்.

நான் எனக்குள், அவரிடம் இது பற்றி நேரடியாகப் பேசுவேன் என்று கூறி, அபூ சயீது அவர்களே! பேணுதலை விட மிகக் கடினமான இபாதத்தை நான் காணவில்லை என்று கூறினேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: "உனக்கு தந்தை இல்லாமல் போகட்டும்.

பேணுதல் இல்லாமல் இந்த இபாதத்துகளில் எதன் மூலம் என்ன பலன் கிடைக்கும்!"

பிறகு, கூறினார்கள்: "இந்த இரவின் நடுப்பகுதியில் தொழுவதை விட கடினமான ஓர் இபாதத்தை நான் காணவில்லை."

**கருத்து:**

இமாம் அவர்களின் மாணவர்கள் தங்களுக்கு மத்தியில் மனிதர்கள் சிரமமாகக் கருதுகின்ற வணக்கத்தைப் பற்றி விவாதித்தார்கள். அதில் ஒவ்வொருவரும் தான் புரிந்ததை பகிர்ந்தார்கள்.

உண்மையில் அவர்கள் கூறியது போன்று ஒவ்வொரு வணக்கமும் சிலரைக் கணித்து சிரமமானது என்பதில் சந்தேகம் இல்லை.

சிலருக்கு தொழுகை சிரமம். தொழுகை இலேசாக உள்ள சிலருக்கு ஜகாத் சிரமமாக இருக்கும். ஜகாத் இலேசாக உள்ள சிலருக்கு நோன்பு சிரமமாக இருக்கும். இவையெல்லாம் இலேசான ஒருவருக்கு ஜிஹாது சிரமமாக இருக்கும். இப்படித்தான் சிலருக்கு வணக்கங்களில் சில இலேசாகவும் சிலருக்கு சிரமமாகவும் இருக்கும்.

இப்படி ஒருவர் பேணுதலைப் பற்றி அது ரொம்ப சிரமமானது என்று இமாமிடம் கூறியபோது இமாம் அவர்கள் கூறிய பதிலின் பொருளாவது: "பேணுதல் என்பது அல்லாஹ் தடுத்த ஹராமானவற்றை விட்டு விலகி இருப்பதாகும். உண்பதில் குடிப்பதில் தான் பயன்படுத்துவதில் ஹராமான ஏதும் கலந்துவிடாமல் ஒருவர் தன்னை பாதுகாப்பதைப் பேணுதல் எனக் கூறப்படும்.

இந்தப் பேணுதல் இல்லையென்றால் எந்த இபாதத்தும் ஏற்றுக் கொள்ளப்படாது. அவருடைய துஆ அங்கீகரிக்கப்படாது. ஆகவேதான் இமாம் அவர்கள் அவரை அன்பாகக் கடிந்து கொண்டார்கள்.

அதற்குப் பிறகு, இமாம் அவர்கள் தங்களது கருத்தைக் கூறுகிறார்கள். ஆம், இமாம் அவர்கள் கூறியது போல் இரவுத் தொழுகை

உண்மையில் சிரமமான ஒன்றுதான். அல்லாஹ் அதை நபிமார்கள் மீது கடமையாக ஆக்கி இருந்தான்.

நல்லவர்களைப் பற்றி அல்லாஹ் பேசுகின்ற அல்குர்ஆனின் வசனங்களில் அவர்கள் இரவில் தொழுவார்கள், அதிகாலையில் சஹர் நேரத்தில் பாவமன்னிப்புத் தேடுவார்கள், தங்களது இறைவனை அஞ்சி அவனிடம் சொர்க்கத்தை வேண்டுவார்கள், நரகத்தை பயந்து அதிலிருந்து பாதுகாவல் தேடுவார்கள்.

மக்கள் மென்மையான மெத்தைகளின் மீது தூக்கத்தில் சுகம் கண்டு கொண்டிருக்க இறையடியார்கள் அல்லாஹ்விற்கு முன்னால் தொழுகையில் நின்று அழுது கொண்டிருப்பார்கள்.

மக்கள் உலக இன்பங்களில் இன்பம் காண, இறைநேசர்கள் அல்லாஹ்விற்கு முன்னால் கால் வலிக்க நிற்பதிலும் கண் சிவக்க அழுவதிலும் கூன் வலிக்க குனிவதிலும் பணிவதிலும் இன்பம் காணுவார்கள்.

மறுமையின் ஆழமான நம்பிக்கையும் அல்லாஹ்வின் மீது அளவுகடந்த அன்பும் நரகத்தின் மீது எல்லையில்லா பயமும் உள்ளவர்கள்தான் இந்த இரவு வணக்கத்தில் ஈடுபடமுடியும், அதில் இன்பம் காண முடியும், அதை வாழ்நாள் எல்லாம் தொடர முடியும்.

எனவேதான் இமாம் அவர்கள் இரவு வணக்கத்தை மிக சிரமமான இபாதத் என்று கூறினார்கள்.

- **அல்லாஹ்வே! இந்த இரவு வணக்கத்தை எங்களுக்கு எளிதாக்கு! அதில் எங்களுக்கு இன்பத்தைத் தா!**
- **இரவு நேரங்களை உன் வழிபாட்டிலும் உனது வேதத்தை ஓதுவதிலும் உன்னை தியானிப்பதிலும் செலவு செய்பவர்களாக எங்களை ஆக்கு!**

ஆமீன்!

• • •

# திரு குர்ஆன் விளைவிக்கும் மாற்றம்

١٤٥٣ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ قَالَ سَمِعْتُ حَوْشَبًا قَالَ سَمِعْتُ الْحَسَنُ يَحْلِفُ بِاللهِ يَقُولُ وَاللهِ يَا ابْنَ آدَمَ لَئِنْ قَرَأْتَ الْقُرْآنَ ثُمَّ آمَنْتَ بِهِ لَيَطُولَنَّ فِي الدُّنْيَا حُزْنُكَ وَلَيَشْتَدَّنَّ فِي الدُّنْيَا خَوْفُكَ وَلَيَكْثُرَنَّ فِي الدُّنْيَا بُكَاؤُكَ.

**1453.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: “மனிதனே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீ குர்ஆனைப் படித்தால், பிறகு அதை நம்பிக்கை கொண்டால் நிச்சயமாக இவ்வுலகத்தில் உனது கவலை அதிகமாகி விடும்; நிச்சயமாக இவ்வுலகத்தில் உனது பயம் கடுமையாகிவிடும்; நிச்சயமாக இவ்வுலகத்தில் உனது அழுகை அதிகமாகிவிடும்.

**கருத்து:**

யார் ஒருவர் சரியான முறையில் இறையச்சத்துடன் குர்ஆனை புரிந்து படிப்பாரோ மேலும் அதில் சொல்லப்பட்ட மறுமை சம்பந்தமான விஷயங்களை நம்பிக்கை கொள்வாரோ அவர் இந்த உலகத்தின் அற்ப இன்பங்களில் மனதை பறிகொடுக்காமல் எப்போதும் மறுமையைப் பற்றிய கவலையிலும் அது பற்றிய பயத்திலும் இருப்பார்.

அத்துடன் மறுமையில் வெற்றிபெற அழுது பிரார்த்தித்தவராகவுமே தனது வாழ்க்கையைக் கழிப்பார்.

ஆம், நபி ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்ட இந்த குர்ஆன் அவர்களின் வாழ்க்கையை மாற்றியது. குடும்பத்தை மட்டும் அறிந்திருந்த

நபியவர்களை சமுதாயத்தோடு இணைத்தது. அல்லாஹ்வை அறியாமல், மறுமையை தெரியாமல் இருந்த நபியவர்களை அல்லாஹ்வின் பக்கம் மறுமையின் பக்கம் திருப்பியது.

அவர்களது வாழ்க்கையே முற்றிலும் மாறியது...

அல்லாஹ்வைத் தேடினார்கள்...

அவனுக்காக வாழ்ந்தார்கள்...

அலங்கரிக்கப்பட்ட உலகம் கண்ணுக்கு தெரிந்திருந்தது.

உலக சுக போகங்கள் கண்ணுக்கு முன் இருந்தன.

வாலிபம், மனைவி, பிள்ளைகள், வசதி, பெயர், புகழ் என எல்லா உலக பாக்கியங்களும் குவிந்திருந்தன.

ஆனால், குர்ஆன் இறக்கப்பட்ட பின்னர்....

மனைவி, உடனிருந்தாலும் மனதெல்லாம் மறுமையின் பக்கமே திரும்பி இருந்தது.

உணவின் ருசியை மறந்தார்கள்...

படுக்கையின் சுகத்தை துறந்தார்கள்...

தென்றலின் தேடல் இல்லை...

நிழலின் தேடல் இல்லை...

வாழ்வாதாரத்தின் கவலை இல்லை...

கவலை எல்லாம் ஒன்றே ஒன்றுதான்...

மறுமை.... மறுமை... மறுமை...

எல்லாம் அதற்காகவே...

நடப்பு, பகை, ஒட்டுதல், வெட்டுதல், சண்டை, சமாதானம், கொடுக்கல், வாங்கல்... இப்படி எல்லாம் மறுமையை முன் வைத்தே!!

குர்ஆனை ஓதினார்கள்... ஓதிக்கொண்டே இருந்தார்கள்...

தொழுகையில்... தொழுகைக்கு வெளியில்...

வீட்டில், கடைத்தெருவில், இரவில், பகலில் என எந்நேரமும் குர்ஆனை முணுமுணுத்துக்கொண்டே இருந்தார்கள்.

தனிமையிலும் சபையிலும் ஓதிக்கொண்டே இருந்தார்கள்.

ஓத ஓத குர்ஆன் அவர்களை மாற்றிக்கொண்டே இருந்தது.

அதை செவிமடுத்தவர்களின் உள்ளத்தை உருக்கியது.

நெஞ்சத்தை கசக்கிப் பிழிந்தது.

கண்களை குளமாக்கியது.

வாழ்க்கைப் பாதையை திசைமாற்றியது.

எப்படியும் வாழலாம், எதையும் செய்யலாம் என்றிருந்தவர்களை இப்படித்தான் வாழவேண்டும், இதைத்தான் செய்யவேண்டும் என்ற நிலைக்கு கொண்டுவந்தது.

மிருகமாக இருந்தவர்களை மாமனிதர்களாக மாற்றியது.

பொன்னுக்கும் பெண்ணுக்கும் மண்ணுக்கும் மாண்டு கொண்டிருந்த வர்களை மறுமையின் வேட்கை உடையவர்களாக, மறுமையின் மைந்தர்களாக, மறுமைக்காக உயிர்த்தியாகம் செய்பவர்களாக மாற்றியது.

அறிவே இல்லாமல் மடமையின் பாதாளத்தில் இருந்தவர்களை கல்வியின் உச்சத்தில் நிறுத்தியது; ஞானத்தின் சிகரத்திற்கு உயர்த்தியது.

பாலைவனக் கொள்ளைக்காரர்களை பாருலகின் ஒழுக்க சீலர்களாக, சட்டவல்லுநர்களாக, ஞானத்தின் ஊற்றுக் கண்களாக உருவாக்கியது இந்த குர்ஆன்.

காமத்துக்கே பெண்கள் என்ற கொள்கையில் இருந்தவர்களை, பெண் பிறவி ஒரு இழிவு என்று கருதியவர்களை அந்த நிலையிலிருந்து மாற்றியது இந்த குர்ஆன்.

ஆட்சியே இல்லாமல் இருந்தவர்களை உலகையே ஆளுகின்ற மன்னர்களாக மாற்றியது இந்த குர்ஆன்.

அதிகாரங்கள் கிடைத்தாலும், செல்வங்கள் குவிந்தாலும், இன்பங்கள் இணைந்தாலும், மாணிக்கமும் மரகதமும் மின்னினாலும் உலகமே தங்களுக்கு முன் பணிந்தாலும் பாதம் பிசகாமல் -கால் சருகாமல் இலட்சியம் தடுமாறாமல்- மறுமையை முன்னோக்கியே அவர்களது வாழ்கை இருந்தது.

பதவியால், செல்வ செழிப்பால் உலகதாரிகள் சிரிப்பார்கள்; மகிழ்வார்கள்.

ஆனால், அவர்களோ அழுதார்கள்; கவலைக்குள்ளானர்கள்.

ஏன்?...

குர்ஆன் அவர்களை அழவைத்தது! குர்ஆன் அவர்களுக்கு கவலையூட்டியது.

ரோம, பாரசீக எதிரிகளின் பயம் போனது! மறுமையின் பயம் உள்ளத்தை ஆட்டிப் படைத்தது.

அல்குர்ஆன் அவர்களை அப்படி உருவாக்கியது.

ஆம், மலைகளையே நடுங்க வைக்கின்ற, சிகரங்களையே சுக்கு நூறாக வெடித்து சிதற வைக்கின்ற இந்த குர்ஆன் நல்ல மனித உள்ளங்களை மாற்றாமலா இருக்கும்!?

இந்த குர்ஆன்தான் அபூபக்ரை உமரை உஸ்மானை அலியை இன்னும் பல ஆயிரம் உத்தம ஸஹாபாக்களை உருவாக்கியது.

அவர்களை இரவெல்லாம் அழவைத்தது;

உலக இன்பங்களை விட்டு மறுமையின் அமல்களின் பக்கம் திருப்பியது;

சரீர இச்சைகளை தேடுவதை விட்டும் மறுமையின் அமல்களை தேடத் தூண்டியது;

ஆம், அந்த சான்றோர்களின் கண்கள் அழுது அழுது பூத்துப் போகின.

முகங்கள் கண்ணீரால் கரை படிந்தன.

அல்லாஹ்வின் பேச்சாகிய, ரப்பின் வாக்கியமாகிய, ரஹ்மானின் வசனமாகிய அல் குர்ஆன் உலக இறுதிநாள் வரை மானுட வர்க்கத்தின் முன்னோடிகளாக அவர்களை மாற்றி அமைத்தது.

- **அல்லாஹ்வே! அவர்களை மாற்றிய அல்குர்ஆன் எங்களையும் மாற்றும்படி செய்!**
- **அதன் மூலம் நேர்வழி பெற்ற நல்லோரில் எங்களையும் ஆக்கு!**
- **அதை கண்ணியப்படுத்துகின்ற, அதை ஓதுகின்ற, அதை சிந்திக்கின்ற, அதை பின்பற்றுகின்ற சிறந்தவர்களில் எங்களையும் சேர்த்து வைப்பாயாக!**

ஆமீன்!

## அச்சமூட்டுவோருடன் அமருங்கள்...!

١٤٥٤ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيٌّ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا الْعَلَاءُ بْنُ زِيَادٍ قَالَ سَمِعْتُ الْمُغِيرَةَ بْنَ مُحَاوِشٍ سَأَلَ الْحَسَنَ فَقَالَ يَا أَبَا سَعِيدٍ لَقِينَا عُلَمَاءَ يُذَكِّرُونَنَا وَيُخَوِّفُونَنَا يَكَادُ يَجْلِبُونَ قُلُوبَنَا وَآخَرُونَ فِي حَدِيثِهِمْ سُهُولَةٌ قَالَ قَالَ الْحَسَنُ يَا عَبْدَ اللهِ إِنَّهُ مَنْ خَوَّفَكَ حَتَّى تَلْقَى الْأَمْنَ خَيْرٌ مِمَّنْ أَمَّنَكَ حَتَّى تَلْقَى الْمَخَافَةَ.

**1454.** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் முகீரா கேட்டார், "அபூ சயீது அவர்களே! நாங்கள் சில அறிஞர்களை சந்திக்கின்றோம். அவர்கள் எங்களுக்கு அறிவுரை கூறுகிறார்கள். எங்களை (மறுமை விஷயத்தில்) அச்சுறுத்துகிறார்கள். (அந்த அச்சுறுத்தலில்) எங்கள் உள்ளங்களை (எங்கள் நெஞ்சங்களிலிருந்து வெளியே) இழுத்து விடுவார்கள் போலும். மற்றும் சிலர், அவர்களுடைய அறிவுரையில் மென்மை (ஆறுதல்) இருக்கிறது."

அதற்கு ஹசன் பஸரி ரஹிமஹுல்லாஹ் கூறினார்கள்: அல்லாஹ்வின் அடியாரே! (இவ்வுலகில்) உமக்கு ஒருவர் அச்சத்தைக் கொடுத்து, இறுதியாக (மறுமையில்) நீர் நிம்மதியையும் பாதுகாப்பையும் சந்திப்பது மேலானது (இவ்வுலகில்) ஒருவர் உமக்கு நிம்மதியையும் ஆறுதலையும் கொடுத்து, இறுதியாக நீர் பயத்தை (ஆபத்தை) சந்திப்பதை விட.

**கருத்து:**

மக்களுக்கு அறிவுரை கூறுகின்ற அறிஞர்களில் பல வகையினர்

இருக்கின்றனர். உபதேசம் வழங்குகின்ற பேச்சாளர்களில் பலதரப்பட்டவர்கள் உள்ளனர்.

சில அறிஞர்கள் மார்க்கத்தின் ஒரு பக்கத்தை மட்டும் எடுத்துச் சொல்லிவிட்டு இன்னொரு பக்கத்தை விட்டுவிடுவர்.

பல பேச்சாளர்கள், அல்லாஹ்வின் அருளை சொல்லும் போது அவனது தண்டனையை சொல்லாமல் இருந்துவிடுவர். சொர்க்கத்தை விவரிக்கும் போது நரகத்தைப் பற்றி எச்சரிக்காமல் இருந்து விடுவர். அல்லாஹ்வின் அன்பைப் பற்றி சொல்லும் போது அல்லாஹ்வின் கோபத்தைப் பற்றி சொல்லாமல் இருந்துவிடுவர். நன்மையை செய்தால் கிடைக்கின்ற நற்கூலியை சொல்லும்போது அதை விட்டால் கிடைக்கின்ற தண்டனையை சொல்லாமல் இருந்துவிடுவர். மக்களுக்கு நல்லறங்களை போதிக்கும்போது அவர்களிடம் இருக்கின்ற தீமைகளைக் கண்டிக்காமல் இருந்துவிடுவர். மார்க்கத்தின் சலுகைகளை மட்டும் சொல்லிவிட்டு மார்க்கத்தில் இருக்கின்ற கட்டாயக் கடமைகளை சொல்லாமல் இருந்து விடுவர்.

இது நடுநிலைத் தவறுவதாகும். மாறாக, ஒரு சிறந்த பேச்சாளர் மக்களுக்கு மார்க்கம் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். ஒன்றைக் கூறி மற்றொன்றை மறைத்துவிடக் கூடாது. ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து மற்றொன்றை அலட்சியம் செய்யலாகாது.

அல்லாஹ்வைப் பற்றியும் மறுமை வாழ்வைப் பற்றியும் உபதேசம் செய்கின்ற அறிஞர் மக்களுக்கு அல்லாஹ்வின் அருளையும் மன்னிப்பையும் அவனது தயாளத் தன்மையையும் மட்டும் அதிகம் கூறி தனது உரையை முடித்து விட்டால் மக்களில் பலர் தவறாகப் புரிந்து அல்லாஹ்வை பயப்படுவதையும் அஞ்சுவதையும் விட்டுவிடுவர். சொர்க்கத்தை ஆசை வைத்துவிட்டு நரகத்தை பயப்படாமல் இருந்து விடுவர். நன்மைகளை செய்து பாவத்தை விட்டு விலகாமல் இருந்துவிடுவர்.

அல்லாஹ் அவனது வேதத்தில் அவனது கருணையை விவரிக்கின்ற இடங்களிலெல்லாம் அவனது தண்டனையையும் சேர்த்தே கூறுகின்றான்.

نَبِّئْ عِبَادِي أَنِّي أَنَا الْغَفُورُ الرَّحِيمُ (٤٩) وَأَنَّ عَذَابِي هُوَ الْعَذَابُ الْأَلِيمُ (٥٠)

***(நபியே!) எனது அடியார்களுக்கு அறிவிப்பீராக! "நிச்சயமாக நான்தான் மகா மன்னிப்பாளன், மகாக் கருணையாளன். இன்னும் நிச்சயமாக எனது தண்டனை அதுதான் கடுமையான வலிமிக்க தண்டனையாகும்." (அல்குர்ஆன்: 15 : 49,50)***

பல இடங்களில் தன்னை பயப்படுவதைப் பற்றித்தான் அல்லாஹ் மக்களுக்கு அதிகம் கூறுகின்றான். மறுமையைப் பற்றி கூடுதலாக அச்சமூட்டி எச்சரிக்கின்றான். நரகத்தைப் பற்றி கடுமையாக எடுத்துச் சொல்லி பயமுறுத்துகின்றான்.

ஆயிரக்கணக்கான வசனங்கள் அல்லாஹ்வின் அச்சத்தை, மறுமையின் பயத்தை நமக்கு போதிக்கின்றன. ஏனெனில், அல்லாஹ் வையும் மறுமையையும் பயப்படுபவர் கண்டிப்பாக நன்மைகளை அதிகம் செய்வார்; சிறிய நன்மையைக்கூட விட மாட்டார்; பாவங்களை விட்டு கண்டிப்பாக விலகி இருப்பார்; சிறிய பாவத்தைக்கூடச் செய்ய மாட்டார்; அலட்சியமாக இருக்க மாட்டார்.

அதிக பயம் உள்ளவர் அதிகம் பேணுதலாக இருப்பார்.

அதிக இறையச்சம் உள்ளவர் நன்மைகளில் அதிகம் விரைவார்; குற்றங்களை விட்டு வெகு தூரம் விலகி இருப்பார்; சின்னச் சின்ன தவறுகளுக்குக் கூட அழுது அழுது பாவமன்னிப்புத் தேடுவார். ஆகவே, கண்டிப்பாக இவர் மறுமையில் அல்லாஹ்வின் மன்னிப்புக்கும் அருளுக்கும் உரியவராக இருப்பார்.

ஒருவர் அல்லாஹ்வின் அருளை மட்டும் ஆதரவு வைத்து அவனது தண்டனையை அஞ்சாமல் இருந்தால் அவர் பாவங்களில் வீழ்ந்து

விடுவார்; அல்லது கடமைகளை பாழாக்கி விடுவார். இதனால் நாளை அவரது மறுமை வாழ்வு கேள்விக் குறியாகிவிடும்.

ஆகவேதான், இமாம் கூறுகிறார்கள்: "இன்று அதிகம் பயப்படுவதால் நாளை பயமற்ற வாழ்க்கை அமைகிறது என்றால் அதுதான் சிறந்தது.

குறைந்த கால உலக வாழ்க்கையில் மறுமை பயத்தோடும் அல்லாஹ்வுடைய தண்டனையின் அச்சத்தோடும் வாழ்வதால் நிரந்தரமான மறுமை வாழ்க்கையில் எவ்வித கவலையும் பயமும் இல்லாமல் இன்பமான, சுகமான, மகிழ்ச்சியான வாழ்க்கை அமைகிறது என்றால் அதுதானே மேலானது!!

இங்கே அதிகம் சிரிப்பதால் அங்கே அதிகம் அழவேண்டும் என்றால் அது தேவையா?

(உலகில் அல்லாஹ்வின்) பயத்தோடு வாழ்வோம் (மறுமையில்) பயமில்லாமல் வாழ்வதற்காக!

(உலகில் அல்லாஹ்வை) அஞ்சி வாழ்வோம் (மறுமையில்) அச்சமில்லாமல் வாழ்வதற்காக!

(உலகில் மறுமையின்) கவலையோடு வாழ்வோம் (சொர்க்கத்தில்) கவலையில்லாமல் வாழ்வதற்காக!

- **அல்லாஹ்வே! எங்களது மறுமை வாழ்வை மேலானதாக, சிறந்ததாக ஆக்கு!**
- **நிரந்தர வெற்றியைத் தா! சொர்கத்தைத் தா! நரகத்திலிருந்து எங்களை விடுதலை செய்!**

ஆமீன்!

# சிலை வணக்கத்தின் தோற்றம்

١٤٥٥ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيٌّ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا حَوْشَبٌ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ وَاللهِ لَقَدْ عَبَدَ بَنُو إِسْرَائِيلَ الْأَصْنَامَ بَعْدَ عِبَادَتِهِمْ الرَّحْمَنَ عَزَّ وَجَلَّ بِحُبِّهِمُ الدُّنْيَا.

**1455.** அல்லாஹ்வின் மீது சத்தியமாக இஸ்ரவேலர்கள் ரஹ்மானை -அல்லாஹ்வை- வணங்கியதற்குப் பின்னர் சிலைகளை வணங்கினர். அதற்குக் காரணம் அவர்கள் உலகத்தை (-உலக செல்வத்தை) நேசித்தனர் என்று இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் கூறுவதைத் தான் கேட்டதாக ஹவ்ஷப் கூறினார்கள்.

**கருத்து:**

இஸ்ரவேலர்கள் காளைக் கன்றை வணங்கினர். மேலும் சிலைகளை வணங்குகின்ற மக்களைப் பார்த்தபோது தாங்களும் அந்த சிலைகளை வணங்கவேண்டும் என்று விரும்பினர்.

நவூது பில்லாஹ்...

இஸ்ரவேலர்கள் அல்லாஹ்வின் அத்தாட்சிகளைக் கண்கூடாகப் பார்த்தவர்கள். நபி மூசா ﵇ அவர்களின் அற்புதங்களை நேரடியாகப் பார்த்தவர்கள். தவ்ராத்தைக் கற்று அதன் உண்மையை அறிந்தவர்கள். அவர்களின் பல விருப்பங்களை அல்லாஹ் உடனுக்குடன் நிறைவேற்றினான். அவர்கள் கேட்ட பல அற்புதங்களையும் அல்லாஹ் நிகழ்த்தினான். இத்துடன் அவர்கள் இறைத்தூதர்களின் வாரிசுகள். நபிமார்களின் வழித்தோன்றல்கள், இஸ்ஹாக் நபியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறெல்லாம் இருந்தும் அவர்கள் சிலை வழிபாட்டை உள்ளத்தால் விரும்பினர். அதை பெரிதும் மதித்தனர். அதில் கவரப்பட்டனர். அதன் மீது மோகம் கொண்டனர். சிலையை வழிபடுபவர்களைப் பார்த்தால் அது போன்ற சிலை தங்களுக்கும் வேண்டும் என்று அடம்பிடித்தனர்.

ஏன்? ஏகத்துவவாதிகள் இணைவைப்பவர்களாக மாறினர்! ரஹ்மானை வணங்கியவர்கள் ஏன் சிலைகளை வணங்கினர்? வேதத்தை கற்றவர்கள் ஏன் கதைகளையும் கற்பனைகளையும் நம்பினர்? தூதர்களை பின்பற்றியவர்கள் ஏன் புரோகிதர்கள் பின்னால் சென்றனர்? வேத வசனங்களை விட ஏன் மாய மந்திரங்களை நாடினர்? தூய வழிபாட்டு முறைகளை விட்டு விட்டு ஏன் மூடப் பழக்கங்களுக்கு அடிமையாகினர்? இறைவனுக்கு முன் சிரம்பணிந்த நெற்றிகள் மாட்டுக்கு முன்னால் ஏன் சிரம் பணிந்தன? ரஹ்மானை தொழுதவர்கள் ஏன் ஷைத்தானைப் பிரார்த்தித்தனர்? ஒழுக்கத்தோடு இருந்தவர்கள் ஏன் அசிங்கத்தையும் ஆபாசத்தையும் விரும்பினர்?

இதற்கெல்லாம் காரணம் அவர்களுக்கு இருந்த உலக ஆசை, செல்வத்தின் மீது இருந்த மோகம். அதனால்தான் சிலைவணக்கத்தை விரும்பினர்.

இன்றும் நாம் இதைப் பார்க்கலாம். இன்றைய சிலை வணங்கிகளும் காசாசையினால்தான் சிலைகளை வணங்குகின்றனர். செல்வத்தின் மீதுள்ள மோகத்தினால்தான் விக்ரக ஆராதனை செய்கின்றனர்.

எனவேதான் செல்வத்திற்கு `என்று பல சிலைகளையும் யோகம் கிடைப்பதற்காக பல யாகங்களையும் நல்லகாலம் பிறப்பதற்காக உயிர் பலிகளையும் சிறப்பான பூஜைகளையும் குருட்டுத்தனமான நேர்ச்சைகளையும் செய்கின்றனர்.

இவர்கள் சிலை வணக்கத்தின் மூலம் ஷைத்தானை வணங்கி வழிபடுகின்றனர். அந்த சாத்தானிய வழிபாடுதான் அவர்களை பல அசிங்கங்களைச் செய்யத் தூண்டுகிறது. நர பலியை அவர்களுக்கு

ஏவுகிறது. தன்னைத்தானே கேவலப் படுத்திக்கொள்ளவும் வதைத்துக் கொள்ளவும் தூண்டுகிறது.

இவர்களுக்கு சிலை வணக்கத்தின் மூலம் பணம், செல்வம், வசதி இவைதான் தேவை. இவற்றை அவை தரும் என்ற நம்பிக்கையினால் அதற்காக கோடிக்கணக்கில் செலவு செய்கின்றனர். பணம் கிடைக்கும், வசதி பிறக்கும் என்ற நம்பிக்கையினால்தான் அம்மனமாகவும் சடை முடியுடனும் துர் நாற்றத்துடனும் இருக்கின்ற காட்டுமிராண்டிகளைக் கூட வணங்கி வழிபடுகின்றனர். கொடூரமான சாத்தானிய உருவங்களுக்கு பூஜைகள் செய்து படைக்கின்றனர்.

எந்தக் கோயிலுக்குச் சென்றால் யோகம் பிறக்கும், செல்வம் கொழிக்கும் என்று பேசப்படுகிறதோ அங்குதான் கூட்டம் கூட்டமாக கூடிவழிவார்கள். ஒரு கோயிலுக்குச் சென்று தான் நாடியது நிறைவேறவில்லை என்றால் அதன் பின்னர் அதன் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டார்கள்.

முஸ்லிம்களிலும் யாருக்கு பண ஆசை அதிகமானதோ அவர்கள்தான் அல்லாஹ்வை வணங்குவதை விட்டுவிட்டு தர்காக்களுக்கு செல்வதைப் பார்க்கிறோம். அவ்லியா அள்ளி அள்ளித் தருவார் என்ற நம்பிக்கையினால்தான் அங்கு அலைமோதுகின்றனர். செல்வ மோகத்தினால்தான் அங்கு பல ஃபாத்திஹாக்களையும் நேர்ச்சைகளையும் செய்கின்றனர்.

பலர் ஷைகுகளையும் பீர்களையும் அளவு கடந்து மரியாதை செய்வதையும் அவர்களுக்கு முன்னால் கூனிக் குறுகி பணிவதையும் பார்க்கிறோம். ஏன், இந்த ஷைக்கினால் எனக்கு நல்ல காலம் பிறந்தது, நான் வசதி வாய்ப்புகளைப் பெற்றேன் என்ற கேடுகெட்ட நம்பிக்கைதான் இப்படிப்பட்ட அவலங்களை அவர்களை செய்யத் தூண்டுகிறது.

சிலை வணங்கிகளோ கப்ரு வணங்கிகளோ இவர்கள் அனைவரின் நோக்கமும் ஒன்றுதான். பணம், செல்வம், வசதி இவைதான்.

பண மோகம் மோசமானது. துன்யா ஆசை கேடு கெட்டது. இது இணைவைத்தலை ஏற்படுத்தும் அளவு ஆபத்தானது.

- **அல்லாஹ் நம் அனைவரையும் இந்த உலக மோகத்திலிருந்து காப்பாற்றுவானாக! அவனுக்கு இணை வைப்பதை விட்டும் பாதுகாப்பானாக!**

ஆமீன்!

## மறுமைக்காக வாழ்ந்தவர்கள்

١٤٥٦ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا صَفْوَانُ بْنُ عِيسَى حَدَّثَنَا هِشَامٌ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ وَاللهِ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا مَا طُوِيَ لِأَحَدٍ مِنْهُمْ ثَوْبٌ قَطُّ وَلَا أَمَرَ فِي أَهْلِهِ بِصَنْعَةِ طَعَامٍ قَطُّ وَلَا جَعَلَ بَيْنَهُ وَبَيْنَ الْأَرْضِ شَيْئًا قَطُّ وَإِن كَانَ أَحَدُهُمْ لَيَقُولُ لَوَدِدْتُ أَنِّي أَكَلْتُ أَكْلَةً فَتَصِيرُ فِي جَوْفِي مِثْلَ الْآجُرَّةِ وَكَانَ يَقُولُ بَلَغَنَا أَنَّ الْآجُرَّةَ تَبْقَى فِي الْمَاءِ ثَلَاثَمِائَةِ سَنَةٍ.

**1456.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறியதைத் தான் கேட்டதாக ஹிஷாம் அறிவிப்பதாவது:

“நான் பல மக்களை பார்த்திருக்கின்றேன். அவர்களில் எவர் ஒருவருக்கும் ஆடை ஏதும் மடித்து வைக்கப்பட்டதில்லை. தனது குடும்பத்தில் (தான் விரும்பிய) ஓர் உணவை சமைக்கும்படி அவர் கட்டளையிட்டதில்லை. (அவர் தூங்கும் போது) தனக்கும் பூமிக்கும் இடையில் எதையும் அவர் விரித்ததில்லை. நான் சாப்பிட்டது என் வயிற்றில் ஒரு செங்கல்லாக ஆகிவிடவேண்டும் என்று தான் ஆசைப்படுவதாக அவர்களில் ஒருவர் கூறுவார்.” செங்கல் தண்ணீரில் (கரையாமல்) முன்னூறு ஆண்டுகள் இருக்கும் என எங்களுக்குத் தெரியவந்தது.

**கருத்து:**

இந்தக் கூற்றில் இமாம் அவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மற்றும் தங்கள் காலத்து கல்விமான்களின் வாழ்க்கையை விவரிக்கின்றார்கள்.

ஆம், நபிவழி நடந்த அக்காலத்துச் சான்றோர்கள் மிக எளிமையான வாழ்க்கையைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். உலக இன்பங்களையும் சொகுசான வசதிகளையும் விட்டு விலகி வாழ்ந்தார்கள். அவர்களது கவனம் எல்லாம் அமல்களை சேகரிப்பதிலும் மறுமைக்கு தேவையானதை சேமிப்பதிலும் சொர்க்கத்திற்கான நல்லறங்களை அதிகரிப்பதிலும்தான் இருந்தது.

ஒரே ஓர் ஆடையை துவைத்து உடுத்தும் வழக்கம்தான் அவர்களில் பலரிடம் இருந்தது. பல ஆடைகள் இருந்தால்தானே அவற்றை மடித்துவைப்பதற்குரிய தேவை ஏற்படும்.

ஒரு நாள் உணவு தேவையைவிட குறைவாகவே அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது என்றால் அவர்கள் இந்த உணவு வேண்டும், அந்த உணவு வேண்டும் என்று எப்படி ஆசைப்பட்டிருப்பார்கள்?!

மண் வீட்டில் வசித்து தன் கப்ரை (மண்ணறையை) மறக்காமல் வாழ்ந்தவர்கள் பஞ்சு மெத்தையில் படுத்து இன்பம் தேடுவார்களா?! சொகுசான விரிப்பில் தூங்கினால் சீக்கிரம் எழ முடியாது. பிறகு எப்படி இரவில் அதிக நேரம் வணக்க வழிபாடு செய்யமுடியும்?

எனவே, அவர்கள் தூக்கம் வந்தால்தான் தூங்குவார்கள். பிறகு, முன்நேரத்திலேயே எழுந்து இறைவனுக்கு முன் நின்று விடுவார்கள். களைப்புடன், உடல் அசதியுடன் தூங்கும்போது தான் எங்கு தூங்குகிறோம் என்ற உணர்வு இருக்காது. அப்படிப்பட்ட இடத்தில் தூங்கும்போதுதான் சற்றே அசதி தீர்ந்தவுடன் உடனே கண் விழித்துவிடும். பிறகு, இறைவழிபாட்டில் ஈடுபடமுடியும்.

பொதுவாக ஆடை, ஆபரணம், உணவு, உடை, சொகுசான இல்லம் இவற்றில்தான் மக்களில் பலருக்கு நாட்டம் இருக்கும். ஆனால், மறுமையின் புருஷர்களான அந்த சான்றோர்களோ சொர்க்கத்தின் மீது அவர்களது பார்வை இருந்தது. மறுமையின் இன்பத்தின் மீதே அவர்களது மோகம் இருந்தது. மறுமையின் அழியா செல்வமே அவர்களது தேடலாக இருந்தது. இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை

உலக மோகம் கொண்ட மாந்தர்களின் வாழ்க்கை போன்று இருக்குமா?

நபி ﷺ அவர்கள் தூங்கி எழுந்தால் ஈச்சம் பாயின் கோரைகளின் சுவடுகள் அவர்களது மேனியில் படிந்திருக்கும். அவர்கள் இறந்தபோது இரண்டே போர்வைகள்தான் அவர்களது ஆடையாக இருந்தது. வாழ்நாளெல்லாம் இருவேலையோ இரண்டு நாள்களோ வயிறார அவர்களும் அவர்களது குடும்பத்தாரும் சாப்பிட்டதில்லை.

இந்த வாழ்க்கையைக் கண்கூடாகப் பார்த்த அன்னவரின் தோழர்கள் பலர் அது போன்ற எளிமையான வாழ்க்கையைத்தான் மேற்கொண்டார்கள். கலீஃபாவாக இருந்தும் ஒட்டுப்போடப்பட்ட சட்டை அணிந்து ஜுமுஆ குத்பா பிரசங்கமே நிகழ்த்தினார்கள். பாரசீக, ரோம பேரரசின் மன்னர்களும் தளபதிகளும் அந்த கலீஃபாக்களைக் கண்டு அஞ்சி மரியாதை செய்தும் அந்த கலீஃபாக்களோ மண் வீட்டில் வாழ்ந்தார்கள். சாதாரண பாமர ஏழை வீட்டில் உண்ணப்படும் உணவுகளைத்தான் அவர்களும் உண்டார்கள். அவர்களது விருந்துகள் இன்று நமது விருந்துகளைப் போன்று இருந்ததில்லை.

உலகத்தில் வாழ்ந்தாலும் மறுமைக்காக வாழ்ந்தார்கள்.

ஆட்சியில் வாழ்ந்தாலும் அடிமைகளைப் போன்று வாழ்ந்தார்கள்.

செல்வத்தில் செழித்தாலும் ஏழைகளைப் போன்றே எளியவர்களாக வாழ்ந்தார்கள்.

ஆட்சி அதிகாரத்தில் கொடிகட்டிப் பறந்தாலும்,

தங்கம் வெள்ளியின் குவியல்கள் வீட்டின் முற்றத்தில் குவிக்கப்பட்டாலும்,

தோட்டம் துரவுகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும்

இவை எல்லாம் நிரந்தரம் அல்ல என்பதை உணர்ந்திருந்தார்கள்.

எனவே, சொற்ப உலகமே அவர்களுக்குப் பெரிதாக இருந்தது.

மறுமை நிரந்தரம் என்று நம்பியதால் அதிக அமல்களும் குறைவாகவே அவர்களுக்குத் தோன்றியது.

உலக இன்பத்தில் மூழ்கியவர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

وَالَّذِينَ كَفَرُوا يَتَمَتَّعُونَ وَيَأْكُلُونَ كَمَا تَأْكُلُ الْأَنْعَامُ وَالنَّارُ مَثْوًى لَهُمْ (١٢)

***நிராகரிப்பாளர்கள் இன்பம் அனுபவிக்கிறார்கள் (கால் நடைகள் இன்பம் அனுபவிப்பது போன்று). கால்நடைகள் சாப்பிடுவது போன்று சாப்பிடுகிறார்கள். நரகம்தான் அவர்களுக்குரிய தங்குமிடம். (அல்குர்ஆன் 47:12)***

- **அல்லாஹ்வே! இம்மை இன்பங்களில் மூழ்கி மறுமையை மறந்தவர்களில் எங்களை ஆக்கிவிடாதே!**
- **உலக சுகங்களை அதிகம் விரும்பி அமல்களை கோட்டை விட்டவர்களில் எங்களை ஆக்கிவிடாதே!**

ஆமீன்!

• • •

## உன்னை மறந்து விடாதே!

١٤٥٧ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيٌّ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ قَالَ سَمِعْتُ أَبَا كَعْبٍ الْأَزْدِيَّ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ إِذَا كُنْتَ آمِرًا بِالْمَعْرُوفِ فَكُنْ مِن آخَذِ النَّاسِ بِهِ وَإِلَّا هَلَكْتَ وَإِذَا كُنْتَ مِمَّنْ يَنْهَى عَنِ الْمُنْكَرِ فَكُنْ مِنْ أَنْكَرِ النَّاسِ لَهُ وَإِلَّا هَلَكْتَ .

**1457.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூற தான் கேட்டதாக அபூ கஅப் அஸ்தி கூறுகிறார்: நீ நன்மையை ஏவுபவனாக இருந்தால் மக்களில் அதை அதிகம் எடுத்து நடப்பவர்களில் நீயும் இரு! இல்லையெனில் நீ அழிந்துவிடுவாய். தீமையை தடுப்பவர்களில் நீ இருந்தால் மக்களில் அதை அதிகம் வெறுப்பவர்களில் நீயும் இரு! இல்லையெனில் நீ அழிந்துவிடுவாய்.

**கருத்து:**

நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் இறைத்தூதர்களின் மகத்தான பணியாகும். அந்தப் பணியை செய்கின்ற ஒருவர் தனது வாழ்க்கையிலும் அதை பேணுபவராக இருக்க வேண்டும்.

தான் எந்த நன்மையை பிறருக்கு ஏவுகிறாரோ அதை தனது வாழ்க்கையில் செயல்படுத்துபவராக அவர் இருக்க வேண்டும். அவ்வாறே தான் பிறரை ஒரு தீமையிலிருந்து தடுக்கும்போது அந்த தீமையிலிருந்து அவர் தன்னை தடுத்துக்கொண்டவராக இருக்க வேண்டும்.

தான் ஒன்றை பிறருக்கு ஏவும்போது அதன்படி தான் நடக்காமல் இருப்பது ஒரு அறிஞருக்கு அழகல்ல.

தான் ஒருவரை ஒரு தீமையிலிருந்து தடுக்கும்போது அந்த தீமையை தானே செய்வது மிகக் கேவலமான ஒன்றாகும்.

இப்படிப்பட்டவருக்கு மறுமையில் இழிவான வேதனை உண்டு என்று நபிமொழி கூறுகிறது.

பிறருக்கு நன்மைகளை ஏவிவிட்டு தன்னை மறந்துவிடுவதை அல்குர்ஆன் வன்மையாகக் கண்டிக்கிறது.

சத்திய அழைப்பாளர், நல்ல அறிஞர், உயர்ந்த கல்விமான், உண்மையான பேச்சாளர், ஆக்கப்பூர்வமான ஒரு சீர்திருத்தவாதி, கண்ணியமான ஓர் ஆசிரியர் தனது வாழ்க்கையை ஒரு முன்மாதிரியாக வைத்திருக்க வேண்டும்.

ஆகவே, அவர் பிறருக்கு சொல்வதை முதலில் அவர் செய்ய வேண்டும். பிறரைத் தடுப்பதிலிருந்து அவர் முதலில் விலகி இருக்க வேண்டும்.

அப்போதுதான் அவரின் உபதேசம் நல்ல பலனைத் தரும். மக்களிடம் நன் மதிப்பையும் அல்லாஹ்விடம் உயர்ந்த நற்கூலியையும் அவர் கிடைக்கப் பெறுவார்.

இப்படிப்பட்டவர்களால்தான் சமுதாயத்தில் நல்ல மாற்றமும் சிறந்த சீர்திருத்தமும் ஏற்படும். இவர்களால்தான் கட்டுக் கோப்பான ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.

- **அல்லாஹ் நம்மையும் இத்தகைய நல்லோரில் ஆக்குவானாக! பிறருக்கு நன்மையை ஏவி, தான் அதன் படி நடக்காமல் இருப்பதிலிருந்தும், பிறரை தீமையிலிருந்து தடுத்து அதிலிருந்து தான் விலகாமல் இருப்பதிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!**

ஆமீன்!

• • •

# துன்யாதாரியின் முடிவு*

١٤٥٨ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ عِيسَى الْيَشْكُرِيُّ قَالَ سَمِعْتُ الْحَسَنَ إِذَا ذُكِرَ صَاحِبُ الدُّنْيَا يَقُولُ وَاللهِ مَا بَقِيَتِ الدُّنْيَا لَهُ وَلَا بَقِيَ لَهَا وَلَا سَلِمَ مِنْ تَبِعَتِهَا وَشَرِّهَا وَحِسَابِهَا وَلَقَدْ أُخْرِجَ مِنْهَا فِي خِرْقَةٍ.

**1458.** இப்றாஹீம் இப்னு ஈசா அல் யஷ்குரி ﵀ அவர்கள் அறிவிக்கிறார்கள்: இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களுக்கு முன்னால் துன்யாதாரிகளைப் பற்றிக் கூறப்பட்டால் அவர்கள் கூறுவார்கள்: “அல்லாஹ்வின் மீதாணையாக உலகம் அவனுக்கும் தங்கவில்லை. அவனும் அதற்குத் தங்கவில்லை. அவன் அதன் சிரமத்திலிருந்தும் அதன் தீமையிலிருந்தும் அதன் விசாரணையிலிருந்தும் தப்பிக்க வில்லை. அதிலிருந்து அவன் ஒரு துண்டு துணியில்தான் வெளியேற்றப்பட்டான்.

**கருத்து:**

இவ்வுலக இன்பங்களையும் சுகங்களையும் அடைவதற்காகவே தன் வாழ்நாளை செலவு செய்த ஒருவருடைய உண்மை நிலை என்ன?

உலக முன்னேற்றமே தனது குறிக்கோள் என வாழ்ந்தவருடைய முடிவுதான் என்ன?

இவ்வுலகின் பெயரும் புகழும்தான் தனது இலட்சியம் என இருந்தவரின் கதிதான் என்ன?

---

* உலகத்தையும் அதன் செல்வங்களையும் அதிக பிரியம் கொண்டவர்.

தங்கம், வெள்ளி, சொத்து, சுகம், தோட்டம், துரவு இவைதான் எல்லாம் என நினைத்தவரின் முடிவுதான் என்ன?

இவர்கள் இம்மைக்காக மறுமையை மறந்தார்கள். மறுமையை புறக்கணித்தார்கள். மறுமையை அலட்சியம் செய்தார்கள். மறுமையை மறுத்தார்கள்.

இப்படியாக உலகத்திற்கென்றே வாழ்ந்த இவர்கள் இவ்வுலகில் என்னதான் அனுபவித்தார்கள்!? எவ்வளவு நாள் சுகமாக இருந்தார்கள்!? எத்தனை காலம் நிம்மதியாக இருந்தார்கள்!?

இவர்களுக்கு பிரச்சனைகள் வரவில்லையா?

துன்பங்கள், துயரங்கள், நோய்நொடிகள் இவர்களை அண்ட வில்லையா?

இவர்களது வாலிபம் இவர்களுக்கு நீடித்து இருந்ததா? இவர்களது சுகம் இவர்களுக்கு என்றென்றும் இருந்ததா? இவர்களது உடல் ஆரோக்கியம் இவர்களுக்கு நிலையாக இருந்ததா?

இவர்களது மனநிம்மதியும் உயிர்ப்பாதுகாப்பும் நிரந்தர உத்திரவாதம் பெற்றவையா?

இவர்களது செல்வம் தீராதவையா? இவர்களது ஆட்சி அழியாதவையா?

இவர்களுக்கு இவ்வுலகில் எதுதான் நிரந்தரம்? இவ்வுலகை இவர்கள் எவ்வளவு நம்பினார்கள்!? இதை இவர்கள் எவ்வளவு நேசித்தார்கள்! இதற்காகவே இவர்கள் வாழ்ந்தார்கள்!

என்னே ஆச்சரியம்!!

துன்யாவிற்காக வாழ்ந்த இவர்கள் அந்த துன்யாவில் நிரந்தரமாக தங்கி இருக்க முடியவில்லையே!

தனக்காகவே இவன் வாழ்ந்தான் என்று இந்த துன்யாவும் அவனிடம் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. அப்படி இருக்கவும் செய்யாது (அவனை நிரந்தரமாக வைத்துக் கொள்ளப் போவதில்லை, அது

சாத்தியம் கிடையாது.) துன்யாவை சேகரிக்கத் துடிப்பவன் படுகின்ற அல்லல்கள் கொஞ்சமா நஞ்சமா!

காசு பணத்தை அள்ளிக் குவிக்கவேண்டும் என்று வெறிகொண்ட ஒருவன் சந்திக்கின்ற கேவலத்தை நாம் வருணிக்க முடியுமா?

காசுக்காக இன்பத்தை இழந்தான், செல்வத்திற்காக மன நிம்மதியை இழந்தான், உலகத்திற்காக உயிரையே அர்ப்பணித்தான்.

பிறகு, இன்பத்திற்காக காசை இழப்பான். மன நிம்மதிக்காக செல்வத்தை இழப்பான்.

உயிருக்காக உலகத்தையே அர்ப்பணிக்கத் தயாராகுவான். ஆனால், இந்த உயிர் அதன் தவணை வந்ததும் இவனை விட்டுப் பிரிந்துவிடும். இவனது உடல் ஒரு கஃபன் துணியில் சுருட்டப்படும்.

இவனது செல்வங்கள், ஆட்சி அதிகாரங்கள், சொத்து சுகங்கள், மாட மாளிகைகள், தோட்டம் துரவுகள், தங்கம் வெள்ளியின் குவியல்கள், பணக்கட்டுகள், மனைவி மக்கள் எல்லாம் இவனை விட்டு அகன்று விடுவார்கள். யாரும் உடன் செல்ல மாட்டார்கள். செல்லவும் முடியாது.

பார்த்தீர்களா! துன்யாதாரியின் பரிதாபமான முடிவை!

சிந்தித்தீர்களா! இந்த உலகவாதியின் உருக்குலைந்த நிலையை! கனவைப் போன்று முடிந்தது இவரது வாழ்க்கை.

இப்போது யதார்த்தத்தை அவன் சந்திக்கப் போகிறான். நிரந்தரத்தை அவன் காணப் போகிறான். முடிவில்லா வாழ்நாளை அவன் பார்க்கப் போகிறான். கனவின் இன்பங்களைக் கண்டு ஏமாந்தவன் போலல்லவா இந்த துன்யாதாரி ஏமாந்து போய்விட்டான்.

- **லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்**
- **அல்லாஹ்வே நீதான் எங்களை இரட்சிக்க வேண்டும். நீதான் எங்களுக்கு உதவ வேண்டும்.**

ஆமீன்!

• • •

# கெடுக்கும் துன்யா* !?

١٤٥٩ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا صَفْوَانُ عَنْ هِشَامٍ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ «وَاللهِ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا وَإِنْ كَانَ أَحَدُهُمْ لَيَرِثُ الْمَالَ الْعَظِيمَ قَالَ وَإِنَّهُ وَاللهِ لَمَجْهُودٌ شَدِيدُ الْجَهْدِ قَالَ فَيَقُولُ لِأَخِيهِ يَا أَخِي إِنِّي قَدْ عَلِمْتُ أَنَّ ذَا مِيرَاثٌ وَهُوَ حَلَالٌ وَلَكِنِّي أَخَافُ أَنْ يُفْسِدَ عَلَيَّ قَلْبِي وَعَمَلِي فَهُوَ لَكَ لَا حَاجَةَ لِي فِيهِ قَالَ فَلَا يُرْزَأُ مِنْهُ شَيْئًا أَبَدًا قَالَ وَهُوَ وَاللهِ مَجْهُودٌ شَدِيدُ الْجَهْدِ قَالَ وَسَمِعْتُ الْحَسَنَ يَقُولُ وَاللهِ أَدْرَكْتُ أَقْوَامًا كَانُوا فِيمَا أَحَلَّ اللَّهُ لَهُمْ أَزْهَدَ مِنْكُمْ فِيمَا حَرَّمَ عَلَيْكُمْ وَلَقَدْ كَانُوا أَشْفَقَ مِنْ حَسَنَاتِهِمْ أَنْ لَا تُقْبَلَ مِنْهُمْ مِنْكُمْ أَنْ تُؤَاخَذُوا بِسَيِّئَاتِكُمْ.

**1459.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுவதை தான் செவிமடுத்ததாக ஹிஷாம் அறிவிக்கிறார்:

“அல்லாஹ்வின் மீதாணையாக நான் பல மக்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் பெரும் செல்வத்திற்கு வாரிசாக ஆகுவார். அல்லாஹ்வின் மீதாணையாக அவர் மிகுந்த சிரமத்திற்குள்ளானவராக (-வறுமையில்) இருப்பார். இருந்தும் அவர் தனது சகோதரரிடம் கூறுவார், “என் சகோதரா! நிச்சயமாக இது வாரிசு சொத்தாகும். அது எனக்கு ஹலால்தான் (-அனுமதிக்கப்பட்டதுதான்) என்று எனக்குத் தெரியும். எனினும், இந்தச் செல்வம் என் கல்பையும்

* உலகமும் அதன் செல்வங்களும்

(-என் உள்ளத்தையும்) என் அமலையும் (-என் செயலையும்) கெடுத்துவிடும் என்று நான் பயப்படுகிறேன்.

ஆகவே, இதில் எனக்கு நாட்டம் இல்லை. (எனவே, நீ எடுத்துக் கொள்!) என்று கூறுவார். ஆனால், அவரது சகோதரரும் கடுமையான சிரமத்தில் (-வறுமையில்) இருந்தும் அவர் அதிலிருந்து எதையும் எடுக்கமாட்டார்.

மேலும், இமாம் ஹசன் பஸரி ﵀ கூறியதை தான் செவிமடுத்ததாக ஹிஷாம் கூறுகிறார்:

“அல்லாஹ்வின் மீதாணையாக நான் பல மக்களை பார்த்திருக்கிறேன், அவர்கள் அல்லாஹ் தங்களுக்கு ஹலால் (-அனுமதிக்கப்பட்டதாக) ஆக்கியவற்றில் அறவே பற்றில்லாதவர்களாக இருந்தார்கள், நீங்கள் உங்கள் மீது ஹராம் (தடுக்கப்பட்டதாக) ஆக்கப்பட்டதில் பற்றில்லாதவர்களாக இருப்பதைவிட.

மேலும், அவர்கள் தங்கள் நன்மைகள் ஏற்றுக் கொள்ளப்படாதோ என்று பயப்படுவார்கள், நீங்கள் உங்கள் பாவத்தால் தண்டிக்கப் படுவதை நீங்கள் பயப்படுவதை விட.

**கருத்து:**

அக்காலத்து சான்றோரின் உலகப் பற்றின்மையை இந்த அறிவிப்பு நமக்கு நன்கு உணர்த்துகிறது. உலகத்தின் தேவை யாருக்கு இல்லை. உலக செல்வத்தின் விருப்பம் யாருக்கு இல்லை. ஆனால், சான்றோர் எப்படிப்பட்டவர்கள்!

இதோ அவர்களுக்கும் இக்கால மக்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைப் பாருங்கள்.

அற்பப் பொருளுக்காகச் சண்டையிடுகின்ற இக்கால மக்கள் எங்கே! பெரும் செல்வத்தையும் பிறருக்கு விட்டுக்கொடுத்த அக்காலச் சான்றோர் எங்கே!

தான் செல்வந்தனாக இருக்க, தன் சகோதரன் ஏழையாக இருக்க, தன் சகோதரனுக்குக் கிடைக்க வேண்டிய சொத்துக்களையும் செல்வங்களையும் அவனுக்குக் கொடுக்க மறுக்கின்ற இக்கால மக்கள் எங்கே!

தான் வறுமையில் இருந்தும் தனது சொத்துகளை எல்லாம் தனது சகோதருக்கு மனமுவந்து விட்டுக்கொடுக்கும் மாண்புடைய சான்றோர் எங்கே!

ஹராமான செல்வத்தை எல்லாம் அள்ளி அனுபவிக்க துடிக்கின்ற இக்கால மக்கள் எங்கே! ஹலாலான செல்வத்தைக் கூட தனக்கு வேண்டாம் என்று விடக்கூடிய சான்றோர் எங்கே!

உள்ளம் கெட்டால் என்ன! அமல் கெட்டால் என்ன! எதை பற்றியும் கவலைப்படாத இக்கால மக்கள் எங்கே! சிறு கறையும் உள்ளத்தில் படாமல் உள்ளத்தை பாதுகாக்கப் பாடுபட்ட அந்த சான்றோர் எங்கே!

செல்வம் எப்படியாவது கிடைக்க வேண்டும் என்று அலைகின்ற இக்காலத்தவர்கள் எங்கே! ஹலாலான முறையில் செல்வம் வந்தாலும் அது வேண்டாம் என்று ஓடி ஒதுங்கிய அந்த சான்றோர் எங்கே!

பிறரின் செல்வத்தை அபகரிக்க முயற்சிக்கின்ற இக்காலத்தவர்கள் எங்கே! பிறர் மனமுவந்து கொடுத்தாலும் வேண்டாம் என்று சொன்ன அந்த சான்றோர் எங்கே!

செல்வ செழிப்பில் இருந்துகொண்டு இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்று பேராசை பிடித்த இக்காலத்தவர்கள் எங்கே! வறுமையில், பசி பட்டினியில், நெருக்கடியில் வாழ்ந்தாலும் 'போதும்' என்ற மனம் படைத்த அந்த சான்றோர் எங்கே!

ஹராமை விட்டு விலகி இருக்கிறோம் என்று பலர் பெருமையாகச் சொல்கிறார்கள் இன்று. இதில் என்ன பெருமை உள்ளது. அவர்கள் ஹராமிலிருந்து விலகித்தானே இருக்க வேண்டும். ஒரு முஸ்லிம் எப்படி ஹராமின் பக்கம் நெருங்குவார்!? ஒரு முஸ்லிம் எப்படி

ஹராமை செய்யமுடியும்!? நமது சான்றோரோ மறுமையின் பயத்தினால், விசாரணையின் அச்சத்தினால் பல ஹலாலான இன்பங்களையே விட்டு விலகி இருந்தார்கள். மறுமையின் கேள்வி கணக்கை பயந்து அனுமதிக்கப்பட்ட சுகங்களையும் வசதிகளையும் கூட தவிர்த்தனர் அந்த சான்றோர்!

பாவம் செய்துவிட்டு பயப்படுவதை தக்வா என்று இன்றைய மக்கள் கூறுகின்றனர். பாவம் செய்தவர் பயந்துதானே ஆகவேண்டும். எப்படி பயப்படாமல் இருக்க முடியும். இதில் என்ன அதிசயம் இருக்கிறது. நமது சான்றோரோ பாவமே செய்யாமல் வாழ்ந்ததுடன், நன்மைகள் செய்து பயந்தனர். தாம் செய்த நன்மை சரியானதா? அதில் முகஸ்துதி கலந்து விட்டதா? அந்த நன்மையை சரியாக செய்தோமா? ஒழுக்கங்களைப் பேணி செய்தோமா? அல்லாஹ் விரும்புகின்ற முறையில் செய்தோமா? சுன்னத்தைப் பேணி செய்தோமா? அந்த நன்மை அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்டதா? இப்படி அவர்களின் பயம் இருந்தது.

அந்த சான்றோர் எங்கே! நாம் எங்கே! அவர்கள் அவர்கள்தான். அவர்களுக்குச் சமம் அவர்கள்தான்.

அவர்களது ஈமான் சுத்தமாக இருந்தது; அமல் அழகாக இருந்தது; குணம் உயர்வாக இருந்தது; கொள்கை பலமாக இருந்தது; அமல் அதிகமாக இருந்தது; பயம் மிகுதியாக இருந்தது; மறுமையின் கவலை மேலோங்கி இருந்தது.

இன்று நமது நிலை என்ன? நாம் ஏன் நமது சான்றோரின் அடிச்சுவடுகளை பின்பற்றுவதில்லை! நமக்கு என்ன நேர்ந்தது?

அந்த சான்றோரின் குறைகளை நாம் மறைக்கக் கடமைப் பட்டுள்ளோம். ஆனால், சிலர் அவற்றை பகிரங்கப்படுத்தி அவர்களை விமர்சிக்கிறார்கள். அந்த சான்றோரை நன்மையில் பின்பற்ற வேண்டும் என்று நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம். ஆனால், நம்மில் சிலர் அவர்களைப் புறக்கணித்துவிட்டு யூதர்களையும் கிருஸ்தவர்களையும் பின்பற்றுகின்றனர்.

என்னே முரண்பாடு! பழிக்கப்பட வேண்டியவர்கள் (-யூதர்கள், கிருஸ்தவர்கள், பாவிகள், இப்படியாக உள்ள பலர்) போற்றப்படுகிறார்கள்! போற்றப்பட வேண்டியவர்கள் (-ஸஹாபாக்கள், தாபிஈன்கள், இமாம்கள், நல்ல மார்க்க அறிஞர்கள், அழைப்பாளர்கள், இப்படியாக பலர்) தூற்றப்படுகிறார்கள்!

சஹாபாக்கள் நபியை நேசித்தார்கள். எனவே, நபியைப் போன்று வாழ்ந்தார்கள்; நபியைப் பின்பற்றினார்கள். சஹாபாக்களை தாபீஈன்கள் நேசித்தார்கள். எனவே, அவர்கள் சஹாபாக்களை போன்று வாழ்ந்தார்கள். அவர்களைப் பின்பற்றினார்கள்.

இன்று யூதர்களையும், கிருஸ்தவர்களையும், பாவிகளையும் நடிகர் நடிகைகளையும் வீண் விளையாட்டு விளையாடுகின்ற விளையாட்டாளர்களையும் பலர் நேசிக்கின்றார்கள். எனவே, அவர்களைப் பின்பற்றுகிறார்கள்.

அந்த சான்றோரை இன்று மக்கள் உண்மையாக நேசித்து இருந்தால் அவர்களைப் போன்றே இவர்களும் வாழ்ந்திருப்பார்கள்.

**அல்லாஹ்வே!**

- **நீ விரும்பியவர்களின் வாழ்க்கையை எங்களுக்குத் தா!**
- **நீ நேசித்தவர்களின் பாதையை எங்களுக்குக் காண்பி!**
- **நீ திருப்தி அடைந்தவர்களின் வழியில் எங்களைச் செலுத்து!**
- **நீ ஏற்றுக்கொண்டவர்களின் பண்பை எங்களுக்குக் கொடு!**
- **நீ தேர்ந்தெடுத்தவர்களின் தூய்மையை எங்களுக்கு வழங்கு!**
- **நீ நேசித்த ஸஹாபாக்கள், தாபியீன்கள், சான்றோர்களை அதிகமதிகம் நேசிக்கும் உள்ளத்தைத் தா!**

ஆமீன்!

• • •

## சான்றோரின் தயக்கம்!

١٤٦٠ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا وَصَحِبْتُ طَوَائِفَ مِنْهُمْ مَا سَأَلُوا اللهَ عَزَّ وَجَلَّ الْجَنَّةَ قَطُّ حَيَاءً مِنَ اللهِ عَزَّ وَجَلَّ.

**1460.** இமாம் ஹசன் பஸரி ﷺ அவர்களிடமிருந்து ஹிஷாம் அறிவிக்கிறார்:

நான் (நல்லோரில்) பல மக்களை பார்த்திருக்கிறேன். அவர்களில் சில கூட்டத்தினருடன் பழகியும் இருக்கிறேன். அல்லாஹ்வின் முன்னிலையில் வெட்கத்தால் (தங்களுக்காக) அவர்கள் ஒரு போதும் சொர்க்கத்தைக் கேட்டதில்லை.

**கருத்து:**

இமாம் அவர்களின் இக்கூற்று மிகவும் ஆழமான ஒன்றாகும். இதற்கு பொருள் சொர்க்கத்தை அவர்கள் வேண்டவே இல்லை என்பதல்ல அல்லது சொர்க்கத்தை கேட்கக் கூடாது என்பதல்ல.

இறைநம்பிக்கையும் இறையச்சமும் மிகுதியாக மிகுதியாக உள்ளம் ஒளிரத் தொடங்குகிறது. இறைவனின் அருள்களை அறியத்தொடங்குகிறது. இறைநெருக்கத்தை உணரத் தொடங்குகிறது. இப்படிப்பட்ட உள்ளம் எப்போதும் இறைவனை அவனது மகத்தான பண்புகளோடும் உயர்ந்த தன்மைகளோடும்தான் நினைவு கூறும்.

இத்தகையவர்களைப் பற்றித்தான், ***“அவர்களுக்கு முன்***

***அல்லாஹ்வை நினைவு கூறப்பட்டால் அவர்களது உள்ளங்கள் நடுங்கிவிடும்" (அல்குர்ஆன் 22 : 35)***

***"அவர்களுக்கு முன் ரஹ்மானுடைய வசனங்கள் ஓதப்பட்டால் அழுதவர்களாக சிரம்பணிந்து வீழ்ந்து விடுவார்கள்" (அல்குர்ஆன் 19 : 58)*** என்று அல்லாஹ் கூறுகிறான்.

இவர்களைப்பற்றித்தான், ***"இரவில் படுக்கைகளை விட்டு அவர்களது விலாக்கள் விலகி இருக்கும். பயந்தும் ஆசைவைத்தும் தங்கள் இறைவனை அழைப்பார்கள்" (அல்குர்ஆன் 32 : 16)*** என்று அல்லாஹ் வர்ணிக்கின்றான்.

இந்த மேன்மக்களைப் பற்றித்தான், ***"அல்லாஹ் மிக அழகிய பேச்சை வேதமாக, ஒன்றுக்கொன்று ஒப்பான, திரும்பத் திரும்ப ஓதப்படும் வசனங்களாக இறக்கினான். தங்கள் இறைவனை அஞ்சுகின்றவர்களின் தோல்கள் அதனால் சிலிர்த்துவிடும். பிறகு, அவர்களது தோல்களும் உள்ளங்களும் அல்லாஹ்வின் நினைவின் பக்கம் மென்மையடைகின்றன." (அல்குர்ஆன் 39 : 23)*** என்று புகழ்கின்றான்.

நபித்தோழர்கள் இப்படிப்பட்ட மேன்மக்களாக திகழ்ந்தார்கள் என்பதில் முஃமின்களுக்கு சந்தேகம் இருக்காது.

எனவேதான் நபியவர்களின் உரையை அவர்கள் செவிமடுக்கும் போது தேம்பித் தேம்பி அழுதார்கள், குர்ஆன் ஓதும்போது அழுதார்கள், தொழும்போது அழுதார்கள், திக்ரு செய்யும் போது அழுதார்கள்.

இந்தப் பண்புடையவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு முன்னால் தங்களது அமல்களை மிக அற்பமாகக் கருதுவார்கள். தங்களின் நன்மைகளை குறைத்தே மதிப்பிடுவார்கள். தங்களது பாவங்களை எண்ணி பயப்படுவார்கள். அல்லாஹ்விடம் சொர்க்கத்தைக் கேட்கும் அளவிற்கு தன்னிடம் என்ன நன்மை இருக்கிறது? தன்னிடம் என்ன

புண்ணியம் இருக்கிறது? தன்னிடம் என்ன தகுதி இருக்கிறது? என்று கருதுவார்கள்.

இதோ அபூ பக்ர் ﷺ நான் ஒரு புல்லாக இருக்கக் கூடாதா? நான் ஒரு குருவியாக இருக்கக்கூடாதா? என்று ஏன் பயந்தார்கள்?

இப்படி நல்லோர் எல்லோரும் பயந்தார்களே, ஏன்? இந்த பயம்தான் அவர்களுக்கு அல்லாஹ்விடம் நாம் எப்படி சொர்க்கத்தைக் கேட்பது என்ற வெட்கத்தை ஏற்படுத்தியது.

அவர்கள் தங்களது அமல்களால் அல்லாஹ்விடம் சொர்க்கத்தைக் கேட்கவில்லை. தாங்கள் சொர்க்கத்திற்குத் தகுதியானவர்கள் என்று அவர்கள் எண்ணவும் இல்லை. மாறாக அல்லாஹ்விடம் அவனது அருளால் அவனது சொர்க்கத்தை வேண்டினார்கள். நரகத்திலிருந்து பாதுகாவல் தேடினார்கள்.

இதுதான் அவர்களது நிலை.

நாமோ ஒரு நன்மையை செய்துவிட்டால் வாழ்நாள் எல்லாம் நாம் செய்த பாவங்களை மறந்து விட்டு நம்மை நாமே சொர்க்கவாசிகள் என்று முடிவு செய்துவிடுகிறோம்.

ஒரு முறை பாவமன்னிப்புக் கேட்டுவிட்டால் இனி நமக்கு நரகமே இல்லை என்று உறுதி செய்துவிடுகிறோம்.

நமது நன்மைகளை பெரிதாக மதிக்கிறோம். நமது பாவங்களை மிக அற்பமாகக் கருதுகிறோம். அப்படி இருக்க நமக்கு எப்படி அல்லாஹ்விடம் துஆ கேட்கும்போது பணிவும் வெட்கமும் வரும்!? அடக்கமும் நாணமும் வரும்!?

எவ்வளவு பெரிய ஏமாற்றத்தில் இருக்கிறோம் பாருங்கள்!

நமக்கும் அவர்களுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்கிறது!

- **அல்லாஹ்வே! உன்னை அறிந்தவர்களில், உன் கண்ணியத்திற்கு முன்னால் பணிந்தவர்களில், உன் கம்பீரத்திற்கு முன்னால் நடுங்கியவர்களில், உன் மேன்மைக்கு முன்னால் குனிந்தவர்களில், உன் ஆற்றலை உணர்ந்தவர்களில், உனது பயத்தாலும் அச்சத்தாலும் அழுபவர்களில் எங்களையும் நீ ஆக்குவாயாக!**
- **உன்னை அறியாதவர்களில் உன் உயர்ந்த பண்புகளை உணராதவர்களில் எங்களை சேர்த்து விடாதே!**

ஆமீன்!

• • •

## யாசிப்பவரை விரட்டாதீர்!

١٤٦١ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ وَاللهِ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا مَا كَانُوا يَرُدُّونَ سَائِلًا إِلَّا بِشَيْءٍ وَلَقَدْ كَانَ الرَّجُلُ مِنْهُمْ يَخْرُجُ فَيَأْمُرُ أَهْلَهُ أَنْ لَا يَرُدُّوا سَائِلًا .

**1461.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறியதாக ஹிஷாம் அறிவிக்கிறார்:

நான் பல மக்களை பார்த்திருக்கிறேன். யாசிப்பவருக்கு அவர்கள் எதையும் கொடுக்காமல் அவரை திருப்பியனுப்ப மாட்டார்கள். அந்த (மேன்)மக்களில் ஒருவர் (வீட்டிலிருந்து) வெளியே சென்றாலும் தனது குடும்பத்தாருக்குக் கட்டளையிட்டுச் செல்வார், “அவர்கள் (ஏதும் கொடுக்காமல்) யாசிப்பவரை திருப்பியனுப்பக்கூடாது என்று”

**கருத்து:**

அல்லாஹ் நமக்கு செல்வத்தைக் கொடுத்ததே அதிலிருந்து தேவையுள்ள அவனது அடியார்களுக்கு நாம் கொடுப்பதற் காகத்தான். தேவையுள்ளவர்களில் இரு பிரிவினர் உள்ளனர். ஒருவர் தன் தேவையை பிறரிடம் கேட்டுவிடுவார். மற்றொருவர் வெட்கத்தால் பிறரிடம் யாசிக்க மாட்டார்.

நல்ல நம்பிக்கையாளர்கள் எப்போதும் தாராள மனதுடையவர்களாக, விசாலமான உள்ளமுடையவர்களாக, பெருந்தன்மையான எண்ண முள்ளவர்களாக, வாரி வழங்கும் வள்ளல் குணமுடையவர்களாக இருப்பார்கள்.

கருமித்தனம், கஞ்சத்தனம், உலோபித்தனம், இறுகிய உள்ளம், கல்நெஞ்சம் இவற்றிலிருந்து அவர்கள் வெகுதூரம் விலகி இருப்பார்கள்.

கொடுத்தால் வளரும் என்று நம்புகின்றவர்கள் முஃமின்கள்.

கொடுத்தால் குறையும் என்று நம்புகின்றவர்கள் முனாஃபிக்குகள்.

வழங்கி வாழ்பவர்கள் இறைநேசர்கள்.

பிடுங்கி வாழ்பவர்கள் சாத்தானியர்கள்.

ஏழைகளின் நண்பர்களாக இருப்போர் நல்லோர்.

ஏழைகளின் பகைவர்களாக இருப்போர் தீயோர்.

இன்முகத்தோடு தருவார்கள் இறையடியார்கள்.

கல்நெஞ்சத்தோடு விரட்டுவார்கள் இப்லீசியர்கள்.

கொடுக்கத் தூண்டுவார்கள் பக்திமான்கள்.

கொடுப்பதைத் தடுப்பார்கள் பாவிகள்.

தனக்கு இல்லை என்றாலும் ஈகை செய்வார்கள் மேன்மக்கள்.

மேல்மிச்சமானதையும் கொடுக்க மறுப்பார்கள் ஈனர்கள்.

தடுப்பதைவிட தரித்திரியம் வேறு இல்லை என்று எண்ணுவார்கள் சான்றோர்கள்.

கொடுப்பதைவிட வேறு ஒரு சோதனை இல்லை என்று உணர்வார்கள் உலோபிகள்.

இறைத் தூதரை விட கொடைவள்ளல் யார் இருக்க முடியும்! உடுத்திய உடையையும் உண்ண இருக்கும் உணவையும் அள்ளிக் கொடுக்கின்ற உத்தமர் அல்லவா நமது நபி ﷺ அவர்கள்.

இல்லை என்று ஒருபோதும் கூறாத உன்னதர் அல்லவா நமது தூதர்.

பிறர் மகிழ்வதில் தனது இன்பத்தைக் கண்ட கண்ணியவான் அல்லவா நமது தூதர்.

செல்வம் கொழித்தபோது கூட தனக்கென வைத்துக் கொள்ளாத வள்ளல் அல்லவா நமது தூதர்.

இதோ அவரது வழியில் வந்த அந்த மேன்மக்கள் - நபித் தோழர்களும் தாபிஈன்களும் வேறு எப்படி இருப்பார்கள்?!

கலீஃபாவாக ஆட்சிசெய்தாலும் ஏழையாக வாழ்ந்தார்களே அவர்கள்!

மக்கள் தாங்கள் அனுபவித்து கடனாளியாக ஆனார்கள் என்றால் இவர்கள் பிறருக்கு கொடுத்துக் கொடுத்து கடனாளியாக ஆனார்கள்.

பல்லாயிரம் தங்க நாணயங்கள் படுக்கை அறையில் குவிந்தாலும் மாலைக்குள் வறியவர்களுக்கும் உறவுகளுக்கும் தேவையுள்ளோருக்கும் கொடுத்துத் தீர்த்த மாமனிதர்கள் அல்லவா அந்த சஹாபாக்களும் தாபிஈன்களும்.

ஏழையின்றி உணவு விரிப்பில் உட்காராத அந்த மக்கள் எங்கே!

யாரும் விருந்தினர் வரக்கூடாது என்று எண்ணுகின்ற இக்காலக் கருமிகள் எங்கே!

அழைப்பவரைத்தான் அழைப்பார்கள் இக்காலத்தவர்கள்.

(ஒருவர் தன்னை அழைத்து விருந்து கொடுத்தால் இவரும் அவரை அழைத்து விருந்தளிப்பார்.)

அறியாதவரையும் அழைத்து உபசரிப்பார்கள் அக்கால மேன்மக்கள்.

உறவுகளுக்கே கொடுக்காத கேடுகெட்டவர்கள் இக்கால ஜென்மங்கள்.

அந்நியரையும் பங்காளிகளாக ஆக்கிக்கொண்டவர்கள் அக்கால மேன்மக்கள்.

அல்லாஹ் கொடுத்த செல்வத்தை தனக்கே செலவழித்து தீர்ப்பவர்கள் இக்கால மக்கள்.

தன்னிடம் இருக்கின்ற அல்லாஹ்வின் அருள்களை பாருலக மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தவர்கள் அக்கால மேன்மக்கள்.

இதோ பாருங்கள்! தான் வீட்டில் இல்லை என்றாலும் தன் வீட்டைத் தேடி வருகின்ற யாசகர்களை அவர்களுக்குக் கொடுக்காமல் திருப்பி அனுப்பக் கூடாது என்று உபதேசிக்கின்ற அந்த உத்தமர்கள் எங்கே!

யார் எதைக் கேட்டாலும் கொடுக்காதே என்று கத்துகின்ற இக்கால கல்நெஞ்சக்காரர்கள் எங்கே!

தனது வாசலை என்றும் அடைக்காத அந்த கொடைவள்ளல்கள் எங்கே!

காவலாளியை நிறுத்திவைத்து, வருபவர்களைத் தடுத்து விரட்டு என்று ஆணைப் பிரப்பிக்கின்ற இக்கால அரக்கர்கள் எங்கே!

தான் வீட்டில் இல்லை என்றாலும் வீட்டைத் தேடி வருபவர்களுக்கு 'கொடு' என்று உத்தரவிடும் அந்த உன்னதவான்கள் எங்கே!

தான் இருந்தாலும் "இல்லை" என்று சொல்லச் சொல்கின்ற அற்பர்கள் எங்கே!

தேடி வந்தவர்களையும் விரட்டுகின்ற வீணர்கள் அல்லவா இக்கால மக்கள்!

தூரத்தில் இருப்பவர்களையும் தேடிச்சென்று கொடுக்கின்ற கொடைவள்ளல்கள் அல்லவா அந்த மாண்பாளர்கள்!

உயிர்பிரியும் நேரத்திலும் பிறர் உயிர் காப்பாற்றிய அந்த மேலானவர்கள் எங்கே!

பிறர் உயிர் பிரிவதைப் பார்த்தாலும் உள்ளம் உருகாத கல் நெஞ்சர்கள் எங்கே!

அற்பப் பொருளையும் தானமாகவோ இரவலாகவோ கொடுக்காமல் தடுக்கின்றவர்களுக்குக் கேடுதான் என்று குர்ஆன் கூறுகிறதே, சிந்தித்தோமா!?

தடுப்பது ஒரு நோய்!

கொடுப்பது நோய் நிவாரணி!

கருமித்தனம் ஒரு வேதனை!

வள்ளல்தனம் ஒரு சாதனை!

கஞ்சத்தனம் ஒரு துன்பம்.

ஈகை ஒரு இன்பம்.

- **அல்லாஹ்வே! கொடுப்பவர்களில் எங்களை ஆக்கு!**
- **அல்லாஹ்வே! ஈகை குணமுள்ளவர்களில் எங்களை ஆக்கு!**
- **கருமிகளாகவோ கஞ்சர்களாகவோ கல்நெஞ்சக்காரர்களாகவோ எங்களை ஆக்கிவிடாதே!**

ஆமீன்!

# உத்தமர்களின் வாழ்வும் உலகத்தார்களின் நிலையும்!

١٤٦٢ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا وَكِيعٌ حَدَّثَنَا عَبْدُ الْوَاحِدِ بْنُ زَيْدٍ عَنِ الْحَسَنِ قَالَ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا إِنْ كَانَ الرَّجُلُ مِنْهُمْ لَيَأْتِي عَلَيْهِ سَبْعُونَ سَنَةً مَا اشْتَهَى عَلَى أَهْلِهِ شَهْوَةَ طَعَامٍ وَلَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا يَأْتِي عَلَى أَحَدِهِمْ سَبْعُونَ سَنَةً مَا تَوَسَّدَ وِسَادَةً وَإِنْ كَانَ أَحَدُهُمْ لَيَأْكُلُ الْأَكْلَةَ يُرِيدُ أَنَّهَا حَجَرٌ فِي بَطْنِهِ.

**1462.** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் கூறியதாக அப்துல் வாஜிது இப்னு ஸைது அறிவிக்கிறார்:

நான் பல மக்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் எழுபது ஆண்டுகளில் (ஒரு முறை கூட) தனது குடும்பத்தாரிடம் ஓர் உணவைக் கூட ஆசைப்பட்டதில்லை. இன்னும், பல மக்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் எழுபது ஆண்டுகளில் (ஒருமுறை கூட) தலைக்குத் தலையணை வைத்ததில்லை. அவர்களில் ஒருவர் தான் சாப்பிடுகின்ற உணவு தனது வயிற்றில் ஒரு கல்லாக ஆகிவிட வேண்டுமென்று விரும்புவார்.

**கருத்து:**

உலகப் பற்றில்லாத உத்தமர்களின் வாழ்க்கையை நாம் எப்படி யூகிக்க முடியும். உலக இன்பத்திலேயே மூழ்கி வாழும் நம் போன்றவர்கள் அவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூற என்ன தகுதி உள்ளது!? துன்யாவின் சுகபோகத்தில் மனதை பறிகொடுத்துவிட்ட

நம்மவர்களுக்கு அந்த மறுமையாளர்களின் வாழ்க்கையை எப்படி புரிய முடியும்.

நமது கண்களை உலக இன்பங்கள் மறைத்துள்ளன. நமது பார்வைகள் மீது அற்ப சுகங்கள் திரையிட்டுள்ளன. உள்ளங்களில் துன்யாவின் கவலைகளும் தங்கம் வெள்ளியின் ஆசைகளும் மண்ணின், மங்கையின் இச்சைகளும் நிரம்பி இருந்தால் மறுமையின் அமல்களில் எதைத்தான் புரிய முடியும்?

ஒளியில்லாத வீட்டில், தொலைத்ததைத் தேட முடியுமா!?

கடலில் கரைந்ததைக் கண்டு பிடிக்க முடியுமா!?

ஆகாயத்தில் வட்டமிடுகின்ற பறவைகளை எண்ணி விட முடியுமா!?

அப்படித்தான் இறைத்தூதர்கள் இன்னும் அவர்கள் வழி வாழ்ந்த சான்றோரின் சரித்திரங்களை எல்லாம் வயிறுமுட்ட உண்டு, தூங்கிய கழுதைகளைப் போல், மிருகங்களைப் போல் இச்சைகளுக்காகவே வாழ்கின்றவர்கள் எப்படிப் புரிய முடியும்?

ஒருமுறை மறுமைக்காக வாழ்ந்து பாருங்கள்! பின்னர், அறிந்து கொள்வீர்கள்!

ஒருமுறை இறையன்பையும் இறைத்தூதரின் நேசத்தையும் உள்ளத்தில் உணர்ந்து பாருங்கள்! பின்னர், புரிந்து கொள்வீர்கள்!

உள்ளத்தை உலகமோகத்தின் அழுக்குகளிலிருந்து சுத்தப் படுத்துங்கள்! பின்னர், தெரிந்து கொள்வீர்கள்!

மறுமையின் கவலை மிகைத்திருந்தவர்கள் பசிக்குச் சாப்பிடு வார்களா? அல்லது ருசிக்குச் சாப்பிடுவார்களா? அல்லது வாழ்க்கையை அனுபவிப்பதற்காகச் சாப்பிடுவார்களா? அல்லது உயிர் வாழ்வதற்காக மட்டும் சாப்பிடுவார்களா?

வகைவகையான உணவுகளை சமைப்பதற்கும் ருசிருசியான

உணவுகளைச் சுவைப்பதற்கும் இறைவழிபாட்டில் திளைத்தவர் களுக்கு நேரம் எங்கிருந்து இருக்கும்!?

மறுமைக்குத் தேவையான தயாரிப்புகளை செய்வதற்கே நேரம் போதாமல் இருக்க, இந்த நாக்கின் ருசிகளுக்குப் பின்னால் அலைய அவர்களுக்கு எங்கே நேரம் இருக்கும்?

திருமறை திருகுர்ஆனை ஓதுவதிலும் திக்ருகள் செய்வதிலும் மூழ்கியவர்களுக்கு இந்த சரீர இச்சைக்குப் பின்னாலும் நாவின் விருப்பத்திற்குப் பின்னாலும் அலைவதற்கு நேரம் எப்படி இருக்கும்?

கிடைக்கின்ற செல்வத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்த அந்த வள்ளல்களுக்குத் தாம் விரும்புவதை சாப்பிடுவதற்கு எங்கே செல்வம் இருந்தது!?

தொழுகையில் கண் குளிர்ச்சியை, திக்ரிலும் திலாவத்திலும் மன நிம்மதியைத் தேடிய மக்களுக்கு உணவின் ருசியைத் தேடுவதற்கு எங்கே நேரம் இருந்தது!

சிந்தனையெல்லாம் சொர்க்க இன்பங்களில் சிதறி இருக்க, ஈடுபாடுகள் எல்லாம் சொர்க்கத்தின் அமல்களை அதிகரிப்பதில் இருக்க உணவை விரும்புவதற்கும் சுகமாக படுப்பதற்கும் அவர்களுக்கு எங்கே கவனம் இருந்தது!?

நரக நெருப்பின் பயத்தாலும் மஹ்ஷர் மைதானத்தின் திடுக்கத்தாலும் இரவின் தூக்கத்தைத் தொலைத்த சான்றோர்கள் தலையணையின் சுகத்தை எங்கே கண்டார்கள்!

மெல்லிய விரிப்பு சுகமான தூக்கத்தைக் கொடுக்கிறது என்று கூறி அதை அப்புறப்படுத்திய தூதரின் வாழ்க்கையைப் படித்து பாடம் பெற்ற அந்த சான்றோர்களா நம்மைப் போன்று மெத்தைகளையும் தலையணைகளையும் தேடி அலைந்தார்கள்.

ஆயிஷா என்னை விடு! என் இறைவனை நான் வணங்கப் போகிறேன் என்று கூறி, கால் வீங்க நின்று வணங்கிய நபியவர்களின்

வாழ்க்கையை முன்மாதிரியாக எடுத்துக்கொண்ட அந்த நல்லவர்களா இரவெல்லாம் தூங்கிக் கழித்திருப்பார்கள்!

பகலில் சுற்றித் திரிவதும் இரவில் தூங்கிக் கழிப்பதும் இன்றையவர்களின் குணமாக இருக்கிறது.

அன்றைய சான்றோர்களோ பகலை இல்மைத் தேடுவதிலும் இரவை இறைவனை வணங்குவதிலும் அல்லவா கழித்தார்கள்!

பசிக்காகவே மட்டும் புசித்தார்கள். புசித்த உணவும் ஒரு கல்லைப் போன்று வயிற்றில் இருந்துவிட்டால் இனி பசியே எடுக்காதே! பிறகு, உணவு சாப்பிடத் தேவையே ஏற்படாதே! என்று ஏங்கிய அந்த மக்கள் எங்கே!

ருசியான உணவு கிடைக்காதா!? வகைவகையான உணவு இல்லையா!? உயர்ந்த உணவுகள் வேண்டுமே! என்று உணவிலேயே கவனமாக உள்ள இக்கால மக்களுக்கு அந்த சான்றோர்களின் வாழ்க்கை பாடமாக அமையட்டும்.

இதற்காகவா நாம் படைக்கப்பட்டோம்? நம்பிக்கையாளர்களுக்கு சொர்க்கம் அல்லவா ஆசைகளின் இல்லம். உலகம் இல்லையே! இறைநேசர்களுக்கு சொர்க்கம் அல்லவா சுகபோகங்களின் பூமி. இவ்வுலகம் இல்லையே!

إِنَّ اللَّهَ يُدْخِلُ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ
وَالَّذِينَ كَفَرُوا يَتَمَتَّعُونَ وَيَأْكُلُونَ كَمَا تَأْكُلُ الْأَنْعَامُ وَالنَّارُ مَثْوًى لَهُمْ (٤٧:١٢)

***நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நன்மைகள் செய்தவர்களை அல்லாஹ் சொர்க்கங்களில் நுழைப்பான். அவற்றைச் சுற்றி நதிகள் ஓடும். நிராகரிப்பாளர்கள் (இவ்வுலகில்) சுகம் அனுபவிக்கின்றார்கள். கால்நடைகள் சாப்பிடுவது போல் சாப்பிடுகின்றனர். நரகம்தான் அவர்களுக்குரிய தங்குமிடம். (அல்குர்ஆன் 47:12)***

- **அல்லாஹ்வே! எங்களையும் உலக இன்பங்களின் மோகத்திலிருந்து விடுதலை செய்வாயாக!**
- **எங்கள் நேரங்களை உன்னை வணங்கி வழிபட ஏற்றுக்கொள்வாயாக!**
- **உண்பதிலும் உடுத்து வதிலும் உறங்குவதிலும் நேரங்களை வீணடிக்கின்ற வீணர்களாக எங்களை ஆக்கிவிடாதே!**

ஆமீன்!

# உண்மையான கல்வியாளர்

١٤٦٣ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحُ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ قَدْ كَانَ الرَّجُلُ يَطْلُبُ الْعِلْمَ فَلَا يَلْبَثُ أَنْ يُرَى ذَلِكَ فِي تَخَشُّعِهِ وَهَدْيِهِ وَفِي لِسَانِهِ وَبَصَرِهِ وَبِرِّهِ.

**1463.** இமாம் ஹஸன் பஸரி ﵀ கூறியதாக ஹிஷாம் அறிவிக்கிறார்:

(முன்னோரில்) ஒருவர் இல்மை (-கல்வியை)க் கற்றுக் கொள்வார். அதை (-அவர் கல்வி கற்றவர் என்பதை) அவருடைய பணிவிலும் அடக்கத்திலும், அவருடைய பழக்க வழக்கங்களிலும் இன்னும், அவருடைய பேச்சிலும் அவருடைய பார்வையிலும் அவர் (பிறருக்கு செய்கின்ற) நற்காரியங்களிலும் விரைவாகப் பார்க்க முடியும்.

**கருத்து:**

நமது சான்றோரின் சிறப்பே போற்றப்பட வேண்டிய ஒன்றுதான். நற்குணங்களின் சங்கமமாகத் திகழ்ந்தார்கள். மேலான பண்புகளின் பாத்திரமாக விளங்கினார்கள்.

இன்றைய மக்கள் காசுக்கும் பணத்துக்கும் முக்கியத்துவம் தருகிறார்கள். அவர்கள் கல்விக்கும் குணத்திற்கும் முக்கியத்துவம் தந்தார்கள்.

இன்றைய மக்கள் உடலை மட்டும் தூய்மையாக வைக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்க முயற்சித்தார்கள்.

இன்றைய மக்கள் ஆடையைக் கொண்டும் ஆபரணங்களைக் கொண்டும் பிற மக்களை மதிக்கிறார்கள். சான்றோர்களோ குணத்தைக் கொண்டு மனிதனை மதித்தார்கள்.

முக அழகைவிட குண அழகே மேல்!

வெளித்தோற்றத்தின் கவர்ச்சியை விட உள்ளத்தின் கவர்ச்சியே நிரந்தரம்!

வெளியின் வெள்ளையைவிட உள்ளத்தின் வெள்ளையே உயர்வானது!

படைத்தவனின் பார்வை உள்ளத்தின் மீதுதான், உடலின் மீது அல்ல!

கல்வி என்பது ஏடுகளை மனனம் செய்வதில் மட்டும் இல்லை.

கல்வி என்பது புத்தகங்களை புரட்டுவதிலும் நூல்களை ஆராய்வதிலும் மட்டும் இல்லை.

கல்வி என்பது பட்டத்தில் இல்லை.

கல்வி என்பது மணிக்கணக்கானப் பேச்சிலும் வசனமான பிரசங்கத்திலும் இல்லை.

கல்வி என்பது சபையோருக்கு உபதேசிப்பதிலும் சாட்சியங்களை விசாரிப்பதிலும் இல்லை.

கல்வி என்பது புனைப் பெயர்களைக் கொண்டும் தான் கற்ற ஆசிரியர்களின் தொடரைக் கொண்டும் பெருமை பேசுவதில் இல்லை.

கல்வி என்பது கல்பில் (-உள்ளத்தில்) உள்ள ஒளியாகும். அது கிடைக்கப் பெற்றால்தான் கல்வியாளர்களின் குணங்கள் கிடைக்கப் பெறும்.

இதைத் தெளிவாக நமது சான்றோர் அறிந்திருந்தனர். அவர்கள் கற்றக்

கல்வி அவர்களுக்கு இறையச்சத்தை ஏற்படுத்தியது. அவர்களுக்கு அடக்கத்தை அதிகரித்தது. அவர்களது சொல்லிலும் செயலிலும் உண்மையையும் நேர்மையையும் உருவாக்கியது. நன்மையின் பக்கம் அவர்களுக்கு வழிகாட்டியது.

அந்த முன்னோரின் பணிவோ அடக்கமோ இன்று நம்மால் கற்பனையும் செய்து பார்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

கல்வியின் கடலாக இருந்தும் அவர்களிடம் பெருமை இருந்ததில்லை.

ஞானத்தின் ஊற்றாக இருந்தும் அவர்களிடம் அகந்தை இருந்ததில்லை.

பல பெரும் கல்விமான்களிடம் கல்வி கற்ற மாமேதைகளாக இருந்தும் அவர்களது தலை எப்போதும் குனிந்தே இருந்தது.

பல நூறு நூல்களை எழுதியிருந்தாலும் பகட்டையும் பிரபலத்தையும் விரும்பாதவர்களாகவே அவர்கள் இருந்தார்கள்.

பல்லாயிரக் கணக்கான மாணவர்களின் ஆசிரியர்களாக மாறினாலும் பூமியின் பல பாகங்களிலிருந்து படிக்கின்ற மாணவர்கள் தேடி வந்தாலும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் தங்களைத் தேடிவந்து மண்டியிட்டு தங்கள் முன் அமர்ந்தாலும் சிறிதளவும் பெருமை இன்றி பணிவின் உருவமாக அந்த சான்றோர்கள் இருந்தார்கள்.

மக்களுக்கு அறிவுரை கூறுவதற்கு முன் தங்களுக்கு அறிவுரைக் கூறிக் கொண்டார்கள்.

மக்களை எச்சரிப்பதற்கு முன் தங்களை எச்சரித்துக் கொண்டார்கள்.

தாங்கள் கற்ற கல்விக்கு ஏற்ப தங்களது சொல்லையும் செயலையும் மாற்றிக் கொண்டார்கள்.

கல்வி அவர்களை மாற்றியது.

இவர்கள் கல்வியை மாற்றினார்கள்.[1]

அவர்கள் பணிவை விரும்பினார்கள்.

இவர்கள் பகட்டை விரும்புகிறார்கள்.

அவர்கள் பயந்தார்கள்.

இவர்கள் துணிகிறார்கள்.

அவர்கள் திருந்தி, திருத்தினார்கள்.

இவர்கள் திருத்துவார்கள், திருந்த மாட்டார்கள்.[2]

அவர்கள் அடக்கமாக இருப்பார்கள்.

இவர்கள் ஆடம்பரமாக இருப்பார்கள்.

அவர்கள் பணிவிடை செய்தார்கள்.

இவர்கள் பணிவிடை வாங்குவார்கள்.

அவர்கள் மக்களுக்குக் கொடுத்தார்கள்.

இவர்கள் மக்களிடம் வாங்குவார்கள்.

---

1. அதாவது: தாம் கற்ற கல்விக்கு ஏற்ப சான்றோர்கள் தங்களை மாற்றிக் கொண்டார்கள். பின்னோர் தங்கள் குணத்திற்கு ஏற்ப தாங்கள் கற்ற கல்வியை மாற்றினார்கள். தங்களது தவறுகளுக்கு ஆதாரங்களைத் தேடினார்கள். மன இச்சைக்கு ஏற்ப ஆதாரங்களை வளைத்தார்கள்.

2. அதாவது: சான்றோர் மக்களை திருத்துவதற்கு முன் தங்களை திருத்திக் கொள்வார்கள். தாங்கள் முதலில் நன்மைகளை செய்வார்கள். தீமைகளை விட்டு விலகி இருப்பார்கள். பின்னர், மக்களுக்கு உபதேசிப்பார்கள். இக்காலத்தவர்கள் பிறருக்கு நல்லதைச் சொல்வார்கள். தங்களை மறந்துவிடுவார்கள். பிறரை எச்சரிப்பார்கள். ஆனால், இவர்கள் விலகிக்கொள்ள மாட்டார்கள். பிறரை திருத்த முயற்சிப்பார்கள். இவர்கள் திருந்த மாட்டார்கள்.

அவர்கள் பிரபலமடைவதை விட்டு ஓடி ஒளிந்தார்கள்.

இவர்கள் பிரபலமடைவதைத் தேடி அலைகிறார்கள்.

என்னே! வித்தியாசம்.

இன்றும் சில கல்விமான்கள் அந்த சான்றோரின் வழியில் பயணிக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அல்லாஹ் அந்த நல்லோரின் மாணவர்களாக அவர்களின் தோழமையில் நம்மையும் ஆக்குவானாக!!

சான்றோரின் நற்குணங்களை இந்த சாமானியர்களுக்கும் வழங்குவானாக!

- **முகஸ்துதி, பகட்டு, கெட்ட குணம், கெட்ட நடத்தை அனைத்தையும் விட்டு அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!**
- **கல்வியையும் அந்த கல்விக்குரிய குணங்களையும் தருவானாக!**

ஆமீன்.

# சகித்துக் கொள்!
# உனது இறைவன்பால் திரும்பு!

١٤٦٤ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ إِبْرَاهِيمَ حَدَّثَنَا عُثْمَانُ بْنُ الْيَمَانِ عَنْ يَحْيَى بْنِ مُوسَى عَنِ الْحَسَنِ فِي قَوْلِهِ عَزَّ وَجَلَّ {الَّذِينَ يَمْشُونَ عَلَى الْأَرْضِ هَوْنًا} [الفرقان ٦٣] قَالَ حُلَمَاءَ وَفِي قَوْلِهِ {فَإِنَّهُ كَانَ لِلْأَوَّابِينَ غَفُورًا} [الإسراء ٢٥] قَالَ الْمُتَوَجِّهُ بِقَلْبِهِ وَعَمَلِهِ إِلَى اللهِ عَزَّ وَجَلّ.

**1464.** ***அவர்கள் பூமியில் மென்மையாக நடப்பார்கள். (அல்குர்ஆன் 25:63)*** இந்த இறைவசனத்திற்கு இமாம் ஹசன் பஸரி ﵀ விளக்கமளிக்கிறார்கள்: “அவர்கள் ஹலீம் -சகிப்பவர்களாக பூமியில் நடப்பார்கள்.”

**கருத்து:**

ரஹ்மானின் - பேரருளாளனின் அடியார்கள் எப்படி இருப்பார்கள் என்ற தொடரில் இந்த வசனம் இடம் பெறுகிறது. அவர்கள் பூமியில் மென்மையாக நடப்பார்கள். அதாவது ஹலீம் ஆக இருப்பார்கள். ஹலீம் என்றால் பெரும் சகிப்பாளர் என்று பொருள். இது ஹில்ம் என்ற வேர்ச் சொல்லில் இருந்து வந்தது.

ஹில்ம் என்றால் பிறர் செய்கின்ற தீங்கை சகிப்பது,

பிறர் அறிவற்ற முறையில் நடந்தால் அதை சகிப்பது,

பிறர் முரட்டுத்தனமாக நடந்தால் அதை சகிப்பது,

பிறர் வம்புக்கு வந்தால் அதை சகிப்பது,

பிறர் திட்டினால் அதை சகிப்பது, பிறர் மடத்தனமாக நடந்தால் அதை சகிப்பது,

பிறரிடமிருந்து தனக்குப் பிடிக்காத எது நடந்தாலும் அதை சகிப்பது.

இப்படி சகிப்பின் அனைத்து வகைகளையும் தனக்குள் உள்ளடக்கிய ஒரு பதம்தான் ஹில்ம்.

அல்லாஹ்வின் அடியார்களாகிய அந்த மேன்மக்கள் இப்படித்தான் ஹில்ம் உடையவர்களாக திகழ்ந்தார்கள். இதைத்தான், "அவர்கள் பூமியில் மென்மையாக நடப்பார்கள்" என்று அல்லாஹ் கூறுகின்றான்.

சான்றோரில் ஒருவரை ஒருவர் விருந்துக்கு அழைத்தார். அதற்கான நேரத்தையும் அவருக்கு குறிப்பிட்டார். அந்த நேரத்தில் அந்த நல்லடியார் அங்கு வந்தார். அழைத்தவர் கேட்டார் ஏன் வந்தீர். அவர் கூறினார் நீர் விருந்துக்கு அழைத்தீரே. அழைத்தவர் கூறினார் நான் அழைக்கவில்லையே. அந்த நல்லடியார் திரும்பச் சென்று விட்டார்.

மீண்டும் ஒரு நாள் அதே நபர் அந்த நல்லடியாரை அழைத்தார். நேரமும் குறிப்பிட்டார். அந்த நல்லடியார் குறிப்பிட்ட நேரத்தில் வந்தார். அழைத்தவர் கூறினார் நான் உங்களை அழைக்கவில்லையே. அந்த நல்லடியார் திரும்பி விட்டார். மீண்டும் ஒரு நாள் அந்த நல்லடியாரை அவர் அழைத்தார். நேரமும் குறிப்பிட்டார். ஆனால் வந்தவுடன் நான் அழைக்கவில்லை என்றார். அப்போதும் அந்த நல்லடியார் கோபப்படாமல் திரும்பிவிட்டார்.

அந்த நபர் அந்த நல்லடியாரைப் பின்தொடர்ந்து சென்று, நான் உங்களை மூன்று முறை அழைத்து மூன்று முறையும் திருப்பி அனுப்பினேன். நீங்கள் என் மீது கோபப்படவில்லையே. உங்களைப் பற்றி நீங்கள் ஒரு பெரும் சகிப்பாளர் என்று கேள்விபட்டிருந்தேன். ஆகவே, உங்களை சோதிக்கவே இப்படிச் செய்தேன் என்றார். அதற்கு அந்த நல்லடியார் பதில் கூறினார்: இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, இது என்ன சகிப்பு, இந்த சகிப்பு நாயிடம் கூட இருக்கிறது. இது ஒரு பெரிய சகிப்புத்தனம் இல்லை என்றார்.

ஸுப்ஹானல்லாஹ்!

இன்று நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? இப்படி அந்த சான்றோரின் பொறுமைக்குப் பல உதாரணங்களைக் கூறலாம்.

ஆம், இவர்களின் முன்னோடியான அல்லாஹ்வின் தூதர் கடைப்பிடித்த பொறுமையும் சகிப்பும் சொல்லவா முடியும்? அவர்கள் பொறுமையின் சிகரமல்லவா! சகிப்பின் சமுத்திரமல்லவா!

அந்த கண்ணியமிகு தூதரின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றி வாழ்ந்த அந்த சான்றோர்கள் சாதாரண மக்களைப் போன்றா இருப்பார்கள்?!

இப்படித்தான் அல்குர்ஆனும் சுன்னாவும் அவர்களைப் பண்படுத்தியது. அவர்கள் அவ்விரண்டையும் அமலுக்காகப் படித்தார்கள். எனவே, அதன் வழிகாட்டலுக்கு ஏற்ப மாறினார்கள். அவர்களது வாழ்க்கை எதார்த்தமான நடைமுறை மார்க்கமாக இருந்தது.

இன்று நம்மிடம் மார்க்கம் ஏடுகளில் இருக்கிறது. நமது செயல்களில் மார்க்கம் இருப்பதில்லை. அவர்கள் மார்க்கத்தின் செயல் வடிவமாக இருந்தார்கள். நாமோ மார்க்கத்தை சொல்வதற்கு மட்டும் வைத்துள்ளோம். அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக!

وَفِي قَوْلِهِ {فَإِنَّهُ كَانَ لِلْأَوَّابِينَ غَفُورًا} [الإسراء ٢٥]

قَالَ الْمُتَوَجِّهُ بِقَلْبِهِ وَعَمَلِهِ إِلَى اللّٰهِ عَزَّ وَجَلِّ .

இந்த இறைவசனத்திற்கு இமாம் ஹசன் பஸரி ﵀ விளக்கமளிக்கிறார்கள்: ***“நிச்சயமாக அவன் (அல்லாஹ்) அவ்வாபுகளுக்கு மகா மன்னிப்பாளனாக இருக்கின்றான்.”*** (அல்குர்ஆன் 17:25).

அவ்வாப் என்பவர் தனது உள்ளத்தாலும் அமல்களாலும் அல்லாஹ்வின் பக்கம் முன்னோக்கியவர்.

இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் குர்ஆனுக்கு விளக்கம்

அளிப்பவர்களாக இருந்தார்கள். அவர்களின் விளக்கங்கள் அறிஞர்களுக்கு மத்தியில் மிகவும் பிரபலமானவை. குர்ஆனின் கருத்துக்களை மிகவும் ஆழமாக விவரிப்பவர்களாக இருந்தார்கள் இமாம் அவர்கள்.

ஆப (திரும்பினான் என்னும் பொருளுடைய) என்ற சொல்லிலிருந்து உருவான மிகைப்பு பெயர்ச் சொல்தான் இந்த அவ்வாப் என்ற சொல். அவ்வாப் உடைய பன்மை அவ்வாபீன்.

அவ்வாப் - முற்றிலும் திரும்பியவர் என்றால் அவர் யார் என்பதற்கு இமாம் கூறுகின்ற விளக்கத்தைத்தான் இப்போது நாம் விரிவாகப் பார்க்கப் போகிறோம்.

யார் ஒருவர் தனது உள்ளத்தையும் செயல்களையும் அல்லாஹ் அல்லாத அனைத்திலிருந்தும் விடுவித்து, அவற்றை விட்டும் திருப்பி, அவற்றிலிருந்து விலக்கி, அவற்றை விட்டும் தனது எல்லாத் தொடர்புகளையும் துண்டித்து அல்லாஹ்வின் பக்கம் மட்டுமே தனது முகத்தையும் உள்ளத்தையும் திருப்பினாரோ தனது செயல்களை அல்லாஹ்விற்காக மட்டுமே ஆக்கிக் கொண்டாரோ அவரை அல்லாஹ் நிச்சயம் மன்னித்தருள்வான்.

إِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ حَنِيفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ (٧٩)

***வானங்களையும் பூமியையும் எவன் படைத்தானோ அ(ந்த ஒரு)வனின் பக்கமே நிச்சயமாக நான் முற்றிலும் நோக்குகிறேன். நான் (அவனுக்கு எதையும்) இணைவைப்பவன் அல்ல. (அல்ஃகுர்ஆன் 6:79)***

قُلْ يَاأَيُّهَا النَّاسُ إِنْ كُنْتُمْ فِي شَكٍّ مِنْ دِينِي فَلَا أَعْبُدُ الَّذِينَ تَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ وَلَكِنْ أَعْبُدُ اللَّهَ الَّذِي يَتَوَفَّاكُمْ وَأُمِرْتُ أَنْ أَكُونَ مِنَ الْمُؤْمِنِينَ (١٠٤) وَأَنْ أَقِمْ وَجْهَكَ لِلدِّينِ حَنِيفًا وَلَا تَكُونَنَّ مِنَ الْمُشْرِكِينَ (١٠٥) وَلَا تَدْعُ مِنْ دُونِ اللَّهِ مَا لَا يَنْفَعُكَ وَلَا يَضُرُّكَ فَإِنْ فَعَلْتَ فَإِنَّكَ إِذًا مِنَ الظَّالِمِينَ (١٠٦)

*நபியே! கூறுவீராக மக்களே! எனது வழிபாட்டில் நீங்கள் சந்தேகத்தில் இருந்தால் அல்லாஹ்வை அன்றி நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்க மாட்டேன். எனினும் உங்களுக்கு மரணத்தை தருகின்ற அல்லாஹ்வைத்தான் நான் வணங்குவேன். நம்பிக்கையாளர்களில் நான் ஆகவேண்டும் என நான் கட்டளை இடப்பட்டுள்ளேன். இன்னும் உமது முகத்தை அல்லாஹ்வை வணங்குவதற்கு மட்டும் நிலை நிறுத்துவாயாக இஸ்லாமிய கொள்கையில் உறுதியுடையவராக. இணைவைப்ப வர்களில் நிச்சயமாக நீர் ஆகிவிடாதீர். அல்லாஹ்வை அன்றி உமக்கு பலனளிக்காத உமக்கு தீங்குதராதவற்றை அழைக் காதீர். நீர் (அப்படி) செய்தால் நிச்சயமாக நீர் தீயவர்களில் ஆகிவிடுவீர். (அல்குர்ஆன் 10:104 - 106)*

இது போன்ற கருத்தை முப்பதாவது அத்தியாயத்தில் முப்பது மற்றும் நாற்பத்தி மூன்றாம் வசனங்களிலும் பார்க்கிறோம்.

இந்த மேற்கண்ட வசனங்களில் கூறப்பட்ட கருத்துகளைத்தான் இமாம் அவர்கள் அவ்வாப் என்பதற்கு விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள்.

யார் ஒருவர் தனது வணக்க வழிபாட்டில் இருக்கும்போது தனது சிந்தனைகளை அல்லாஹ்வின் பக்கம் மட்டுமே ஒருமுகப்படுத்தி கவனங்களை எல்லாம் அல்லாஹ்வின் பக்கமே திருப்பினாரோ அவர் அல்லாஹ்வின் அருளுக்கும் மன்னிப்புக்கும் உரியவராகிறார்.

இத்தகைய பக்குவம் பெற்றவர்கள்தான் தங்களது வெளி வாழ்க்கையிலும் அல்லாஹ்வை மட்டுமே சார்ந்தவர்களாக இருப்பார்கள்; அவன் பக்கமே நாட்டம் உள்ளவர்களாக இருப்பார்கள்; அவன் பக்கமே திரும்பியவர்களாக இருப்பார்கள்; அவனையே பிரார்த்தித்தவர்களாக இருப்பார்கள்; எல்லாக் காரியங்களிலும் அவனையே முன்னோக்கியவர்களாக இருப்பார்கள்.

இந்தப் பண்பு அவர்களுக்கும் அல்லாஹ்விற்கும் இடையில் உள்ள உறவை பலப்படுத்தும்; எப்போதும் பசுமையாக வைத்திருக்கும்; அல்லாஹ்வின் பக்கம் அவர்களை நெருக்கமாக்கும்; அல்லாஹ்வின்

அன்புக்கும் அருளுக்கும் மன்னிப்புக்கும் தகுதியானவர்களாக அவர்களை ஆக்கும்.

இப்படிப்பட்ட பண்புகள் அந்த சான்றோர்கள் **-**சஹாபாக்கள், தாபிஈன்களிடம் மிகுந்து காணப்பட்டதை நாம் வரலாறுகளில் படிக்கிறோம். அந்த பண்புகள்தான் அவர்களுக்கு அல்லாஹ்வின் பொருத்தத்தை இவ்வுலகிலேயே தேடித்தந்தது. சொர்க்கவாசிகள் என்ற நற்பெயரை இவ்வுலகிலேயே பெற்ற மேன்மக்களாக அவர்கள் திகழ்ந்தார்கள்.

- **அல்லாஹ்வே! எங்களையும் அந்த சான்றோரின் நற்பாதையில் நடைபோடும் நல்லோர்களில் சேர்ப்பாயாக!**

ஆமீன்!

• • •

# அர்ப்பணிப்பு

١٤٦٥ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا وَكِيعٌ عَنْ سُفْيَانَ عَنْ هِشَامٍ عَنِ الْحَسَنِ قَالَ أَدْرَكْتُ أَقْوَامًا إِنْ كَانَ الرَّجُلُ لَيَخْلُفُ أَخَاهُ فِي أَهْلِهِ أَرْبَعِينَ عَامًا .

**1465.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறியதாக ஹிஷாம் அறிவிக்கிறார்:

“நான் பல மக்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் தனது (மார்க்க) சகோதரரின் குடும்பத்தை அவர் (அல்லாஹ்வின் பாதையில்) சென்ற பின்னர் நாற்பது ஆண்டுகள் கவனித்துக் கொள்வார்.”

**கருத்து:**

இக்கூற்று நல்லோரின் நற்குணத்தையும் அர்ப்பணிப்பையும் தியாக உணர்வையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஆம், அந்த சான்றோர் நன்மை செய்வதில் சளைக்காதவர்கள்;

நன்மை செய்வதில் ஒருவர் மற்றவரை முந்த முயற்சிப்பவர்கள்;

அல்லாஹ்வின் திருப்திக்காக பெரும் சிரமங்களை சகிப்பவர்கள்;

அல்லாஹ்விற்காக ஒருவர் மற்றவரை நேசித்தவர்கள்; அந்த நேசத்திற்காக தங்கள் உயிரையே அர்ப்பணிப்பவர்கள்;

செல்வத்தை நட்புக்காக இறை பொருத்தத்தை நாடி வாரி இறைப்பவர்கள்;

பிரதிபலன் பாராமல் பிறருக்கு நன்மை செய்தவர்கள் அந்த சான்றோர்கள்;

இதோ பாருங்கள்! அல்லாஹ்வின் பாதையில் போருக்குச் சென்ற

அல்லது கல்வி படிக்கச் சென்ற அல்லது ஹதீஸைக் கற்கச் சென்ற தனது சகோதரர் திரும்ப வருகின்ற வரை அவர் குடும்பத்திற்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்து அவரது குடும்பத்தை அந்த சான்றோர்கள் பராமரித்தார்கள். அப்படி பராமரித்தது ஓர் ஆண்டு, ஈராண்டு அல்ல, சுமார் நாற்பது ஆண்டுகள் வரை பராமரித்தார்கள். சுப்ஹானல்லாஹ்! எந்த அளவு பொறுமை பாருங்கள்!

ஆம்! அந்த சான்றோர் நபிமொழியைப் படித்தவர்கள் அல்லவா!

**عن زَيْد بْن خَالِدٍ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَنْ جَهَّزَ غَازِيًا فِي سَبِيلِ اللَّهِ فَقَدْ غَزَا وَمَنْ خَلَفَ غَازِيًا (فِي أَهْلِهِ) فِي سَبِيلِ اللَّهِ بِخَيْرٍ فَقَدْ غَزَا .**

ரசூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: யார் அல்லாஹ்வின் பாதையில் போரிடுபவருக்குத் தேவையான தயாரிப்புகளைச் செய்து கொடுப்பாரோ அவரும் (அல்லாஹ்வின் பாதையில்) போர் செய்தார். யார் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்பவருக்கு அவருடைய குடும்பத்தை நல்ல முறையில் பராமரிப்பு செய்வாரோ அவரும் (அல்லாஹ்வின் பாதையில்) போர் செய்தார். (அறிவிப்பாளர்: ஸைது இப்னு காலிது, புகாரி, 2843)

இப்படிப்பட்ட நபிமொழிகளைக் கற்று அதைப் பின்பற்றி நடந்த அந்த மேன்மக்களுக்கு முன்னால் அற்ப துன்யாவிற்காக வாழும் நம் போன்றோரின் நிலையை என்னவென்று சொல்வது?

ஒருநாள் ஒருவருக்கு உதவி செய்து விட்டு அடுத்த நாள் சடைவடைந்து கொள்ளக்கூடிய மக்கள்தான் இன்று அதிகம்.

ஒருமுறை கொடுத்துவிட்டு மறுமுறை முகம் சுளிப்பவர்கள்தான் இன்று அதிகம்.

ஒருநாள் தர்மம் தந்துவிட்டு மறுநாள் கேட்டால் முகம் திருப்புகின்ற மக்கள்தான் இன்று அதிகம்.

ஒருதடவை உதவி கேட்டுவிட்டு மறுமுறையும் அவரிடம் தேவைக்காகச் சென்றால் வேறு வேலை இல்லையா என்று ஏசுகின்ற மக்கள்தான் இன்று அதிகம்.

கொடுத்ததைக் கணக்குப் பார்ப்பவர்கள்தான் இன்று அதிகம்.

கொடுத்ததை சொல்லிக் காட்டுபவர்கள்தான் இன்று அதிகம்.

சகோதரர்களையும் நண்பர்களையும் புறக்கணிப்பவர்கள்தான் இன்று அதிகம்.

உள்ளத்தில் அல்லாஹ்வின் அன்பை மட்டும் வைத்துள்ள அந்த மேன்மக்களின் உள்ளத்தில் அற்ப துன்யாவிற்கு என்ன மதிப்பு இருக்கும்!?

உயிரையே அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணிக்கத் துடித்த அந்த மேன்மக்கள் அற்ப உலக செல்வத்தையா மதிப்பார்கள்!?

மறுமைக்காக வாழ்ந்த அவர்கள் உலகத்தையா மதித்தார்கள்!?

அள்ளி அள்ளிக் கொடுப்பதிலும் தேடிச் சென்று உதவுவதிலும் தனக்கு இல்லை என்றாலும் பிறரை தேர்ந்தெடுப்பதிலும் தன்னிடம் இல்லை என்றாலும் கடன் வாங்கி உதவுவதிலும் பெயர்போன அந்த சான்றோர்கள் நமக்கு அழகிய முன்மாதிரிகள் அல்லவா!?

நாற்பது ஆண்டுகள் ஒரு குடும்பத்திற்கு உதவிய அந்த மேன்மக்கள் எங்கே! ஒரு முறைக்கு மறுமுறை கேட்டாலே சிணுங்குகின்ற இக்கால மக்கள் எங்கே!?

நாற்பது ஆண்டுகள் பிறரது குடும்பத்தை முகம் சுளிக்காமல் பராமரித்தவர்கள் எங்கே! சொந்த இரத்த சகோதரனின் குடும்பத்தையே நடுத்தெருவில் விட்டுவிட்ட இக்கால மக்கள் எங்கே!

நாற்பது ஆண்டுகள் மற்றவர்களின் குடும்பங்களை எக்குறையும் இல்லாமல் ஆதரித்த அந்த மேன்மக்கள் எங்கே! சொந்த

தாய் தந்தையையே புறக்கணித்து, அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றிய இக்கால மக்கள் எங்கே!

உறவே இல்லாதவர்களைத் தேடிச் சென்று நாற்பது ஆண்டுகள் அரவணைத்த அந்த மேன்மக்கள் எங்கே! சொந்த இரத்த உறவுகளையே உதறித்தள்ளுகின்ற, கிள்ளி எறிகின்ற, விரட்டி அடிக்கின்ற இக்கால மக்கள் எங்கே!

அந்நியர்களை தன்னவர்களாக ஆதரித்த அந்த மேன்மக்கள் எங்கே! பெற்றெடுத்து பாலூட்டி, ஊட்டி வளர்த்து ஆளாக்கிய அன்னையையே வெளியே போ என்று விரட்டுகின்ற இக்கால மக்கள் எங்கே!

அல்லாஹ் தனக்குக் கொடுத்ததை அதிகமாகவும் தான் பிறருக்குக் கொடுத்ததை குறைவாகவும் பார்த்தவர்கள் அக்கால மேன்மக்கள். அல்லாஹ் தனக்குக் கொடுத்ததை குறைவாகவும் தான் பிறருக்குக் கொடுத்ததை அதிகமாகவும் பார்ப்பவர்கள் இக்கால மக்கள்.

கொடுப்பதற்கே பிறந்தவர்கள் போலும் அந்த மேன்மக்கள்!

சேர்ப்பதற்கே பிறந்தவர்கள் போலும் இக்கால மக்கள்!

கொடையே அந்த மேன்மக்களின் குணமாக இருந்தது. வாரி வழங்குவதே அவர்களின் பண்பாக (வழக்கமாக) இருந்தது.

இன்றோ, இருந்தும் இல்லை என்று சொல்வார்கள். செல்வத்திலும் பஞ்சப்பாட்டு பாடுவார்கள். வசதியில் இருந்தாலும் வறுமையைப் போல் நடிப்பார்கள். ஏழைகளைப் பார்த்தால் எட்டிப்போவார்கள். வறியவர்களைப் பார்த்தால் வாய்மூடிக் கொள்வார்கள். நலிந்தவர் களைப் பார்த்தால் அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிடுவார்கள். மிஞ்சியதையும் கொடுக்க மனமில்லாதவர்கள் பலர். உண்டு மிஞ்சியதை குப்பையில் கொட்டுவார்கள். கெஞ்சும் மனிதர்களுக்கு பசி போக்க மாட்டார்கள்.

தங்களது சொகுசுக்குக் கோடிகளை செலவழிப்பார்கள். பிறரின் அவசியத்திற்கு சில்லறைகளை எறிவார்கள்.

உலகத்திற்கு என்றால் எல்லாம் என்பார்கள். மறுமைக்கு என்றால் மிஞ்சினால் பார்க்கலாம் என்பார்கள்.

அபிலாஷைகளுக்கும் அனாவசிய தேவைகளுக்கும் வாரி இறைப்பார்கள். அல்லாஹ்வின் பாதைக்கும் அறக் காரியங்களுக்கும் அற்பத்தை அளந்தளிப்பார்கள்.

- **யா அல்லாஹ்! எங்களை இந்த துன்யாவின் மோகத்தைக் கொண்டும் செல்வத்தின் பேராசையைக் கொண்டும் சோதித்து விடாதே!**
- **கொடுக்கும் மனதைக் கொடு! உதவும் உள்ளத்தைக் கொடு! பிறரை பராமரிக்கின்ற பக்குவத்தைக் கொடு! இல்லாதவர் களுக்கு இன் முகத்தோடு தருகின்ற இதயத்தைக் கொடு!**

ஆமீன்!

• • •

## தன்னடக்கம்

١٤٦٦ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا وَكِيعٌ عَنْ سُفْيَانَ عَنْ يُونُسَ عَنِ الْحَسَنِ قَالَ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا إِنْ كَانَ الرَّجُلُ لَيَجْلِسُ مَعَ الْقَوْمِ يَرَوْنَ أَنَّهُ عَيِيٌّ وَمَا بِهِ عِيٌّ إِنَّهُ لَفَقِيهٌ .

**1466.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறியதாக யூனுஸ் அறிவிக்கிறார்: நான் (அறிஞர்களில்) பல மக்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் மக்களோடு அமர்வார். அம்மக்கள் அவரை வாய்பேசமுடியாதவர் என்று எண்ணுவர். அவருக்கு வாய்பேச முடியாமை இருக்காது. நிச்சயமாக அவர் ஒரு, மார்க்கச் சட்ட நிபுணராக இருப்பார்.

**கருத்து:**

அக்காலத்து அறிஞர்களின் மேலான பண்புகளை இக்கூற்று நமக்கு விவரிக்கிறது.

ஆம், அக்கால அறிஞர்கள் அடக்கமானவர்கள்; அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

அவர்கள் பணிவுள்ளவர்கள்; பகட்டை விரும்பமாட்டார்கள். தெரிந்தாலும் தெரியாததைப் போல் அமைதியாக இருப்பார்கள். அவர்களின் கல்வி ஆழமாக இருந்ததைப் போன்று அவர்களிடம் அடக்கமும் பணிவும் அதிகமாக இருந்தது.

அவர்கள் பிறரிடமிருந்து நல்லவிஷயங்களைக் கேட்க அதிகம் ஆசைப்படுவார்கள். குறைவாகப் பேசுவார்கள். அதுவும் நிர்ப்பந்தம் இருந்தால் மட்டுமே வாய் திறப்பார்கள். தங்களை விட அதிகம் அறிந்த ஒருவர் சபையில் இருக்கிறார் அல்லது அருகில் இருக்கிறார்

என்று தெரிந்துவிட்டால் அவ்வளவுதான் வாயே திறக்கமாட்டார்கள். அந்த அறிஞரிடமே அனைவரையும் திருப்பிவிடுவார்கள்.

இந்த இடத்தில் பேசவில்லை என்றால் அல்லது வாய் திறக்க வில்லை என்றால் அல்லாஹ் குற்றம் பிடிப்பான் என்று ஒரு நிலை வந்தால் மட்டும் பேசுவார்கள்.

அவர்கள் வாய்ப்புகளைத் தேடி அலைய மாட்டார்கள். சபைகளை நோக்கி ஓட மாட்டார்கள். மிம்பர்களில் ஏறி நிற்க விரும்ப மாட்டார்கள்.

கல்வி கற்பதிலும் தங்கள் உள்ளங்களை சீர்திருத்துவதிலும் கற்றதின் படி அமல் செய்வதிலும் இறை வழிபாட்டிலும் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். ஆகவே, மக்கள் அவர்களைத் தேடி வந்தார்கள். அவர்கள் மக்களைத் தேடிச் செல்லவில்லை. சபைகள் அவர்களை அழைத்தன. அவர்கள் சபைகளில் வாய்ப்புகளை எதிர்பார்க்கவில்லை. மிம்பர்களில் ஏறி பிரசங்கம் கொடுக்க அழைப்புகள் வந்தன. அவர்கள் அவற்றின் மீது ஏறி நிற்க ஆசைப்படவில்லை. ஆசைப்பட்டதில்லை அவர்கள் ஒதுங்கி ஓடினார்கள். மக்கள் அவர்களை சுற்றி வளைத்தார்கள். மக்களிடம் பெயர் புகழ் பரவுவதை வெறுத்தார்கள். தங்களது அமல்களையும் வழிபாட்டையும் மறைத்தார்கள்.

தங்களிடம் கேட்டு வருபவர்களிடம் அவர்கள் கேட்பது தங்களுக்கு தெரிந்திருந்தாலும் மூத்தவர்களிடம் அதைக் கேளுங்கள் அல்லது என்னைவிட அதிகம் அறிந்தவர்களிடம் கேளுங்கள் என்று சொன்னவர்கள் தங்களுக்கு தெரியாததைப் பற்றி பேசுவார்களா?!

இன்றோ, தன்னை விட கல்வியாளர் இல்லை, தன்னை விட பேச்சாளர் இல்லை, தன்னை விட அறிஞர் இல்லை, தன்னை விட தீர்ப்பளிப்பவர் இல்லை, தனக்கு மேல் அறிந்தவர் இல்லை, என்று எண்ணுகின்ற மக்களைத்தானே அதிகம் காண முடிகிறது.

இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் நாற்பத்தி எட்டு

கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றில் முப்பத்தி இரண்டு கேள்விகளுக்கு எனக்குத் தெரியாது என்று பதில் கூறினார்கள்.

மற்றொரு முறை நாற்பது கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால், ஐந்து கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் தந்தார்கள்.

இப்படி நபித்தோழர்களிலும் தாபிஈன்களிலும் பல நூறு பேரைப் பற்றி வரலாற்றில் நாம் படிக்கிறோம், அவர்கள் எப்படி கல்வியில் பேணுதலுடன் இருந்தார்கள், அடக்கமாக இருந்தார்கள், தெரியாத விஷயங்களைப் பற்றி கேட்கப்பட்டால் எவ்வித கூச்சமும் இல்லாமல் 'தெரியாது' என்று பதில் அளித்தனர்.

கல்வி சபையில் கலந்து கொண்டால் ஆசிரியர் பேசும் போது வாய்மூடி செவிதாழ்த்தி கேட்பார்கள். தங்களுக்குத் தெரியும் என்று காட்டிக்கொள்ள விரும்ப மாட்டார்கள்.

தான் பெரும் சட்ட மேதையாக இருந்தும் தேவை இன்றி பேசாமல் அமைதியாக சபை முழுக்க இருந்த அந்த அறிஞர்கள் எங்கே! எல்லா சபைகளிலும் தான் அழைக்கப்பட வேண்டும், தன்னை மக்கள் பேசவைக்க வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள் எங்கே!

அன்று அந்த அறிஞர் வாய்மூடி பேசாமல் இருந்ததால் அவரை ஊமை என்று மக்கள் எண்ணினார்கள். இன்றோ இவர் தனது பேச்சை நிறுத்த மாட்டாரா என்று மக்கள் எண்ணுமளவு சில அறிஞர்கள் அல்லது பேச்சாளர்கள் பேசிக்கொண்டே இருக்கின்றனர்

நபியவர்களின் பண்பு அதிகம் மௌனம் காப்பதல்லவா! தேவையில்லாமல் பேசாதே, நன்மையை மட்டும் பேசு என்று அறிவுரை கூறியல்லவா இந்த உம்மத்தை உருவாக்கியுள்ளார்கள்.

நபியவர்கள் ஒரு கேள்வி கேட்டபோது அதன் பதில் தனக்கு தெரிந்திருந்தும் சபையில் மூத்தவர்கள் அபூபக்ரும் உமரும் (ரலியல்லாஹு அன்ஹும்) இருந்தார்கள் என்று வாய்மூடி இருந்த இப்னு உமரின் வரலாறுகளைப் படித்து உருவான மேன்மக்கள் அல்லவா அந்த சான்றோர்கள்!

- **அல்லாஹ்வே! கல்வியையும் கல்வியாளர்களின் நற்குணாங்களையும் எங்களுக்கு வழங்குவாயாக!**
- **அல்லாஹ்வே! பலன் தராத கல்வியை விட்டும் அறியாதவர்களின் குணாங்களை விட்டும் எங்களைப் பாதுகாப்பாயாக!**

ஆமீன்.

# கல்வியே சிறந்தது

١٤٦٧ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَدْ كَانَ الرَّجُلُ يَسْمَعُ بِالْبَابِ مِنْ أَبْوَابِ الْعِلْمِ فَيَتَعَلَّمُهُ وَيَعْمَلُ بِهِ فَيَكُونُ خَيْرًا لَهُ مِنَ الدُّنْيَا وَمَا فِيهَا لَوْ كَانَتْ لَهُ فَوَضَعَهَا فِي آخِرَةٍ .

**1467.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஒருவர் கல்வியின் பாடங்களில் ஒரு பாடத்தை செவியுற்று, அதைக் கற்று, அதன் பிரகாரம் அவர் அமல் செய்து வருவது, உலகத்தில் உள்ள எல்லா செல்வங்களைப் பார்க்கிலும் அவருக்கு சிறந்தது. அவை எல்லாம் அவருக்கு அமையப் பெற்று அதை அவர் மறுமைக்காக அர்ப்பணித்தாலும் சரியே!

**கருத்து:**

இதுதான் நமது சான்றோர் கல்விக்குக் கொடுத்த கண்ணியம்.

ஆம், கல்வி எது? கல்வி என்பது குர்ஆனையும், சுன்னாவையும் கற்பதாகும்.

அந்தக் கல்வியின் மூலம்தான் அல்லாஹ்வை அறிகிறோம், அவனது மார்க்கத்தை அறிகிறோம். கல்வியின் மூலம்தான் மறுமைக்குத் தேவையான நல்ல அமல்களைச் செய்ய இயலும். பாவங்கள் என்ன என்று அறிந்து அவற்றை தவிர்த்து நரக நெருப்பிலிருந்து நாம் தப்பிக்க இயலும்.

இறைத் தூதர்களுக்கு அல்லாஹ் வழங்கியது கல்வியைத்தான். தனக்கு பிடித்தமானவர்களுக்கு அல்லாஹ் வழங்குவது கல்வியைத்தான்.

***“என் இறைவா எனக்கு கல்வியை அதிகப்படுத்து!”*** (அல்குர்ஆன் 20:114) என்று அழகிய துஆவை அல்லாஹ் நமது நபியவர்களுக்கு கற்பித்தான்.

நபியவர்கள் அல்லாஹ்விடம் செல்வத்தை கேட்கவில்லை, ஆட்சி அதிகாரத்தை, சொத்து சுகத்தை கேட்கவில்லை, தங்கம் வெள்ளியை கேட்கவில்லை. மாறாக, அவர்கள் அதிகம் கேட்டதெல்லாம் கல்வியைத்தான்.

ஆம், கல்விக்கு சமமான செல்வம் எதுவும் இல்லை.

“என் பேச்சை செவிமடுத்து அதை மனனம் செய்து அதை தான் செவிமடுத்தது போன்று பிறருக்கு எடுத்துச் சொன்னவரை அல்லாஹ் செழிப்பாக்குவானாக!”

இந்த பிரார்த்தனையை நபியவர்கள் கல்வியாளர்களுக்குச் செய்தார்கள்.

***நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் உயர்வைத் தருகின்றான். அவர்களில் கல்வி கொடுக்கப்பட்டவர்களை அல்லாஹ் பல தகுதிகள் உயர்த்துகின்றான். (அல்குர்ஆன் 58:11)***

கல்விமான்களின் தகுதிகளை அல்லாஹ் உயர்த்துகின்றான். அவர்களை கண்ணியப்படுத்துகின்றான்.

***வணக்கத்திற்குரியவன் தன்னைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை என்பதற்கு தான் சாட்சி கூறுவதோடு அவர்களின் (கல்விமான்களின்) சாட்சியத்தையும் சேர்த்து கூறுகிறான். (அல்குர்ஆன் 3:18)***

இன்று நமது உம்மத்தில் முன் சென்ற பல கல்விமான்களை நாம் எவ்வளவு கண்ணியத்துடனும் நல்ல பிரார்த்தனையுடனும் நினைவு கூருகிறோம். அவர்களின் உழைப்பினால் இன்று நாம் மார்க்கத்தை எளிதாக அறிந்து அல்லாஹ்வை வணங்குகின்றோம். மறுமைக்கான நன்மைகளை சேகரித்துக் கொள்கிறோம். நமக்கு அவர்கள் நேர்வழி

காட்டிய காரணத்தாலும் மார்க்கக் கல்வியை நமக்கு பாதுகாத்துத் தந்த காரணத்தாலும் நமது எல்லா நன்மைகளிலும் அந்த கல்விமான்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குகின்றான்.

உலக முடிவு நாள் வரை அந்த சான்றோர்களின் பெயர்கள் கண்ணியத்தோடும் நல்ல துஆவோடும் உச்சரிக்கப்படும். இந்த நற்பாக்கியம் செல்வந்தர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ, அரசர்களுக்கோ வேறு யாருக்கும் கிடைக்காது.

ஆகவேதான், நமது சான்றோர்கள் கல்விக்குச் சமமாக உலக செல்வங்களில் எதையும் மதித்ததில்லை.

கல்விதான் உண்மையான கண். கல்விதான் உண்மையான கண்ணியம். கல்விதான் உண்மையான மேன்மை. அரசர்களும் செல்வந்தர்களும் கல்விமான்களின் பக்கம் தேவை உள்ளவர்கள். ஆனால், கல்விமான்கள் இவர்கள் பக்கம் தேவை உள்ளவர்கள் அல்லர்.

இன்று நமது மக்கள் கல்வியை விட்டு விட்டனர். செல்வத்தின் பக்கம் நாட்டம் கொண்டனர். சொத்து சுகத்தின் பக்கம் திரும்பினர். இம்மையின் கண்ணியத்தையும் இழந்தனர். மறுமையின் வெற்றியையும் இழந்தனர். மார்க்கத்தின் மாண்பையும் மறந்தனர். நமது சிறந்த முன்னோரின் பாதையை விட்டு நழுவினர். தமது சுய அடையாளத்தை இழந்தனர். தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகினர். தரம் தாழ்ந்தனர். தகுதி இழந்தனர்.

நம்மில் சிலர் இன்று பொருளாதார கல்வியின் பின் படையெடுத்தனர். குர்ஆன், சுன்னாவின் கல்வியைத் தாழ்வாகக் கருதினர். அதைக் கற்பதையும் கற்றவர்களையும் இளக்காரமாகப் பார்த்தனர்.

அத்தகையவர்களை உலகத்தின் அடிமைகளாக, அல்லாஹ் இன்னும் அவனது தூதரின் அன்பை அடையப் பெறாத துர்பாக்கியவான்களாக அல்லாஹ் ஆக்கிவிட்டான். மார்க்கத்தை அவர்களை விட்டு பிடுங்கி விட்டான். அந்நியர்களை அவர்கள் மீது சாட்டிவிட்டான்.

இவர்கள் உலகத்தையும் இழந்தனர், மறுமையையும் இழந்தனர்.

ஆகவேதான், இம்மை மறுமையின் கண்ணியத்தையும் வெற்றி யையும் தேடித்தருகின்ற கல்வியை கற்பது உலக செல்வங்களை விடச் சிறந்தது என இமாம் ஹசன் பஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்.

- **யா அல்லாஹ்! கற்றதின்படி அமல்செய்யக்கூடிய பாக்கியத்தை தருவாயாக!**

ஆமீன்!

• • •

# எளிமையான வாழ்வு

١٤٦٨- حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ وَاللهِ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا مَا طُوِيَ لِأَحَدِهِمْ ثَوْبٌ قَطُّ وَلَا جَعَلَ بَيْنَهُمْ وَلَا بَيْنَ الْأَرْضِ شَيْئًا قَطُّ وَلَا أَمَرَ فِي بَيْتِهِ بِصَنْعَةِ طَعَامٍ قَطُّ إِنْ كَانَ أَحَدُهُمْ لَيَأْكُلُ فَمَا عَدَا أَنْ يُقَارِبَ شِبَعَهُ يُمْسِكُ وَقَالَ الْحَسَنُ وَاللهِ لَأَنْ يُنْبِذَ طَعَامًا لِلْكَلْبِ خَيْرٌ مِنْ أَنْ يَأْكُلَ فَوْقَ شِبَعِهِ .

**1468.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் பல மக்களைப் பார்த்திருக்கிறேன். மடித்து வைக்கின்ற அளவிற்கு ஆடை அவர்களிடம் இருந்ததில்லை. (அவர்கள் தூங்கும் போது) தங்களுக்கும் பூமிக்கும் இடையில் (விரிப்புகள்) எதையும் விரித்ததில்லை. தங்களது வீட்டில் (தங்களது விருப்பத்திற்கு ஏற்ப) ஒரு குறிப்பிட்ட உணவை செய்யும்படி கட்டளை போட்டதில்லை. அவர்களில் ஒருவர் சாப்பிட்டாலும் வயிறு நிரம்புவதற்குள் நிறுத்திக் கொள்வார்.

மேலும் இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஒருவர் வயிறு நிரம்ப உணவு உண்பதை விட அந்த உணவை நாய்க்குப் போடுவது மேல்.

**கருத்து:**

நல்லோர் சான்றோரின் எளிமையான வாழ்க்கையை இமாம் அவர்கள் தங்களது சுருக்கமான வார்த்தைகளில் நமது கண்ணுக்கு முன் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்கள்.

கொஞ்சம் நமது வாழ்க்கையையும் அவர்களது வாழ்க்கையையும் ஒப்பிட்டுத்தான் பாருங்களேன்.

என்னே வித்தியாசம்!

எப்போதும் சொகுசான வாழ்க்கை, விருப்பமான உணவு, ஆடம்பரமான பொருள்கள் என்று நமது வாழ்வு முறை மாறியிருக்கிறது. சொர்க்கத்தில் அனுபவிக்க வேண்டியதை இங்கேயே அனுபவிக்க ஆசைப்படுவதைப் போல் அமைந்துள்ளது நமது வாழ்வு முறை.

உலக வாழ்க்கையில்தான் அதிக நாட்டம் கொண்டுள்ளோம். வசதியான வாழ்க்கையைத்தான் அதிகம் விரும்புகிறோம். ஆடம்பரமான பொருள்களைத்தான் ஆசைப்படுகிறோம்.

அந்த நல்லோர் சான்றோர் மறுமைக்காக வாழ்ந்தனர். உலகத்தை ஒருபொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. உலகத்தையும் அதன் வசதியையும் மதிக்கவே இல்லை. ஒன்றுக்கு அதிகமான இரண்டு ஆடைகள் கூட அவர்களிடம் இருந்ததில்லை. தூங்கு வதற்கு விரிப்பைக் கூட எதிபார்த்ததில்லை. உணவில் எதையும் ஆசைப்பட்டதில்லை. சாப்பிட்டாலும் வயிறு நிரம்ப சாப்பிட்டதில்லை.

இதற்கு என்ன காரணம்! அவர்கள் இதையெல்லாம் தங்கள் மீது ஹராமாக ஆக்கிக் கொண்டார்களா!

அப்படி இல்லை. அவர்கள் மறுமையின் பக்கம் கவனம் செலுத்தியதால் உலகத்தின் பக்கம் அவர்களின் கவனம் செல்லவில்லை. சொர்க்க இன்பங்களில் அவர்கள் ஆசை கொண்டதால் உலக வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில் அவர்களது மனம் விரும்பவில்லை. மறுமையின் அமல்களை சேகரிப்பதில் அவர்களுக்கு இருந்த தீவிரம் உலக காரியங்களை விட்டு அவர்களை முற்றிலுமாக திருப்பி விட்டது.

அவர்களிடம் உலகம் விருப்பமற்ற ஒன்றாக ஆகிவிட்டது. உலக சுகம் வெறுக்கப்பட்ட ஒன்றாக ஆகிவிட்டது. உலக இன்பம் ஒதுக்கப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது.

விரும்பாத ஒன்றில் கவனம் எப்படி செல்லும்!

நாட்டமில்லாத ஒன்றில் மனம் எப்படி ஈடுபடும்!

ஆசையில்லாத ஒன்றில் ஆர்வம் எப்படி வரும்.

யார் எதை விரும்புவாரோ அதில்தான் அவர் கவனம் செலுத்துவார்.

யார் எதை நாடுவாரோ அதில்தான் அவரது மனம் ஈடுபாடு காட்டும்.

யார் எதை ஆசைப்படுவாரோ அவர் அதைத்தான் அடைய ஆர்வம் காட்டுவார்.

இறைத்தூதர்கள் உலகில் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்கள் எதை ஆசைப்பட்டார்கள்? அவர்கள் எதில் கவனம் செலுத்தினார்கள். அவர்கள் எதை விரும்பினார்கள்? அவர்களது வீடு, உடை, உணவு, விரிப்பு எப்படி இருந்தன?

இதோ இறைத்தூதரின் வாழ்க்கை ஹதீஸ் நூல்களில் பதியப் பட்டுள்ளது.

இரண்டு நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டதில்லை, ஒரு நாளில் இருவேளை சாப்பிட்டதில்லை, இரண்டு மாதங்கள் ஆகியும் வீட்டில் சமைப்பதற்கு உணவுப் பொருள் ஏதும் இருந்ததில்லை. பல நாட்கள் வீட்டில் தண்ணீரைத் தவிர உணவுகள் ஏதும் இருந்ததில்லை. விரிப்பில்லாமல் தூங்கியதால் கட்டிலின் கயிறுகள் நபியவர்களின் பொன் மேனியை காயப்படுத்தின.

கனீமத்துகள் (போரில் கிடைத்த பொருள்கள்) குவிந்தாலும் அவற்றை யெல்லாம் ஏழைகளுக்குப் பங்கிட்டார்கள். அன்பளிப்புகளையும் தேவை உள்ளவர்களுக்கே கொடுத்து உதவினார்கள்.

ஆம், இந்த இறைத்தூதரின் வாழ்க்கையைப் பின்பற்ற நினைக்கின்ற ஒருவர் மறுமையை மறந்த உலகவாசிகளின் வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பாரா?

நீண்ட பயணத்தின் இடையில் இளைப்பாறுகின்ற ஒரு பயணி அந்த இடத்தில் சுகத்தைத் தேடுவாரா?

தற்காலிகமாகத் தங்கி இருக்கின்ற இடத்தில் வசதிகளை விரும்புவாரா?

இன்று உலக இன்பங்களில் நமது கவனம் அதிகம் சென்று விட்டதால் மறுமையை கவனிக்க முடியவில்லை. உலக வசதிகளை நாம் பழகிவிட்டதால் செல்வங்கள் எல்லாம் அதற்கே செலவழிக்கப்படுகின்றன.

வசதியாக வாழ்வதற்காகவே சம்பாதிக்கிறோம். வசதிகளை கூட்டிக் கொண்டே போவதால் எவ்வளவு சம்பாதித்தாலும் அது பத்துவதில்லை. ஹலாலான வழியில் வரும் சம்பாத்தியம் குறைவாக இருப்பதால் குறுக்கு வழியில் அதிகம் சம்பாதிக்க நாடுகின்றனர்.

வகைவகையான உணவுகள் எப்போதும் சமைக்கப்படுவதால், ஆடம் பரமான பொருள்கள் அவசியப் பொருள்களாக வாங்கப்படுவதால், வசதிகளுக்காக அதிகம் செலவழிக்கப்படுவதால் எப்போதும் பற்றாக்குறைதான் நிலவுகிறது. எவ்வளவு சம்பாதித்தாலும் மனம் நிறைவடைவதில்லை. ஏழைகளின் பக்கம் கவனம் செல்வதில்லை. பிறருக்குக் கொடுக்க மனம் வருவதில்லை.

- **யா அல்லாஹ்! எமது நிலையை நினைத்து வருந்துவோர் இல்லையா! அழுபவர் நம்மீது அழட்டும்!**
- **அல்லாஹ்வே எங்களை சீர்திருத்து! மறுமையின் பக்கமும் அதன் அமல்களின் பக்கமும் எங்களை திருப்பு! சான்றோர் வழியில் எங்களை வழிநடத்து!**

ஆமீன்!

• • •

## பிற கடமைகளை மறக்காதே !

١٤٦٩. حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ إِبْرَاهِيمَ حَدَّثَنَا عَبْدُ الْمَلِكِ بْنُ الصَّبَّاحُ عَنْ عِمْرَانَ بْنِ حُدَيْرٍ عَنِ الْحَسَنِ قَالَ يَقُولُ أَحَدُهُمْ أَحُجُّ أَحُجُّ قَدْ حَجَجْتَ صِلْ رَحِمًا نَفِّسْ عَنْ مَغْمُومٍ أَحْسِنْ إِلَى جَارٍ.

**1469.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஒருவர் கூறுகிறார், "நான் ஹஜ்ஜுக்குப் போகிறேன், நான் ஹஜ்ஜுக்குப் போகிறேன் என்று." (நான் அவருக்குக் கூறுகிறேன்:) நீ (பல முறை) ஹஜ் செய்துவிட்டாய். (உனது) இரத்த உறவு ஒன்றை சேர்த்துக் கொள்! சிரமப்படுகின்ற ஒருவரின் சிரமத்தை நீக்கு! அண்டை வீட்டார் ஒருவருக்கு நன்மை செய்!

**கருத்து:**

ஹஜ் ஒரு மகத்தான வணக்கம். அது ஒரு நன்மையான வழிபாடு. ஹஜ் செய்வதால் நன்மைகள் ஏராளம் கிடைக்கும். அல்லாஹ்வுக்கு விருப்பமான அமல்களில் ஒன்று ஹஜ்.

ஹஜ் செய்வதால் உள்ளும் புறமும் சுத்தமடைகின்றன. அது ஒரு ஜிஹாது. பல வகையான நல்ல அமல்களை தன்னுள் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த இபாதத்து ஆகும்.

சரி, இவ்வளவு சிறப்பான இபாதத்தை ஒருவர் எந்த எண்ணத்தில் செய்கிறார்? அல்லாஹ்விற்காக மட்டும் செய்யப்படவேண்டிய இந்த இபாதத்தை பலர் பகட்டுக்காக, பெருமைக்காக, புகழுக்காக செய்கின்றனர். தான் இத்தனை ஹஜ் செய்தவர் என்று மக்களுக்கு மத்தியில் தற்பெருமைப் பேசுகின்றனர். தற்புகழ்ச்சி செய்கின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் மற்ற பல முக்கியமான நல்ல காரியங்களை மதிப்பதுமில்லை, அவற்றுக்குரிய உரிமையை கொடுப்பதுமில்லை.

ஹஜ் செய்வதில் மட்டும் கவனம் செலுத்துகின்ற இவர்கள் தங்கள் மீது கடமையான மற்ற காரியங்களை எப்படி நிறைவேற்றுகின்றார்கள்?

ஒவ்வொரு இபாதத்திற்கும் நல்ல காரியத்திற்கும் அவற்றுக்குரிய முக்கியத்துவத்தைத் தருகின்றார்களா?

பல முறை ஹஜ் சென்றுவருபவர்கள் ஊர் திரும்பியவுடன் எந்த அளவு வணக்க வழிபாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றார்கள்?

அல்லாஹ்விற்கு மிக விருப்பமான, மார்க்கத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்ட மற்ற நல்லறங்களை இவர்கள் கவனத்துடன் செய்கின்றார்களா? அப்படி செய்தால் அல்ஹம்து லில்லாஹ்.

இல்லையெனில் இவர்கள் வெறும் பகட்டுக்காக, பெயருக்காக, புகழுக்காக, பெருமைக்காக ஹஜ் செய்பவர்களாகவே கருதப்படுவார்கள். அல்லாஹ் பாதுகாப்பானாக!

இங்கே இமாம் குறிப்பிட்டிருக்கின்ற மூன்று நற்காரியங்களை பலர் கவனத்தில் கொள்வதே இல்லை. இந்த மூன்று காரியங்கள் வெளியில் தெரிவதில்லை. ஆனால், அல்லாஹ்விடம் அவை மிகுந்த சிறப்பிற்குரியவை. உறவுகளை சேர்த்து வாழ்வது, அண்டை வீட்டாருக்கு நன்மை செய்வது, சிரமப்படுவோருக்கு உதவுவது இவை ஒவ்வொன்றும் மிக மிக உயர்ந்த நல்ல அமல்களாகும்.

எத்தனையோ பலர் இப்படித்தான் இருக்கின்றனர். உறவுகள் விஷயத்தில் மிகவும் மோசமாக நடந்து கொள்கின்றனர். உறவுகளைப் பேணுவதில்லை. உறவினரில் உள்ள ஏழைகளை மதிப்பதில்லை. தங்களது செல்வத்தில் அவர்களுக்குரிய ஹக்கை கொடுப்பதில்லை. உறவினர்களின் குழந்தைகள் விஷயத்தில் அக்கறை செலுத்துவதில்லை.

ஊருக்குக் கொடுப்பார்கள். உறவை மறந்துவிடுவார்கள்.

ஊருடன் நட்புறவை பேணுவார்கள். உறவுடன் உறவை முறிப்பார்கள்.

அந்நியரை ஆதரிப்பார்கள். உறவுகளை அலட்சியம் செய்வார்கள்.

மாற்றாரை மதிப்பார்கள். தன்னவர்களை அவமதிப்பார்கள்.

பிறருக்குக் கை கொடுப்பார்கள். உறவுக்கு கைவிரிப்பார்கள்.

பிறருக்கு வள்ளலாகவும் உறவுக்கு கடைந்தெடுத்த கருமியாகவும் இருப்பார்கள்.

பிற மக்களுக்கு நெஞ்சத்தில் ஈரத்தை காட்டுவார்கள். உறவுக்கு கல்நெஞ்சக்காரர்களாக இருப்பார்கள்.

இன்னும் சிலர், எல்லோரையும் நினைவில் வைப்பார்கள். அண்டை வீட்டாரை மறந்துவிடுவார்கள். மறந்திடுவார்கள்.

பிறருக்கு நல்லதை செய்வார்கள், அண்டைவீட்டாருக்கு கெடுதி செய்வார்கள் அல்லது அவர்களை மறந்து விடுவார்கள்.

பலர் அண்டைவீட்டாரின் எந்த சுக துக்கங்களிலும் கலந்து கொள்ள மாட்டார்கள். அவர்களுடன் இன்முகத்துடன் பேச மாட்டார்கள். அவர்களுக்கு உதவ மாட்டார்கள்.

இன்னும் பலர், பணக்காரர்களுக்கு அள்ளிக் கொடுப்பார்கள். உண்மையில் சிரமத்தில் சிக்கித் தவிப்பவர்களுக்கு ஏதும் உதவிக்கரம் நீட்ட மாட்டார்கள்.

தேவையற்ற, ஆடம்பரமான பல செலவுகளைச் செய்வார்கள். பகட்டான பல காரியங்களைச் செய்வார்கள். ஆனால், தேவையுள்ளவர்கள் வந்து விட்டால் முகம் சுளித்துக் கொள்வார்கள்.

வசதியானவர்களுக்கு வாரிக் கொடுப்பார்கள். வறியவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவ மாட்டார்கள்.

சுகபோகமான பழக்கவழக்கங்களுக்குக் கணக்குப் பார்க்க மாட்டார்கள். இல்லாதவர்களுக்கு உதவுவதில் மட்டும் கணக்குப் பார்ப்பார்கள்.

குர்ஆனையும் ஹதீஸையும் படித்தவர்களுக்குத் தெரியும் இந்த மூன்று காரியங்களும் எவ்வளவு சிறப்பானவை என்று.

- உறவை மறந்தவர் சொர்க்கம் செல்ல மாட்டார்.
- அண்டை வீட்டாரை ஆதரிக்காதவர் ஈமானைப் பெற மாட்டார்.
- வறியவருக்கு உதவாதவர் இறைவனின் அன்புக்குத் தகுதியாக மாட்டார்.

ஆகவே, இப்படி தன்னைச் சுற்றி இருக்கின்ற பல நல்லறங்களை எல்லாம் மறந்துவிட்டு, அவற்றை எல்லாம் புறக்கணித்துவிட்டு, ஹஜ் சென்று பெருமை தேடுகின்ற மக்களுக்கு இமாம் அவர்கள் இப்படி அறிவுரை கூறுகிறார்கள்.

“நீதான் ஹஜ் செய்து விட்டாயே! உன்னைச் சுற்றி உள்ள மக்களை பார்த்தாயா? அவர்களில் உள்ள உன் உறவுகளைக் கவனித்தாயா? உன் அண்டை வீட்டாரை ஆதரித்தாயா? வறியவருக்கு என்ன செய்தாய்?

இதை எல்லாம் நீ செய்யாமல் வெறும் ஹஜ்ஜுக்குச் செல்வதால் என்ன பலன்?”

இதை எல்லாம் நீ செய்யாமல் பல முறை ஹஜ்ஜுக்குச் செல்வதால் மட்டும் என்ன பலன்?”

- **அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக!**
- **நன்மைகள் அனைத்தையும் செய்ய நமக்கு உதவுவானாக!**
- **இக்லாஸைத் தருவானாக!**

ஆமீன்.

• • •

# விளம்பரம் வேண்டாம்

١٤٧٠- حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا أَبُو أَحْمَدَ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ يُونُسَ عَنِ الْحَسَنِ قَالَ إِنْ كَانَ الرَّجُلُ لَيَكُونُ فَقِيهًا جَالِسًا مَعَ الْقَوْمِ فَيَرَى بَعْضُ الْقَوْمِ أَنَّ بِهِ عِيًّا وَمَا بِهِ مِنْ عِيٍّ إِلَّا كَرَاهِيَةَ أَنْ يَشْتَهِرَ.

**1470.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: "ஒருவர் மார்க்க சட்ட வல்லுநராக இருப்பார். அவர் மக்களுடன் அமர்ந்து இருக்கும் போது மக்களில் சிலர் அவருக்கு பேசத்தெரியாது (பேச இயலாதவர்) என்று நினைப்பார்கள். ஆனால், அவருக்கு பேச இயலாமை இல்லை. மாறாக, தான் பிரபலமாகுவதை வெறுத்து வாய் மூடி இருப்பார்.

**கருத்து:**

சிலர் தாம் அறிவாளி, கல்வி கற்றவர் என்று காண்பிப்பதற்காகவே மக்களுக்கு முன் பேசுகின்றனர்.

மார்க்க சட்டம் தன்னிடம் கேட்கப்படவில்லை என்றாலும் தானாக முன்வந்து தங்கள் கருத்துகளைக் கூறுகின்றனர். அந்த சபையில் தங்களை விட தேர்ச்சி பெற்ற கல்விமான்கள் பிரசன்னமாகி இருந்தும் அவர்களை மதிக்காமல் தங்களை முன்னிலைப்படுத்துகின்றனர்.

சட்டங்கள் கேட்கப்படும் போது முந்திக்கொண்டு தங்கள் கருத்துகளை கூறுவதில் துணிகின்றனர்.

மார்க்க விஷயங்களில் கருத்துகளைக் கூறும்போது அல்லாஹ்வை அஞ்சுவதில்லை.

தாம் மக்களிடம் அறியப்பட வேண்டும் என்பதற்காக மக்களுக்கு முன் பிரசங்கம் செய்ய ஆசைப்படுகின்றனர். தங்களைப் பெரிய ஆசிரியர்கள் என்று மக்கள் போற்ற வேண்டும் என்பதற்காகவே கல்வி போதிக்க ஆர்வப்படுகின்றனர். ஆர்வம் கொள்கின்றனர்

இதனால் முகஸ்துதியும் பெருமையும் அவர்களிடம் குடி கொள்கிறது. பிறகு அந்த இரு நோய்கள் (நோய்களும்) அவர்களை விட்டு விலகுவது மிகச் சிரமமாகி விடுகிறது.

ஆகவே, மனத்தூய்மையுடன் கல்வி கற்றவர் தன்னிடம் கேள்வி கேட்கப்பட்டால் மட்டும் தனது கருத்தைக் கூறுவார்; மூத்தவர்களுக்கு முன்னுரிமை அளிப்பார்; தான் பேசினாலும் கற்பித்தாலும் அல்லாஹ்வை பயந்து அல்லாஹ்விற்காகவே அதை செய்வார். தான் பிரபலமாகுவதை முடிந்த அளவு தவிர்க்கவும் வெறுக்கவும் செய்வார்.

- பிரபலத்தை (பிரபலமாவதை) விரும்புவது ஒரு கெட்ட நோய் ஆகும்.
- தான் அறியப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஒரு கெட்ட குணமாகும்.
- வாய்ப்புகளைத் தேடி அலைவது ஒரு கெட்ட ஆசையாகும்.

தன்னை சரிசெய்து கொண்டால் மார்க்கத்திற்குப் பணி செய்வதற்குரிய வாய்ப்பை அல்லாஹ் வழங்குவான் என்று இமாம் அப்துல் காதிர் ஜீலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாக அறிஞர்கள் வாயிலாக கேள்விப்பட்டுள்ளோம்.

மனத்தூய்மையை அடைவதற்கு மிகப் பெரிய முயற்சி தேவை.

சிரமப்படாமல் உளத்தூய்மையை அடையமுடியாது.

உளத்தூய்மை இல்லாமல் கல்வி கற்பதும் கற்பிப்பதும், இறை பொருத்தத்தை நாடாமல் புகழுக்காக பிரசங்கம் செய்வதும் பயான் பேசுவதும் குத்பா கொடுப்பதும் மிகப் பெரிய ஆபத்தான செயலாகும்.

- உளத்தூய்மை அடக்கத்தைக் கொடுக்கும்.
- மனத்தூய்மை பணிவை வளர்க்கும்.
- புகழைத் தேடுவது பெருமையை உண்டாக்கும்.
- பிரபலமாகுவதை விரும்புவது இறை நெருக்கத்தை விட்டு தூரமாக்கும்.
- மக்களிடம் மதிப்பை விரும்புவது கல்வியின் ஒளியை பறித்து விடும்.

அழைப்புப் பணி, மற்றும் மார்க்கப் பணிகளில் ஏற்படும் சிரமங்களையும் இன்னல்களையும் நெருக்கடிகளையும் இக்லாஸ் உள்ளவரால் மட்டுமே தாங்க முடியும்.

இக்லாஸ் உள்ளவருக்கு உலகம் ஒரு பொருட்டல்ல.

இக்லாஸ் உள்ளவரிடம் செல்வத்திற்கு மதிப்பிருக்காது.

இக்லாஸ் உள்ளவர் பதவிகளை ஆசைப்படமாட்டார்.

இக்லாஸ் உள்ளவர் அற்ப துன்யாவிற்கு விலைபோக மாட்டார்.

இக்லாஸுடையவருக்கு மார்க்கத்திற்காக தான் சந்திக்கின்ற சோதனைகள் இன்பமாக இருக்கும்.

- **அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு! மனத்தூய்மையை எங்களுக்குத் தா!**
- **உன்முகத்தை நாடுபவர்களாக மறுமையை மட்டும் தேடுபவர்களாக எங்களை ஆக்கு!!**
- **இக்லாஸின் சுவையை எங்களுக்குத் தா!**

ஆமீன்!

## ரஹ்மானைப் புகழாமல் இருக்க முடியுமா?

١٤٧١ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ إِبْرَاهِيمَ حَدَّثَنَا أَبُو سُفْيَانَ الْحِمْيَرِيُّ حَدَّثَنَا سُفْيَانُ بْنُ حُسَيْنٍ قَالَ كَانَ الْحَسَنُ كَثِيرًا مَا يُرَدِّدُ هَذَيْنِ الْحَرْفَيْنِ اللَّهُمَّ لَكَ الْحَمْدُ عَلَى حِلْمِكَ بَعْدَ عِلْمِكَ وَلَكَ الْحَمْدُ عَلَى عَفْوِكَ بَعْدَ قُدْرَتِكَ.

**1471.** சுஃப்யான் இப்னு ஹுசைன் கூறுகிறார்: இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் இந்த இரண்டு வாக்கியங்களை திரும்பத் திரும்பக் கூறும் வழக்கம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

اَللَّهُمَّ لَكَ الْحَمْدُ عَلَى حِلْمِكَ بَعْدَ عِلْمِكَ وَلَكَ الْحَمْدُ عَلَى عَفْوِكَ بَعْدَ قُدْرَتِكَ

அல்லாஹ்வே! நீ (அடியார்களின் குற்றங்களையும் குறைகளையும்) அறிந்திருந்தும் நீ (அவர்களை) சகித்துக் கொள்கிறாய், உனக்கே எல்லாப் புகழும். நீ (அடியார்களை தண்டிப்பதற்கு) ஆற்றல் பெற்றிருந்தும் நீ (அவர்களை) மன்னிக்கின்றாய், உனக்கே எல்லாப் புகழும்.

**கருத்து:**

இமாம் அவர்களின் இந்த தஸ்பீஹ் மிகவும் ஆழமான கருத்துடையது.

அல்லாஹ்வின் பண்புகளையும் குணங்களையும் அவர்கள் புரிந்ததின் வெளிப்பாடுதான் இந்த தஸ்பீஹை அவர்கள் அதிகம் கூறிவந்தது.

அடியார்கள் ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்விற்கு மாறுசெய்வதில் மூழ்கி இருக்கின்றனர், மறதியில் வீழ்ந்து கிடக்கின்றனர், பாவங்களில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

அல்லாஹ்வின் அருளையும் கருணையையும் அருட்கொடைக ளையும் வாழ்நாள் முழுக்க அனுபவிக்கின்றனர். இந்த உலகில் ஒவ்வொரு நொடியும் அதில் நமக்கு கிடைக்கின்ற சுகங்களும் இன்பங்களும் செல்வங்களும் பாக்கியங்களும் அவனுடைய அருளிலிருந்து உள்ளவையே.

அடியார்களின் குறைகளை அல்லாஹ் அறிந்திருந்தும் அவன் மிக்க சகிப்போடு இருக்கின்றான். அவர்களை உடனே தண்டிப்பதில்லை. உடனே வேதனையை இறக்குவதில்லை. இது அவனின் கருணையின் வெளிப்பாடாகும்.

நமது வாழ்க்கையை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். நமது செயல்களை நாம் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்.

நமது உள்ளங்களில் எத்தனையோ பல தீய எண்ணங்கள் வந்து போகின்றன. அல்லாஹ் அவற்றை அறிகின்றான். ஆனால், நம்மை தண்டிக்காமல் சகித்துக் கொள்கிறான்.

தனிமையில் பல பாவங்களைச் செய்து விடுகிறோம். பல கடமைகளை பாழாக்கி விடுகிறோம். நம்மை தண்டிப்பதற்கு அவன் முழு ஆற்றல் பெற்றிருக்கின்றான். நாமும் பெரும் குற்றவாளிகளாக இருக்கின்றோம். இருந்தும் அவன் நம்மை மன்னிக்கின்றான்.

இப்படிப்பட்ட அந்த அருளாளனை புகழாமல் எப்படி இருக்க முடியும்!

நமது குறைகளையும் குற்றங்களையும் அவன் அறிந்தும் நம்மை தண்டிக்காமல் சகிப்போடு இருக்கின்றான். நமக்கு அவன் செய்த அருள்களை அகற்றி விடுவதில்லை, அவனது அருட் கொடைகளை பறித்து விடுவதில்லை. நமக்கு அவகாசம் அளிக்கின்றான். நாம் அவன் பக்கம் திரும்புவதற்கு வாய்ப்பளிக்கின்றான். நாம் திருந்துவதற்கு நமக்கு சூழ்நிலைகளை ஏற்படுத்துகின்றான்.

நம்மை தண்டிப்பதற்கு அவனுக்கு முழு உரிமை உள்ளது. அவன்

நம்மை தண்டித்தால் நாம் என்ன செய்ய முடியும். வேறு யார்தான் அவனை என்ன செய்ய முடியும். அவன் அனைவரையும் மிகைத்தவன். இருந்தும் அவன் நம்மை மன்னிக்கின்றான்.

இப்படிப்பட்ட அந்த தயாளனை எப்படிப் புகழாமல் இருக்க முடியும்!

கவனிக்க வேண்டியது!

அடியான் பாவம் செய்யும் போது, “அல்லாஹ் அதை பார்க்கவில்லை, அவனுக்கு அது தெரியாது” என்று எண்ணிவிட வேண்டாம்.

அவன் அதைப் பார்க்கின்றான். அவனுக்குத் தெரியாமல் அணுவும் அசையாது. அவனுக்கு தெரிந்திருந்தும் அவன் தண்டிப்பதில்லை என்றால் அவன் மகா சகிப்பாளன் என்பதால் அப்படி செய்கிறான். அடியார்களை அவன் தண்டிக்காமல் விடுவது அவன் மகா மன்னிப்பாளன் என்பதால் ஆகும்.

- **ஆகவே, அடியான் அந்த அருளாளனின் சகிப்புத் தன்மையையும் மன்னிக்கும் தன்மையையும் தவறாக எடுத்துக் கொள்ளவேண்டாம். அவனை கோபப்படுத்திவிட வேண்டாம்.**
- **மாறாக, அவனை வணங்கி, வழிபட்டு, அவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து அவனது அருளையும், அன்பையும் அடைய அடியான் முயற்சி செய்வானாக!**

ஆமீன்.

## மறைக்கப்பட்ட அமலில்தான்...

١٤٧٢ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا إِسْمَاعِيلُ حَدَّثَنَا يُونُس قَالَ قَالَ الْحَسَنُ رَحِمَهُ اللهُ أَدْرَكْتُ أَقْوَامًا مَا كَانَ أَحَدُهُمْ يَسْتَطِيعُ أَنْ يُسِرَّ عَمَلًا فَيُعْلِنَهُ قَدْ عَلِمُوا أَنَّ أَحْرَزَ الْعَمَلَيْنِ مِنَ الشَّيْطَانِ عَمَلُ السِّرِّ وَأَنَّ أَحَدَهُمْ لَيَكُونُ عِنْدَهُ الزُّورُ وَأَنَّهُ لَيُصَلِّي خَلْفَ الْوَجْهِ مَا يَعْلَمُ بِهِ زُورَهُ .

**1472.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: நான் பல மக்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்களில் ஒருவர் ஓர் அமலை மறைவாக செய்ய முடிந்தால் அதை ஒரு போதும் வெளிப்படுத்தி செய்யவே மாட்டார். அமல்களில் ஷைத்தானிடமிருந்து பாதுகாக்கப்பட்ட அமல் மறைவாக செய்யப்பட்ட அமல்தான் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரிடம் விருந்தினர்கள் இருப்பார்கள். அவர் அவர்களுக்கு பின்னால் தொழுவார். ஆனால், அதை அவரின் விருந்தினர்கள் அறிந்துகொள்ள முடியாது.

### கருத்து:

அல்லாஹ் மகா பரிசுத்தமானவன். நமது சான்றோரின் இக்லாஸை கவனியுங்கள். மனத்தூய்மைக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை கவனியுங்கள். அதற்காக அவர்கள் எடுத்த முயற்சியை கவனியுங்கள்.

முடிந்த அளவு அமல்களை மறைத்தே அவர்கள் செய்வார்கள். தங்களுடன் தங்கி இருக்கின்ற விருந்தினர்கள் கூட அறிந்து கொள்ளக் கூடாது என்று அமல்களை மறைத்து மறைத்துச் செய்தார்கள்.

வெளிப்படையாக அமல்கள் செய்வதை பயந்தார்கள். தங்களைப் பற்றி மக்கள் புகழ்ந்து பேசுவதை பயந்தார்கள். வெளிப்பகட்டை விட்டு பயந்து ஓடினார்கள்.

இன்று பலர் முகஸ்துதியை எவ்வளவு விரும்புகின்றனர். பிறர் பார்ப்பதற்கே அமல் செய்கின்றனர். தாங்கள் தனிமையில் செய்த அமல்களைக்கூட பலருக்குமுன் சபைகளில் சொல்லி தங்களுக்கு புகழைத் தேடுகின்றனர். இன்னும் பலரோ தாங்கள் செய்யாத அமல்களை தாங்கள் செய்ததாக சொல்லி பொய் புகழ்ச்சிப் பாடுகின்றனர். அல்லாஹ் பாதுகாப்பானாக!

- இக்லாஸ் இல்லாத அமல் ஒரு குப்பையைப் போன்று.
- இக்லாஸ் இல்லாத அமல் ஒரு கானல் நீரைப் போன்று.
- மலை போன்று அமல்கள் இருந்தாலும் அவற்றில் இக்லாஸ் இல்லை என்றால் அவை ஒரு தூசிக்குக்கூடச் சமமாகாது.

முகஸ்துதி ஒரு பேரழிவு, அது ஹிஜ்ரத், ஜிஹாது, தர்மம், கல்வி கற்பித்தல் போன்ற மாபெரும் நல்லமல்களைக் கூட அழித்து நாசமாக்கி விடும்.

இறைநம்பிக்கையாளர்களுக்கு மாபெரும் சோதனையே இந்த இக்லாசுக்காகப் போராடுவதுதான்.

இந்த நஃப்சு புகழை விரும்பும்.

இந்த நஃப்சு மதிப்பை விரும்பும்.

இந்த நஃப்சு கண்ணியத்தை விரும்பும்.

அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் துணியும். பொய் பேசும். செய்யாததை செய்ததாகச் சொல்லும். பிறர் செய்ததை தான் செய்ததாக சொல்லத் தூண்டும்.

ஆகவேதான் இந்த நஃப்சின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடினார்கள் நபி ﷺ அவர்கள்.

தனது திருமுகம் நாடப்படாத எந்த அமலையும் அல்லாஹ் அங்கீகரிப்பதில்லை. அப்படிப்பட்ட அமலை அல்லாஹ் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அப்படி ஒருவன் அமல் செய்தால் அதற்கு நற்கூலி இல்லை என்பது மட்டுமல்ல. மாறாக, அதற்கு பெரும் தண்டனை உண்டு. நாளை முகங்குப்புற நரகில் வீசி எறியப்படுவான்.

நீ யாருக்காக இதை செய்தாயோ அவரிடமே இதற்குரிய கூலியை வாங்கிக்கொள் என்று இறைவன் கூறுவான்.

அல்லாஹ்வை அன்றி அன்றைய தினம் யார் கூலி கொடுக்க முடியும்.

அதிகாரம் எல்லாம் அல்லாஹ்விற்கே உரிய தினம் அது.

யாரும் யாருக்கும் எதையும் செய்ய முடியாத தினம் அது.

உண்மையாளர்கள் மட்டுமே வெற்றி பெறும் தினம் அது.

உள்ளங்களின் இரகசியங்கள் வெளிப்பட்டுவிடும் தினம் அது.

யார்? எதை? யாருக்காக செய்தார்? என்ற உண்மை தெரிந்துவிடும் தினம் அது.

- **அல்லாஹ்வே! உளத்தூய்மையைக் கொடு!**
- **அல்லாஹ்வே! மன சுத்தத்தைக் கொடு!**
- **உனது விருப்பத்தையே எங்கள் இலக்காக, எங்கள் இலட்சியமாக, எங்கள் நோக்கமாக ஆக்கிவிடு!**
- **உன் அல்லாதவர்களுக்கு எங்கள் அமல்களில் எந்த பங்கையும் ஆக்கிவிடாதே!**

ஆமீன்.

• • •

## ஈடுகட்ட முடியாத இழப்பு...

١٤٧٣ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا أَبُو عُبَيْدَةَ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ كَانُوا يَقُولُونَ مَوْتُ الْعَالِمِ ثَلْمَةٌ فِي الْإِسْلَامِ لَا يَسُدُّهَا شَيْءٌ مَا اخْتَلَفَ اللَّيْلُ وَالنَّهَارُ .

**1473.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள் "ஆலிமுடைய மரணம் இஸ்லாமில் (அதாவது, இஸ்லாம் எனும் கோட்டையில்) ஏற்படுகின்ற ஒரு விரிசல் ஆகும். இரவும் பகலும் மாறி மாறி வரும் காலமெல்லாம் அதை ஏதும் அடைத்துவிட முடியாது" என்று முன்னோர் கூறுவார்கள்.

**கருத்து:**

மார்க்கக் கல்வியை கற்று அதன்படி தானும் வழி நடந்து, பிறரையும் வழி நடத்துகின்ற இறையச்சமுள்ள மார்க்க அறிஞர் ஒருவருடைய மரணம் முஸ்லிம்களுக்கு ஏற்படுகின்ற பேரிழப்பாகும்.

அந்த இழப்பை வேறு உலக வஸ்துக்கள் மூலம் நிவர்த்தி செய்யமுடியாது.

குர்ஆனையும் சுன்னாவையும் தனது நெஞ்சில் சுமந்து, அவை இரண்டையும் பாதுகாத்து, மக்களுக்கு மத்தியில் பரப்புகின்ற உயர்ந்த பணியை செய்பவர்கள்தான் ஆலிம்கள், அறிஞர்கள்.

அப்படிப்பட்ட ஆலிம் ஒருவரின் மரணம் எப்படி முஸ்லிம்களுக்கு இழப்பாக இருக்காது!?

ஓர் உண்மையான அறிஞருடைய கண்ணியம் இந்த இஸ்லாமிய மார்க்கத்தில் நபிமார்களுக்கு அடுத்த அந்தஸ்தாகும்.

உலகத்தில் மனிதன் எந்தப் பதவியை வேண்டுமானாலும் அடையலாம். ஆனால் நபித்துவம் என்பது அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு மட்டுமே கொடுப்பான். அந்த நபித்துவம் முடிந்து விட்டது. இனி இறைத்தூதர்களின் வருகை அறவே இல்லை.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் இறைத்தூதர்களின் வருகை நிறைவுற்றது. அவர்கள்தான் இறுதி நபி.

ஆனால், ஒருவர் மார்க்கக் கல்வியைக் கற்றால் இறைத்தூதர்களின் குடும்பத்தாரில் ஒருவராக ஆகலாம். இறைத்தூதர்களின் வாரிசாக ஆகலாம்.

ஒரு ராஜாவிற்கு மகனாகப் பிறப்பதைவிட ஒரு நபியின் குடும்பத்தில் பிறப்பது மாபெரும் பாக்கியம். அந்த நற்பாக்கியத்தை அல்லாஹ் மார்க்கக் கல்விக் கற்றோருக்கு வழங்குகிறான்.

அதாவது, அவர்கள் வமிசத்தால் ஒரு நபியின் குடும்பத்தில் பிறக்கவில்லை என்றாலும் அவர்கள் அந்த நபிமார்கள் கொண்டு வந்த மார்க்கத்தின் கல்வியைக் கற்றதால் அல்லாஹ் அந்த கல்விமான்களை அந்த நபிமார்களின் வாரிசுகளாக அங்கீகரித்துக் கொண்டான்.

அதுமட்டுமா, தனது ஏகத்துவ சாட்சியத்திற்கு மகா கண்ணியத் திற்குரிய தனது சாட்சியத்துடன் வானவர்களின் சாட்சியத்தையும் கல்வி கற்ற அறிஞர்களின் சாட்சியத்தையும் சேர்த்துக் கூறுகிறான்.

இதைவிட ஒரு மாபெரும் கண்ணியம் வேறு என்ன இருக்க முடியும்.

கல்வியறிவு உள்ளவர்களை கண்பார்வை உள்ளவர்களாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

கல்வியறிவு பெற்றவர்கள் இறைவேதம் அல்குர்ஆனின் சாட்சியாளர்கள் என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

கல்விகற்றவர்களின் கண்ணியத்தை மற்ற முஃமின்களின் கண்ணியத்தை விட பன்மடங்கு அல்லாஹ் உயர்த்துவதாக வாக்களிக்கின்றான்.

ஒரு கல்விமான் மக்களுக்கு அவர்களின் மார்க்கத்தை கற்பிக்கிறார். இறைச் சட்டங்களை எடுத்தியம்புகிறார். அவர்கள் மீது கடமையாக்கப்பட்டதை நினைவூட்டுகிறார். அவர்கள் மீது தடுக்கப்பட்டதை விட்டு அவர்களை எச்சரிக்கிறார். படைத்த இறைவனின் பக்கம் மக்களை அழைக்கிறார்.

இறைவனின் மார்க்கம் என்ன சொல்கிறது என்பதை கல்வி கற்றவர் களிடமிருந்துதான் நாம் அறியமுடிகிறது. நமது பிரச்சனைகளுக்கு குர்ஆன், சுன்னாவின் தீர்வை அவர்களிடமிருந்துதான் நாம் அறிய முடிகிறது.

அவர்கள் மூலம்தான் குர்ஆன், சுன்னா பாதுகாக்கப்படுகின்றது. எதிரிகளிடமிருந்து மார்க்கத்தின் மீது வீசப்படுகின்ற விமர்சனங்க ளுக்கு அவர்கள்தான் பதில் அளிக்கிறார்கள்.

அவர்களின் இளையவர்கள் நமது குழந்தைகளுக்கு இறைவேதத்தை போதிக்கின்றார்கள். அவர்களின் மூத்த சட்ட மேதைகள் நமக்கு சட்ட தீர்ப்பு வழங்குகிறார்கள்.

ஆகவேதான், அவர்களின் மரணம் நமக்கு பெரும் கைசேதமும் பெரும் இழப்பும் ஆகும்.

ஒவ்வொரு பேரறிஞரும் அவர் மரணிக்கும்போது ஒரு வெற்றிடத்தை விட்டுச் செல்கிறார். அந்த இடம் அவருக்குப் பின்னால் நிரப்பப் படாமல் காலியாகவே இருந்துவிடுகின்றது. (இந்த வாக்கியம் ஷைக் நூர் ஆலம் கலீல் அமீனி அவர்களுடையது.)

ஆகவே, முஸ்லிம்கள் தங்கள் கல்விமான்களை மதிப்பதோடு அவர்களிடம் சென்று கல்வியைக் கற்கவேண்டும்; தங்கள் சந்தேகங்களுக்குத் தேவையான விளக்கத்தைக் கேட்டு தெரிந்து கொள்ளவேண்டும்.

அவர்களுடன் இருப்பதையும் அவர்கள் நம்முடன் இருப்பதையும் அல்லாஹ்வின் அருளாகக் கருத வேண்டும்.

கல்விமான்களை அவர்களின் வறுமை, எளிமையானத் தோற்றம் மற்றும் ஏழ்மையால் உதாசீனப்படுத்துவதோ மரியாதைக் குறைவாக நடத்துவதோ அல்லாஹ்வின் அருளை அவமரியாதை செய்வதாகும்.

கல்விமான்களைப் பற்றி புறம் பேசுவதோ அவர்களின் மனதை காயப்படுத்துவதோ அவர்களுக்கு தொந்தரவு தருவதோ ஏனைய மக்களுக்கு செய்வது போன்றல்ல.

மாறாக, அது குற்றத்தால் மிகக் கடுமையானது. அல்லாஹ் பாதுகாப்பானாக! மார்க்கத்தை மதிப்பவர்கள் மார்க்க அறிஞர்களை மதிப்பார்கள். அல்லாஹ் மிக அறிந்தவன்.

- **அல்லாஹ்வே! எங்கள் கல்விமான்களை எங்களுக்கு பாதுகாத்துக் கொடு! அவர்களுக்கு நீண்ட வாழ்க்கையைக் கொடு! அவர்கள் மூலம் எங்களுக்கு நற்கல்வியைக் கொடு!**
- **அவர்களுக்கு உடல் சுகத்தையும் மன நிம்மதியையும் பரகத்துகளையும் தாராளமாகக் கொடு!**
- **அல்லாஹ்வே! எங்களுக்குக் கல்வியையும் கல்விமான்களின் நட்பையும் அவர்களுக்கு சேவை செய்கின்ற வாய்ப்பையும் நல்குவாயாக! யா அல்லாஹ்! எங்கள் பாவங்களையும் குற்றங்களையும் மன்னித்தருள்!**

ஆமீன்!

# என்னவென்று சொல்வேன் என் நிலையை!?

١٤٧٤ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ مَرْوَانَ الْعِجْلِيُّ حَدَّثَنَا عَطَاءٌ الْأَزْرَقُ قَالَ سَمِعْتُ رَجُلًا سَأَلَ الْحَسَنَ كَيْفَ أَنْتَ كَيْفَ حَالُكَ؟ قَالَ يَا شَرَّ حَالٍ وَمَا حَالُ مَنْ أَصْبَحَ وَأَمْسَى يَنْتَظِرُ الْمَوْتَ لَا يَدْرِي مَا يَفْعَلُ اللَّهُ بِهِ .

**1474.** அதாஃ கூறுகிறார்: ஒருநாள் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் ஒருவர், நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? உங்கள் நிலைமை எப்படி உள்ளது? என்று கேட்டார். அவர்கள் கூறினார்கள்: என்னே மோசமான நிலை! காலையிலும் மாலையிலும் மரணத்தை எதிர்பார்த்திருப்பவனின் நிலையை என்னவென்று சொல்வது! அல்லாஹ் அவனுடன் எப்படி நடந்துகொள்வான் என்று அவனுக்குத் தெரியாதே!

**கருத்து:**

அநேகமாக இந்த நிகழ்வு இமாம் அவர்களின் பிந்திய காலத்தில் நடந்திருக்கலாம்.

ஆம், பொதுவாக இமாம் அவர்கள் மரணத்தையும் மறுமையையும் அதிகம் நினைவுகூர்பவர்களாக இருந்தார்கள். மரணத்தைப் பற்றி அதிகம் பேசுபவர்களாக இருந்தார்கள். மரணத்தை எதிர்பார்த்தவர்களாகவே வாழ்ந்தார்கள்.

உண்மையில் அப்படித்தான் வாழவேண்டும்.

காலையில் எழும்போது மாலைப்பொழுதை எதிர்பார்க்கக் கூடாது.

மாலையில் இருக்கும்போது மறுநாள் காலைப்பொழுதை எதிர் பார்க்கக் கூடாது.

இதுதான் இறைத்தூதரின் வழிகாட்டல்.

இந்த வார்த்தையை ஒருவர் கூறுவதாக இருந்தால் அதற்குத் தகுதி வேண்டும். வெறும் வார்த்தையால் மறுமைக் கவலை இருப்பது போன்றும் மரண பயம் இருப்பது போன்றும் பேசிவிட்டு செயல் அப்படி இல்லை என்றால் அவன் ஒரு முனாஃபிக், நடிப்பவன் ஆவான்.

இந்த நல்லவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர்.

இவர்கள் மரணத்திற்காக, மறுமைக்காக அமல்களை அதிகம் அதிகம் சேகரித்துக் கொண்டு இருந்தார்கள். பாவங்களை விட்டு விலகி வாழ்ந்தார்கள். அதிகம் தவ்பா செய்தவர்களாக பாவமன்னிப்புத் தேடியவர்களாக இருந்தார்கள்.

அவர்களது பகல்கள் கல்வியைத் தேடுவதிலும் ஹலாலான வாழ்வாதாரத்தை அவசியமான அளவிற்குத் தேடுவதிலும் கழிந்தது. இரவுகளோ இறைவழிபாட்டில், இறைவேதத்தை ஓதுவதில், இறைநினைவில் கழிந்தன.

இப்படிப்பட்டவர்கள் இந்த வார்த்தையைச் சொல்ல தகுதி பெற்றவர்கள்தான்.

நாமோ மறுமை நினைவு இருப்பது போன்று, சொர்க்கத்தின் மீது ஆசை இருப்பது போன்று நரகத்தின் மீது பயம் இருப்பது போன்று பேசுகிறோம். ஆனால், நம் செயல்கள் அதற்கேற்ப இருப்பதில்லை.

ஹராமை விட்டு விலகுவதில்லை. பாவங்களை விடுவதில்லை. குற்றங்களில் இருந்து திருந்துவதில்லை. வணக்க வழிபாடுகளில் ஈடுபாடுகள் இல்லை. இரவுகள் உணவு விரிப்புகளிலும் படுக்கை விரிப்புகளிலும் சுற்றித் திரிவதிலும் கழிகின்றன.

ஆனால், பேசுவது மட்டும் மறுமையின் மீது பயம் இருப்பது போன்று பேசுகிறோம். அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக!

சரி, ஒருவர் நம்மை விசாரிக்கும் போது அல்ஹம்து லில்லாஹ் என்று கூறாமல் இமாம் அவர்கள் ஏன் இப்படி பதில் கூறினார்கள்.?

ஆம், உலக நிலையைப் பற்றி பதில் கூறுவதாக இருந்தால் அவர்கள் அப்படித்தான் பதில் கூறி இருப்பார்கள்.

ஆனால், இமாம் அவர்கள் கேள்வி கேட்டவரின் கவனத்தை இம்மையிலிருந்து மறுமையின் பக்கம் திருப்ப விரும்பினார்கள்.

எனது உலக வாழ்வைப் பற்றி, எனது உடல் சுகத்தைப் பற்றி நீர் கவலைப்படுவதை விட எனது மறுமையைப் பற்றி நீ கவலைப்படு! உலகத்தில் நான் வாழவேண்டியதை வாழ்ந்துவிட்டேன். இப்போதோ மரணத்தை எதிர்நோக்கி இருக்கின்றேன்.

இந்த நேரத்தில் எனது உலக நிலையைப் பற்றி நான் என்ன சொல்வது?! என்று கவலைப்பட்டு இமாம் அவர்கள் இப்படி பதில் கூறினார்கள் போலும்.

ஆம், இந்த தருணத்தில் வாழ்ந்த சான்றோர்களின் பதில் அப்போதும் அதற்கு முன்பும் இதுவாகத்தான் இருந்தது.

ஆனால், நமக்கு முதுமையிலும் கூட உலக நினைவாகத்தான் இருக்கிறது. நரை வெளிப்பட்டும் கூட மரணத்தை இன்னும் பயப்படவில்லை. அதற்கு தயாரிப்பு செய்வதில் முனைப்புக் காட்டுவதில்லை.

நாம் கவனமற்றவர்களாகவே இருக்க நமது வாழ்நாள்கள் கழிகின்றன.

மரண நாள் (மரணம்) ஒவ்வொரு நாளும் நெருங்கி வருகிறது.

ஒவ்வொரு நாளும் உலகைவிட்டு தூரமாகிறோம்.

ஒவ்வொரு நாளும் மறுமைக்கு நெருக்கமாகிறோம்.

உடல் நலிவடைகிறது.

நோய் அதிகரிக்கிறது.

பலவீனம் தொற்றிக் கொள்கிறது.

கைகால்கள் தளர்ந்து விடுகின்றன.

தலைமுடிகள் நரைத்து விடுகின்றன.

நினைவுகள் மறந்துவிடுகின்றன.

கண் பார்வை மங்கிவிடுகின்றது.

காதுகள் கேட்க முடிவதில்லை.

கால்களால் நடக்க முடியவில்லை.

கைகளால் பிடிக்க முடியவில்லை.

திடீர் மரணம்..........

நம் கண் முன் பலர் சந்தூக்கில் பயணம் செய்வதைப் பார்க்கிறோம்.

நம் கையால் பல ஜனாஸாக்களைக் கழுவுகிறோம்.

பல ஜனாஸாக்களுக்கு தொழுகிறோம்..

பல ஜனாஸாக்களை தோளில் சுமந்து செல்கிறோம்.

பல ஜனாஸாக்களை கப்ரில் அடக்கம் செய்கிறோம்.

ஆனால்... ஆனால்......

நாமும் மரணிப்போம் என்ற எண்ணம் நமக்கு ஏற்படுவதில்லை. அப்படியே ஏற்பட்டாலும் சில வினாடிகளில் அது மறைந்து விடுகிறது.

அடுத்த சில நிமிடங்களில் சகஜ வாழ்க்கைக்குத் திரும்பி உலகில் மூழ்கிவிடுகிறோம்.

கடமையான வணக்கவழிபாடுகளை செய்வதிலும் நமது நிலை

மோசமாகவே உள்ளது. பிறகு, உபரியான வணக்கங்களைப் பற்றி என்ன சொல்வது!?

பொழுதுபோக்குகளுக்கும், இன்பங்களையும் சுகபோகங்களை யும் அனுபவிப்பதற்கும், சுவையான உணவுகளை ருசிப்பதற்கும், விளையாட்டுகளையும் வேடிக்கைகளையும் கண்டு கழிப்பதற்கும் நமது நேரங்களும் செல்வங்களும் செலவழித்து வரும் நமக்கு எங்கே மரணத்தைக் குறித்து சிந்திப்பதற்கும் மறுமைக்கான அமல்களை செய்வதற்கும் சொர்க்கத்தை தேடுவதற்கும் நேரம் இருக்கிறது?!!

அந்தோ நமது கதி என்னவோ! அந்தோ நமது நிலை என்னவோ!

குழந்தைப் பருவம் விளையாட்டில், சிறுபருவம் முதல் வாலிபம் வரை படிப்பில், (படிப்பு என்ற பெயரில்)

வாலிபம் முதல் கண் மூடும் வரை பொருளாதாரத்தைத் தேடுவதில், செல்வங்களை சேகரிப்பதில், வீடுகளை, மாட மாளிகைகளைக் கட்டுவதில், சொத்துக்களை வாங்கிக் குவிப்பதில், வியாபாரங்களில் முதலீடு செய்வதில், வர்த்தகங்களை பெருக்குவதில் இடை இடையே உலக சுற்றுலாக்கள் செல்வதில் இப்படித்தான் பலருக்கு வாழ்க்கை கழிகின்றது.

இதில் சிலருக்கு மார்க்கமும் மறுமையும்; அறுந்துபோய்விடும் கயிற்றில் சில நூல்கள் தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்று தொங்கிக் கொண்டிருக்கும்.

நமக்கு முன் உலகில் யாரும் வாழாததைப் போன்றும் நமக்கு பின்பு யாரும் இவ்வுலகில் வாழப் போவதில்லை என்பதைப் போன்றும்

நாமே முதலும் இறுதியும் போலும் நமக்கோ மரணமே இல்லை என்பது போன்றும் அல்லவா நமது வாழ்க்கை அமைப்பு இருக்கிறது.

என்ன நினைப்பில் மக்கள் வாழ்கின்றனர்?! என்ன கற்பனையில் மக்கள் மிதக்கின்றனர்?!

- **அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு! அல்லாஹ்வே! எங்களை மறுமையை நினைக்கும் மக்களில் ஆக்கிவிடு!**
- **அல்லாஹ்வே! எங்களை உன் அருளுக்கு உரியவர்களில் ஆக்கிவிடு!**
- **உன் அருளால் எங்களை மன்னித்துவிடு! சொர்க்கத்திற்கு எங்களிடம் தகுதி இல்லை. உன் அருளால் அதை எங்களுக்குத் தா!**
- **நாங்களோ நரகத்தின் செயல்களை வைத்திருக்கிறோம். உனது மன்னிப்பால் எங்களை மன்னித்து நரகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்!**

ஆமீன்.

# இறை நம்பிக்கையாளர் எப்படி இருப்பார்?!

١٤٧٥ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا أَبُو كَعْبٍ الْأَزْدِيُّ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ الْمُؤْمِنُ فِي الدُّنْيَا كَالْغَرِيبِ لَا يَجْزَعُ مِنْ ذُلِّهَا وَلَا يَأْنَسُ فِي عِزِّهَا لِلنَّاسِ حَالٌ وَلَهُ حَالٌ وَجِّهُوا هَذِهِ الْفُضُولَ حَيْثُ وَجَّهَهَا اللهُ عَزَّ وَجَلَّ .

**1475.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறியதை தான் கேட்டதாக அபூகஅப் அவர்கள் அறிவிக்கிறார்கள். துன்யாவில் -(உலகில்) வாழுகின்ற முஃமின் (நம்பிக்கையாளர்) பரதேசியைப் போன்று - அந்நிய ஊரில் வசிப்பவரைப் போன்று இருப்பார். அதில் தனக்கு நிகழும் இழிநிலையைக் கண்டு பதட்டம் அடைந்து விடமாட்டார். அதில் தனக்குள்ள கண்ணியத்தைக் கண்டு நிம்மதியும் அடைய மாட்டார். (பொதுவாக) மக்களுக்கு ஒரு நிலை உண்டு. அவருக்கு ஒரு (வித்தியாசமான) நிலை உண்டு. இந்த செல்வங்களை திருப்பிவிடுங்கள் அல்லாஹ் அவற்றை எங்கு திருப்பினானோ. (இந்த உலகத்தின் தேவையற்ற விஷயங்களை திருப்பிவிடுங்கள் அல்லாஹ் அவற்றை எங்கு திருப்பினானோ.)

**கருத்து:**

இறைநம்பிக்கையாளர்களின் நிலைமை மற்றவர்களின் நிலைமை யைப் போன்று அல்ல.

மற்றவர்கள் அவர்களுக்கு உலகம்தான் எல்லாம். இங்குள்ள செல்வம், மதிப்பு மரியாதை, சொத்து சுகம் இவைதான் அவர்களுக்கு முக்கியம்.

மறுமை நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. அவர்கள் மறுமையை எதிர்பார்த்தவர்கள் இல்லை. அதை நம்பியவர்களாகவும் இல்லை. இந்த உலகத்தோடு வாழ்க்கை முடிந்து விடுவதாக அவர்கள் கற்பனை செய்துள்ளார்கள்.

எனவே, அவர்களால் எந்த இழப்பையும் தாங்க முடியாது. துன்யா கிடைத்தால் பெரிதும் மகிழ்வார்கள். உலக கண்ணியத்தை வாங்க பெரிதும் பிரயாசைப்படுவார்கள்.

பகட்டு வாழ்க்கைக்கு ஆசைப்படுவார்கள்.

ஆடம்பரத்திற்கு அல்லல்படுவார்கள்.

அழிந்துபோகின்ற இந்த துன்யாவிற்காக அடித்துக் கொள்வார்கள்.

நிலையற்ற இந்த துன்யாவிற்காக போட்டி பொறாமை கொள்வார்கள்.

உடலையும் வயதையும் செல்வத்தை சேகரிக்கச் செலவழிப்பார்கள்.

அறிவையும் ஆற்றலையும் பொருளாதாரத்தைத் திரட்ட செலவு செய்வார்கள்.

செல்வம் வாழ்க்கைக்கு! வாழ்க்கை செல்வத்திற்கு!

செல்வம் எனக்கு! நான் செல்வத்திற்கு!

சிரிப்பதற்காக செல்வம்! செல்வத்திற்காக சிரிப்பு!

சிரமப்படாமல் இருக்க செல்வம்! சிரமப்பட்டால் தான் செல்வம்!

செல்வத்திற்காக உறவுகள்! உறவுகளுக்காக செல்வங்கள்!

இப்படியாக செல்வத்திற்காக பல காரணங்கள்! பல காரணங்களுக்காக செல்வங்கள்!

மனிதரில் பலர் செல்வத்திற்காக எதையும் செய்கின்றனர். பலர் பதவிக்காக எதையும் செய்கின்றனர்.

பலர் பெயர் புகழுக்காக எதையும் செய்கின்றனர்.

ஆக, இந்த உலகம்தான் பலரை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் இந்த உலகத்திற்காக ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

எப்போதும் பிசி!

எப்போதும் டென்சன்!

எப்போதும் மீட்டிங்!

எப்போதும் அப்பாய்ன்ட்மென்ட்!

எப்போதும் ரஷ்ஷிங்!

எப்போதும் ஹரி!

எப்போதும் எங்கேஜ்மென்ட்!

ஆனால், ஒரு முஃமின் அப்படி இருக்க மாட்டார். பொருளைத் தேடுவார். ஆனால், பேராசைப்பட மாட்டார். செல்வம் அவருக்குத் தேவை. ஆனால், அதற்காக தவறான வழியில் செல்ல மாட்டார்.

தன்னைப் படைத்த இறைவனை மறக்க மாட்டார். அவன் தன்னைப் படைத்த நோக்கத்தை மறக்க மாட்டார். தான் நிரந்தரமாக தங்கப்போகின்ற மறுமையை மறக்க மாட்டார்.

இந்த அழிந்து போகும் துன்யா வாழ்விற்காக அவர் செல்வத்தை சேகரிப்பதற்கு செலவிடுகின்ற நேரத்தை விட அழியாத மறுமை வாழ்விற்காக நன்மைகளை சேகரிப்பதற்கு அவர் செலவழிக்கின்ற நேரம் மிக அதிகமாக இருக்கும்.

ஒரு ஜான் வயிற்றுக்காக அவர் படுகின்ற சிரமங்களை விட எட்டு ஜான் கப்ருக்காக அவர் படுகின்ற சிரமம் மிக அதிகமாக இருக்கும்.

துன்யாவில் தனக்காக, தன் குடும்பத்திற்காக அவர் செலவழித்ததை விடவும் இங்கே துன்யாவில் விட்டுச் செல்கின்ற செல்வத்தை விடவும் அவர் மறுமைக்காக அனுப்பி வைத்தது மிக அதிகமாக இருக்கும்.

தனக்கு, தன் குடும்பத்திற்கு, தன் உறவுகளுக்கு, தன் நண்பர்களுக்கு அவர் செலவழித்த நேரத்தைவிட தன் இறைவனுக்காக அவர் செலவழித்த நேரம் அதிகமாக இருக்கும்.

தனது உலக தேவைகளுக்காக நின்ற நேரத்தைவிட தன் இறைவன் முன் அவனை திருப்தி படுத்துவதற்காக நின்ற நேரம் மிக அதிகமாக இருக்கும்.

உலகத்திற்காக, அதன் வாழ்வாதாரத்திற்காக அவர் கவலைப் பட்டதைவிட மறுமைக்காக, சொர்க்கத்திற்காக அவர் கவலைப் பட்டது அதிகமாக இருக்கும்.

உலக துன்பங்களை பயப்படுவதைவிட அவர் நரக துன்பங்களை பயப்படுவது அதிகமாக இருக்கும்.

ஆகவேதான், இமாம் கூறினார்கள்: மக்களுடைய நிலைமை வேறு! முஃமினுடைய நிலைமை வேறு!

- **அல்லாஹ்வே! எங்களை முஃமின்களின் கூட்டத்தில் சேர்ப்பாயாக!**

- **எங்களுக்கு வலுவான, ஆழமான, உறுதியான ஈமானைத் தருவாயாக!**

ஆமீன்!

• • •

## திவாலானவன்

١٤٧٦ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ إِبْرَاهِيمَ حَدَّثَنَا عَبْدُ الْمَلِكِ بْنُ الصَّبَّاحِ عَنْ عِمْرَانَ بْنِ حُدَيْرٍ عَنِ الْحَسَنِ قَالَ لَيَأْتِيَنَّ أُنَاسٌ يَوْمَ الْقِيَامَةِ بِحَسَنَاتٍ أَمْثَالِ الْجِبَالِ فَمَا يَزَالُ [ص٢١٣] يُؤْخَذُ مِنْهُمْ لِمَنْ ظَلَمُوا حَتَّى يَبْقَى مُفْلِسًا يُفْتَلَ إِلَى النَّارِ.

**1476.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: பல மனிதர்கள் மறுமைநாளில் வரும்போது மலைகள் போன்று நன்மைகளுடன் வருவார்கள். ஆனால், அவர்களிடம் இருந்து அந்த நன்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கப்பட்டு அநீதியிழைக்கப்பட்டவர் களுக்கு கொடுக்கப்படும்.

இறுதியாக அவன் நன்மையே இல்லாதவனாக ஆகிவிடுவான். அவனை நரகின் பக்கம் திருப்பப்படும்.

**கருத்து:**

ஆம், அல்லாஹ் மகா நீதவான். அவனிடமிருந்து அநியாயக்காரர் எவரும் தப்பமுடியாது. அநியாயம் செய்தவர் யாராக இருந்தாலும் அவர் மறுமையில் அல்லாஹ்வின் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவார். அநீதி இழைக்கப்பட்டவர் யாராக இருந்தாலும் அவர் யாருடைய பரிந்துரையும் இல்லாமல், யாருடைய உதவியும் இல்லாமல், பேரருளாளன் அல்லாஹ்வின் முன்னால் நின்று தனது நீதியைப் பெறுவார்.

அவருக்கு முழு நீதி கொடுக்கப்படும். அவருடைய மனம் திருப்திபடுகின்ற அளவு அவருக்கு அங்கே நியாயம் வழங்கப்படும்.

அநியாயக்காரன் இந்த உலகத்தில் உள்ள நீதி மன்றங்களை ஏமாற்றிவிடலாம்.

இங்கு தனது செல்வாக்கை வைத்து நீதியை விலைக்கு வாங்கிவிடலாம்; அப்பாவிகளை ஏமாற்றிவிடலாம்.

சாட்சிகளை மிரட்டியோ, ஆசை காட்டியோ தன் பக்கம் சாட்சியை திருப்பி விடலாம்.

சாட்சியங்களை மக்கள் பார்வைகளிலிருந்து அழித்துவிடலாம். அதிகாரத்தை வைத்து, அல்லது வாதத் திறமையை வைத்து வாதங்களை வென்று விடலாம்.

மக்களின் கண்களை மறைத்து விடலாம். நீதிபதிகளை ஏமாற்றிவிடலாம். வாதத் திறமையால் எதிராளியை மிகைத்து விடலாம்.

ஆனால், அல்லாஹ்விற்கு முன், அந்த மகா நீதியாளனுக்கு முன், அனைத்தையும் அறிந்த அந்த பேரறிஞனுக்கு முன், மகா ஆற்றல் மிக்க அந்த வல்லோனுக்கு முன் உண்மையும் நீதியும் மட்டும் தான் நிலைக்கும்.

அவனிடம் பணம், பதவி, தங்கம், வெள்ளி, அந்தஸ்து, ஆட்சி அதிகாரம், குலம் கோத்திரம் ஏதும் செல்லுபடியாகாது.

அவனுடைய பார்வையை விட்டு ஏதும் தப்ப முடியாது.

அவன் எதையும் மறக்க மாட்டான். அவனிடம் எதையும் நாம் மறைக்கவும் முடியாது.

அவனுடைய பதிவு புத்தகத்தில் எல்லாம் தெளிவாகப் பதியப்பட்டிருக்கும்.

வானவர்கள் சாட்சிகளாக இருப்பார்கள்.

மனிதனின் கை கால்கள் சாட்சிகளாக இருக்கும்.

இடம், காலம் எல்லாம் சாட்சியாக இருக்கும்.

பதிவு புத்தகம் திறக்கப்பட்டு அவன் அதைப் படிப்பான்.

எங்கும் தப்ப முடியாது. அங்கு ஆட்சி அதிகாரம், சொத்து சுகம், மதிப்பு மரியாதை, தங்கம் வெள்ளி, குலம் கோத்திரம் எல்லாம் மறைந்து விடும்.

அங்கு தீர்ப்பு மிக நீதமாக இருக்கும்.

கொம்புள்ள ஆடு கொம்பில்லாத ஆட்டை முட்டி இருந்தால் இதற்கு கொம்பு படைக்கப்பட்டு முட்டிய ஆட்டை அதே போன்று முட்டச் சொல்லப்படும்.

ஒரு மிஸ்வாக் -பல் துலக்கும் குச்சியை பிறரிடமிருந்து ஒருவர் அபகரித்திருந்தாலும் அதற்கும் அங்கு விசாரணை உண்டு.

அங்கு தீர்ப்பு எப்படி இருக்கும்!

அநியாயக்காரனின் நல்லமல்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும். நன்மைகள் முடிந்துவிட்டால், அல்லது நன்மைகள் இல்லை என்றால் பாதிக்கப்பட்டவர்களின் பாவங்களை அநியாயக்காரனின் தலைமேல் சுமத்தப்பட்டு அவனை நரகத்தின் படு பாதாளத்தில் வீசி எறியப்படும்.

இதுதான் மறுமையின் நிலை. யாரும் தப்பமுடியாது.

அவனுடைய அனுமதி இன்றி யாரும் யாருக்கும் சிபாரிசு செய்ய முடியாது.

அங்கு ஈமான், தக்வா, ஒழுக்கம், இறை வழிபாடு, நீதம், உண்மை இவற்றின் மூலம்தான் கரை சேர முடியும்.

நபியின் தந்தையாக இருந்தாலும் சரி! நபியின் மகனாக இருந்தாலும் சரி! நபியின் மனைவியாக இருந்தாலும் சரி! நபியின் சாச்சாக்களாக இருந்தாலும் சரி! நபியின் பணியாளராக இருந்தாலும் சரி! அங்கு தப்ப முடியாது.

மேற்கூறப்பட்ட விதிகள்தான் அங்கு பேசும்.

இணைவைத்தவன் சொர்க்கம் புக மாட்டான்!

அநியாயக்காரன் தண்டனையிலிருந்து தப்ப மாட்டான்!

பாதிக்கப்பட்டவன் தனது நீதியை இழக்கமாட்டான்!

அநியாயக்காரன் முஃமினாக இருந்தாலும் அவன் கண்டிப்பாக தண்டிக்கப்படுவான்! பாதிக்கப்பட்டவன் காஃபிராக இருந்தாலும் அவன் நீதி வழங்கப்படுவான்!

அநியாயக்காரன் மீது அல்லாஹ்வின் சாபம் இறங்குகிறது.

அல்லாஹ்வின் தூதர் எப்போதும் அநியாயத்தை பயப்படுவார்கள்; அது குறித்து எப்போதும் தங்களது தோழர்களை எச்சரிப்பார்கள்.

பாதிக்கப்பட்டவனின் துஆவிற்கும் அல்லாஹ்விற்கும் இடையில் எந்த திரையும் இல்லை.

பாதிக்கப்பட்டவனுக்காக அல்லாஹ் மறுமையில் வாதாடுவான்.

- **அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு! அல்லாஹ்வே! அநியாயத்தை விட்டும் அநியாயக்காரர்களை விட்டும் உன்னிடம் பாதுகாவல் கேட்கிறோம்!**
- **பிறர் உரிமைகளைப் பேணுபவர்களாக எங்களை ஆக்கு! அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு! அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு!**

ஆமீன்!

## உன் இறையச்சத்தை பகட்டாக்காதே!

١٤٧٧ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ عَنْ يُونُسَ عَنِ الْحَسَنِ قَالَ سَمِعْتُهُ يَقُولُ إِنْ كَانَ الرَّجُلُ لَيَجْلِسُ الْمَجْلِسَ فَتَجِيئُهُ عَبْرَتُهُ فَيَرُدُّهَا فَإِذَا خَشِيَ أَنْ تَسْبِقَهُ قَامَ.

**1477.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஒருவர் ஒரு சபையில் அமர்ந்திருக்கும் போது அவருக்கு அழுகை வரும். அப்போது அதை அவர் தடுப்பார். தன்னை அது மீறிவிடும் என்று பயந்தால் அவர் எழுந்து (சென்று) விடுவார்.

**கருத்து:**

இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் தங்களது காலத்தில் வாழ்ந்த நல்லவர்களைப் பற்றி இங்கு கூறுகிறார்கள் போலும்.

ஒருவர் ஒரு சபையில் சில நல்ல விஷயங்களைக் கேட்கும்போது அவருக்கு அழுகை வந்தால் அது அவருடைய இறையச்சத்தின் வெளிப்பாடாகும்.

இருந்தும் தான் அழுவதை மக்கள் பார்த்தால், தன்னை நல்லவர், இறையச்சமுடையவர் என்று அவர்கள் எண்ணி தன்னை புகழ்வார்கள் என்று பயந்தால் அவர் தனது அழுகையை அடக்க முயற்சிக்க வேண்டும்.

அப்படியும் அழுகையை நிறுத்த முடியவில்லை என்றால் அந்த இடத்தை விட்டே அவர் சென்றுவிடுவது நல்லது. அவ்வாறு செல்வது முகஸ்துதியில் தான் சிக்கிவிடுவதிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு எளிதான வழியாகும்.

தமது செயல்களை அல்லாஹ்விற்காக மட்டும் செய்கின்ற நல்லவர்கள் மக்களுக்கு அவற்றைக் காண்பிக்க மாட்டார்கள். மக்களிடம் அதை சொல்லவும் மாட்டார்கள்.

தாம் செய்வதை பிறர் பார்த்திடாமல் இருக்க முயற்சிப்பார்கள். தமது நல்ல செயலை மறைத்து மறைத்துச் செய்வார்கள்.

பிறர் தமது நல்ல செயல்களையும் நல்ல தன்மைகளையும் பார்த்துவிடக் கூடாது என்று பயப்படுவார்கள்.

முகஸ்துதியிலிருந்து விரண்டு ஓடுவார்கள். தாம் புகழப்படுவதையும் தம்மைப் பற்றி மக்கள் உயர்வாகப் பேசுவதையும் அறவே விரும்ப மாட்டார்கள்.

தங்களது நல்ல செயல்களை தாங்களும் பகிரங்கப்படுத்த மாட்டார்கள்.

தங்களைப் பற்றி பிறர் பிரஸ்தாபித்து பேசுவதையும் விரும்ப மாட்டார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தங்களது நல்ல தன்மைகளை அல்லது செயல்களை மக்கள் பார்ப்பதால் தமக்கு முகஸ்துதி ஏற்படும் என்று பயந்தால் அந்த இடத்தை விட்டே ஓடிவிடுவார்கள்.

இதுதான் நமது முன்னோர் -மனத்தூய்மைக்கு கொடுத்த முக்கியத்துவம். இதுதான் நமது சான்றோரின் பண்பாடு.

நல்லவர்கள் (முக்லிஸ்கள் - மனத்தூய்மை உள்ளவர்கள்) நன்மைகளை அதிகம் செய்வார்கள். அவற்றை மறைத்து செய்வார்கள்.

பாவிகள் (முராஈ - முகஸ்துதியை விரும்புபவர்கள்) நன்மைகளை குறைவாகச் செய்வார்கள். அவற்றை வெளிப்படுத்திச் செய்வார்கள்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

- **அல்லாஹ் நமக்கு மனத்தூய்மையை வழங்குவானாக!**
- **முகஸ்துதியிலிருந்து நம்மைப் பாதுகாப்பானாக!**

ஆமீன்!

• • •

## செல்வத்தைப் பயந்த சான்றோர்

١٤٧٨ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا يَزِيدُ بْنُ هَارُونَ أَنْبَأَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ وَاللهِ لَقَدْ أَدْرَكْتُ أَقْوَامًا لَوْ شَاءَ أَحَدُهُمْ أَنْ يَأْخُذَ هَذَا الْمَالَ مِنْ حِلِّهِ أَخَذَهُ فَيُقَالُ لَهُمْ أَلَا تَأْتُونَ نَصِيبَكُمْ مِنْ هَذَا الْمَالِ فَتَأْخُذُونَهُ حَلَالًا؟ فَيَقُولُونَ لَا إِنَّا لَنَخْشَى أَنْ يَكُونَ أَخْذُهُ فَسَادًا لِقُلُوبِنَا .

**1478.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் பல மக்களை பார்த்திருக்கின்றேன். அவர்களில் ஒருவர் -ஹலால்- ஆகுமான முறையில் செல்வத்தை சம்பாதிப்பதற்கு விரும்பினால் அவரால் அதை சம்பாதித்திருக்க முடியும்.

“நீங்கள் இந்த செல்வத்தில் உங்கள் பங்கை ஏன் தேடவில்லை? இதை ஹலாலான முறையில் நீங்கள் அடைந்திருக்கலாமே!” என்று அவர்களிடம் கூறப்படும். அதற்கு அவர்கள் பதில் கூறுவார்கள்: “அதை நாங்கள் அடைவது எங்கள் உள்ளங்கள் சீர்கெடுவதற்கு காரணமாகிவிடுமோ என்று நாங்கள் பயப்படுகின்றோம்.”

**கருத்து:**

***லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்.***

இங்கே நமது சான்றோரின் பண்பை நாம் பார்க்கின்றோம். அவர்களின் உலகப் பற்றின்மை சொல்லில் மட்டும் இல்லாமல் செயலிலும் இருந்ததைப் பார்க்கின்றோம்.

உஹுது மலையை தங்கமாக மாற்றித் தரட்டுமா என்று அல்லாஹ்

தனது நபியிடம் கேட்ட போது, வேண்டாம்! ஒரு நாள் நான் பசித்திருப்பேன். உன்னிடம் மன்றாடுவேன். அடுத்த நாள் நீ எனக்கு தருகின்ற உணவை உண்டு உனக்கு நன்றி செலுத்துவேன். இத்தகைய வாழ்க்கையே எனக்குப் போதும் என்று நமது நபி ﷺ கூறினார்கள்.

ஆம், நபியவர்களின் வாழ்க்கை அப்படித்தான் இருந்தது.

இரண்டு நாள் தொடர்ந்து அவர்கள் உணவு சாப்பிட்டதில்லை. பல மாதங்கள் அவர்களின் வீடுகளில் அடுப்பு எரிக்கப்பட்டதில்லை. பல நாள்களை தண்ணீர், பேரித்தம்பழம் மட்டும் சாப்பிட்டே கழித்திருக்கிறார்கள்.

கனீமத்துகள் குவிந்தாலும் நபியவர்களுக்கு அவற்றில் ஐந்தில் ஒரு பங்கை அல்லாஹ் தந்திருந்தும் அதையும் தர்மம் செய்துவிட்டு தானும் தனது மனைவிமார்களும் பட்டினியாக இருப்பார்கள்.

இத்தகைய நபியின் சொல்லையும் வாழ்க்கையையும் பின்பற்றுவதில் ஆர்வம் கொண்ட அந்த சான்றோர்களும் அப்படித்தானே வாழ்ந்திருப்பார்கள்.

நம்மைப் போன்றா அவர்கள் இருந்தார்கள்!

படிப்போம். ஆனால், பின்பற்ற மாட்டோம்! கேட்போம். ஆனால், வழிநடக்க மாட்டோம்! பார்ப்போம். ஆனால், படிப்பினை பெற மாட்டோம்!

அவர்கள் ஹலாலான செல்வங்களைக் கண்டே அஞ்சினார்கள். உள்ளம் கெட்டுவிடுமோ என்று பயந்தார்கள்.

ஆனால், இன்று நாமோ ஹராமைக் கண்டும் பயப்படுவதில்லை.

இன்று நம்மில் ஹலாலை மட்டும் தேடுபவர், ஹலாலான முறையில் மட்டும் சம்பாதிப்பவர் “பெரிய மகானாக, பெரும் பேணுதல்காரராக, பெரும் உத்தமராகக்” கருதப்படுகின்றார்.

அப்படிப்பட்டவர்கள் பெரும் அரிதாகவே காணக் கிடைக்கிறார்கள்.

ஒருவரைப் பற்றி, "அவர் மிக்க பேணுதலானவர், ஹலாலை மட்டுமே செய்வார்" என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு ஹலாலை மட்டும் செய்து, ஹராமை விட்டு விலகுபவர்கள் குறைந்து விட்டார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் எல்லோருமே ஹலாலானதை மட்டுமே செய்வதற்கும் கண்டிப்பாக ஹராமை விட்டு விலகுவதற்கும் கடமைப்பட்டவர்கள். ஹராமானதை ஒரு முஸ்லிம் நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது.

ஹராமான கோடிகளை விட ஹலாலான சில்லரைகளே மேல்!

ஹராமான கோபுரத்தை விட ஹலாலான குடிசையே மேல்!

ஹராமான மாட மாளிகைகளை விட ஹலாலான சாதாரண மண் வீடே மேல்!

ஹராமான மெர்சடிஸ் பென்ஸ் காரை விட ஹலாலான மிதிவண்டியே மேல்!

ஹராமான கோட் சூட்டை விட ஹலாலான பழைய கந்தல் ஆடையே மேல்!

ஹராமான முறையில் பொருளீட்டி கோபுரங்களில் வாழ்வதை விட ஹலாலான செல்வத்தை வைத்து குடிசையில்தான் வாழ முடியும் என்றால் அந்த குடிசையே மேல்!

ஹராமான முறையில் சம்பாதித்து ஆடம்பர வாகனங்கள் வாங்குவதை விட ஹலாலான செல்வத்தை வைத்து ஒரு பழைய மிதிவண்டிதான் வாங்க முடியும் என்றால் அதுவே நமக்கு மேல்!

ஹராமில் சம்பாதித்து பகட்டான, ஆடம்பரமான ஆடைகளை அணிவதை விட ஹலாலான வருவாயை வைத்து பழைய ஆடைகளைத்தான் வாங்க முடியும் என்றால் அந்த பழைய ஆடைகளே நமக்கு மேல்!

இதுதான் முஸ்லிமின் கொள்கை! இதுதான் முஸ்லிமின் நிலைப்பாடு!

ஆனால், இன்று முஸ்லிம்களில் -தனி நபர்கள், சமுதாயம், அரசாங்கம் என- பலரும் ஹராமான பொருளாதாரத்தில் வீழ்ந்ததுதான் நமது வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று.

நமது முன்னோர்கள் ஹலாலான செல்வத்தைக் கண்டு பயந்தார்கள். நாமோ ஹராமைக் கண்டும் பயப்படுவதில்லை.

நமது முன்னோர், "ஹலாலான செல்வமாக இருந்தாலும் அவசிய தேவைக்கு மேல் வேண்டாம்" என்றார்கள்.

நாமோ, "ஹராமாக இருந்தாலும் பரவாயில்லை. அளவுக்கு அதிகமாக வேண்டும்" என்கிறோம்.

நமது முன்னோர் ஹலாலான வசதிகளையும் உதறித் தள்ளினார்கள். நாமோ வசதியாக வாழவேண்டும் என்பதற்காகவே ஹராமான வழிகளில் பொருள் ஈட்டுகிறோம்.

என்னே வேறுபாடு! அவர்கள் எங்கே! நாம் எங்கே!

இன்றையவர்களின் செயல்களோ காரூனுடைய செயல்கள்.

ஆனால், அவர்கள் ஆசைப்படுவதோ உத்தமர்களின் பதவிகளை.

**கவனிக்க:** செல்வம் தேவை என்றால் அதை ஹலாலான வழியில் மட்டுமே ஈட்டவேண்டும்.

சேகரித்த செல்வத்தைக் கொண்டு மதி மயங்கி விடக்கூடாது.

ஹலாலான செல்வம் ஆடம்பர வாழ்க்கைக்கு அல்ல. மாறாக, அது அல்லாஹ்வின் பாதைகளில் செலவழிக்கக் கொடுக்கப் பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

ஹலாலான செல்வமாக இருந்தாலும் அதை வரம்பு மீறி செலவழிக்கக் கூடாது. ஹலாலான வருமானமாக இருந்தாலும் அதை வீண்விரயம் செய்யக்கூடாது.

ஹலாலான முறையில் சம்பாதித்து ஹலாலான வழிகளில் கூட

வீண்விரயமாக செலவு செய்யக்கூடாது என்றால் ஹராமில் செலவழிப்பதைப் பற்றி என்ன சொல்வது?

ஹலாலான முறையில் சம்பாதித்து அதை ஹராமில் செலவு செய்பவனுக்கு உதாரணம் ஹலாலான முறையில் ஒரு பெண்ணை திருமணம் முடித்துவிட்டு அப்பெண்ணை விபச்சாரத்தில் பயன்படுத்துபவனைப் போல.

ஹலாலான முறையில் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தில்தான் ஜகாத்தும் ஸதக்காவும் உண்டு. அவற்றை கண்டிப்பாக கொடுத்தாக வேண்டும்.

ஹலாலான செல்வமாக இருந்தாலும் அதில் ஜகாத்து கொடுக்க வில்லை என்றால் அது நரகத்தின் நெருப்பாகும்.

ஹராமில் சம்பாதிப்பவன் ஜகாத்து கொடுத்தாலும் அது ஏற்கப்படாது. தர்மம் கொடுத்தாலும் அது அங்கீகரிக்கப்படாது. ஹஜ், உம்ரா செய்தாலும், மஸ்ஜிதுகள், மத்ரஸாக்கள் பல கட்டினாலும் ஒப்புக் கொள்ளப்படாது.

இன்று நம்மில் பல செல்வந்தர்கள் தாங்கள் செய்கின்ற வியாபாரம் ஹராம் என்று தெரியாமல் செய்து வருகின்றனர்.

படித்து, பட்டம் பெற்று, பன்னாட்டுக் கம்பெனிகளில் கட்டுக் கட்டாக கரன்சிகளை சம்பளமாக வாங்குகின்ற பலர் தங்களின் வேலை ஹராமான ஒன்று என்று தெரியாமல் இருக்கின்றனர்.தெரிந்து கொள்ளவும் விரும்ப மறுக்கின்றனர்

ஹலாலான செல்வமும் ஒரு நாகப் பாம்பைப் போல் என்று கல்விமான் கஸ்ஸாலி கூறுகிறார்கள்.

நாகப் பாம்பை வளர்ப்பவர் அதிலிருந்து விஷத்தை எடுத்து மருந்தாக்கும் வழியை தெரிந்திருக்க வேண்டும். அப்படித்தான் செல்வத்தை சேகரித்தவர் அதை முறையாகச் செலவழிக்க தெரிந்திருக்க வேண்டும்.

அவ்வாறே, தன் கையில் உள்ள பாம்பு எவ்வளவு விஷமானது என்பதை தெரிந்திருக்கவில்லை என்றால் அந்த பாம்பாலேயே கொத்தப்பட்டு இறப்பார் என்பது நிச்சயம்.

அப்படித்தான் ஹலாலான முறையில் உழைத்து, ஹலாலான முறையில் வணிகம் செய்து சம்பாதித்த செல்வமாக இருந்தாலும் அதை அல்லாஹ்வின் சட்டப்படிதான் செலவு செய்ய வேண்டும். அதில் கடமையாக்கப்பட்ட ஜகாத்தையும் உபரியான தர்மத்தையும் உறவுகளின் உரிமைகளையும் கொடுத்தாக வேண்டும்.

இல்லையெனில் அவ்வளவுதான் நிலமை! மோசமான அழிவுதான்!!

- **அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக! அல்லாஹ் நமக்கு நல்வழி காட்டுவானாக!**

ஆமீன்!

# கண்ணியம் வேண்டுமா?

١٤٧٩ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا هَارُونُ بْنُ عَبْدِ اللهِ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا أَبُو كَعْبٍ الْأَزْدِيُّ قَالَ قَالَ رَجُلٌ لِلْحَسَنِ رَحِمَهُ اللهُ إِنِّي أُرِيدُ سَفَرًا فَزَوِّدْنِي قَالَ ابْنَ أَخِي أَعِزَّ أَمْرَ اللهِ حَيْثُمَا كُنْتَ يُعِزَّكَ اللهُ عَزَّ وَجَلَّ.

**1479.** ஒருவர் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் நான் பயணம் செல்ல நாடுகிறேன். எனக்கு அறிவுரை சொல்லுங்கள் என்றார். அதற்கு இமாம் கூறினார்கள்: “என் சகோதரரின் மகனே! அல்லாஹ்வின் கட்டளையை நீ எங்கிருந்தாலும் மதித்து நடந்துகொள்! கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ் உன்னை கண்ணியப்படுத்துவான். (-உனக்கு மக்கள் மத்தியில் மதிப்பளிப்பான்.)”

**கருத்து:**

ஆம், நமது முன்னோர் நல்லவர்களை சந்திப்பதையும் அவர்களிடம் அறிவுரை கேட்பதையும் தங்கள் வழக்கமாக கொண்டிருந்தார்கள்.

அப்படித்தான் ஒருவர் இமாம் அவர்களை சந்தித்து அறிவுரை கேட்டதற்கு இமாம் அவர்கள் கூறிய பதில்தான் இது.

அல்லாஹ்வின் மார்க்க சட்டங்களை மதித்து, அவற்றைப் பேணிப் பாதுகாத்து வாழ்வதில்தான் நமது இம்மை மறுமையின் வெற்றியும் கண்ணியமும் பாதுகாப்பும் உயர்வும் இருக்கின்றன என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் உணர வேண்டும்.

உள்ளூரில் இருக்கும்போது மார்க்கத்தை பேணுகின்ற பலர் வெளி ஊர்களுக்குச் சென்றுவிட்டால் மார்க்கத்தை மறந்து விடுகின்றனர்; கடமைகளில் அலட்சியம் செய்கின்றனர்; தொழுகைகளை தவற விடுகின்றனர்; அவற்றில் அசட்டை செய்கின்றனர்; பல ஹராமான காரியங்களையும் செய்யத் துணிந்து விடுகின்றனர்; பல தவறான இடங்களுக்குச் செல்கின்றனர்; பல கெட்ட நட்புகளுக்கும் கெட்ட பழக்கங்களுக்கும் ஆளாகி விடுகின்றனர்.

அவர்கள் தங்களை கண்காணிப்பதற்கு யாரும் இல்லை என்று எண்ணி விடுகின்றனர் போலும். அல்லாஹ் கண்காணிக்கின்றான் என்பதை மறந்து விடுகின்றனர்.

ஆகவேதான் பயணம் செய்ய நாடியவருக்கு இமாம் அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை எல்லா இடங்களிலும் பேணி வாழும்படி, அதை மதித்து நடக்கும்படி, அதை மீறாமல் இருக்கும்படி அறிவுரை கூறி வழியனுப்புகிறார்கள்.

இன்று நாமும் நமது பிள்ளைகளை வெளியூருக்கு ஏதேனும் தேவைக்காக பயணம் அனுப்பும்போது உலக விஷயங்களை எல்லாம் அவர்களுக்கு சரியாகச் சொல்கிறோம்.

ஆனால், அல்லாஹ்வின் விஷயத்தில் எப்படி நடக்கவேண்டும், மார்க்கத்தை எப்படிப் பேணவேண்டும், ஹராமான காரியங்களை விட்டு எப்படி விலகி இருக்க வேண்டும், கெட்ட இடங்கள், கெட்ட நட்புகள், கெட்ட பழக்கங்கள், கெட்ட செயல்கள் ஆகியவற்றை விட்டு எப்படி தன்னை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் சொல்லத் தவறி விடுகிறோம்.

இதனால் வெளியூர்களுக்கு கல்விக்காக, வேலைக்காக செல்கின்ற பல பிள்ளைகள் மார்க்கத்தை மீறுகிறவர்களாகவும் தீயவர்களாகவும் மாறுவதையும் நாம் காண்கிறோம்.

பலர் குடும்பத்தார்களை விட்டுவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று

வேலை செய்கின்றனர். அங்கு தனியாகவோ அல்லது ஒரு சிலருடன் சேர்ந்தோ ஓர் அறையில் தங்குகின்றனர்.

இப்படி இருக்கின்ற பலருடைய நேரங்கள் சினிமாக்கள், வீணான விஷயங்கள், சூதாட்டங்கள், தவறான பழக்கங்கள் ஆகியவற்றில் கழிவதைப் பார்க்கிறோம்.

தொழுகையைப் பேணுவதில்லை; திரு குர்ஆனை ஓதுவதில்லை; அறிவுரைகளைக் கேட்கச் செல்வதில்லை.

கெட்ட நட்புகளால் குடிப்பழக்கம், போதை பழக்கம், பெண்கள் பழக்கம் சூதாட்டம் என்று வாழ்க்கையே திசை மாறிப் போய் விடுகிறது.

அங்கு அவர்கள் நல்ல இடங்களுக்குச் சென்று, நல்லவர்களோடு பழகி, நல்ல முறையில் இருந்திருந்தால் அவர்களது தீனும் கெட்டு இருக்காது, துன்யாவும் சீர்குலைந்து இருக்காது.

கெட்ட பழக்கத்தால் வாழ்க்கையை இழந்தவர்கள் பல பேர்!

தீய நட்பால் சிறைக்குச் சென்றவர்கள் பல பேர்!

தவறான செயல்களால் செல்வத்தை இழந்தவர்கள் பல பேர்!

அசிங்கமான செயல்களால் உடல் சுகத்தை இழந்தவர்கள் பல பேர்!

இப்படி எண்ணிலடங்கா மக்களின் வாழ்க்கை சோகத்தில் மூழ்கியது ஏன்?

இறையச்சம் மறைந்ததுதான் காரணம். அல்லாஹ்வின் பயம் போனதுதான் காரணம்.

ஆகவேதான், அறிவுரை கேட்டவருக்கு இமாம் இறையச்சம் பேணும்படி உபதேசித்தார்கள்.

இறையச்சம் ஒன்று இல்லையென்றால் போதும் கேடுகெட்ட குணங்கள் குடிகொள்ளும், தீயபழக்கங்கள் தொற்றிக் கொள்ளும்.

ஆகவே, அல்குர்ஆனின் வசனங்களும் அல்ஹதீஸின் கூற்றுகளும் இறையச்சத்தை மிகவும் வலியுறுத்துகின்றன.

இறைத்தூதரைப் பார்த்து, நபியே! அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்! என்று அல்குர்ஆன் அறிவுரைக் கூறுகிறது.

***நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்!*** என்று (2:278, 3:102, 5:35, 9:119, 33: 70, 39:10, 57:28, 59:18 பல வசனங்களில்) முஃமின்களுக்கு உபதேசிக்கிறது.

***மக்களே! உங்கள் கடவுளை (அல்லாஹ்வை) பயந்து கொள்ளுங்கள்*** என்று (31:33, 22:1,4:1) போன்ற வசனங்களில் உலக மாந்தர்களை முன்னோக்கி அல்குர்ஆன் போதனை செய்கிறது.

இறையச்சத்தில் சிறிதளவு ஒருவரிடம் இருந்தாலும் அவர் மார்க்கத்தைப் பேணிவிடுவார்; மறுமையை மறக்கமாட்டார்; பாவங்கள் பக்கம் நெருங்க மாட்டார்; அப்படியே ஏதும் அவரிடம் நிகழ்ந்துவிட்டால் அழுது அழுது பாவமன்னிப்புத் தேடுவார். வணக்க வழிபாடுகளை கவனத்துடன் பேணுவார்.

- **அல்லாஹ்வே! எங்களை இறையச்சமுள்ளவர்களாக ஆக்கு! இறையச்சமுள்ளவர்களுடன் எங்களுக்கு நடப்பைத் தா!**
- **எங்கள் சமுதாயத்தை, எங்கள் வாலிப ஆண்களையும் பெண்களையும் பாதுகாப்பாயாக!**

ஆமீன்!

• • •

# மமதையும் வேண்டாம்!
# மனக்கவலையும் வேண்டாம்!

١٤٨٠ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ قَالَ أَدْرَكْتُ أَقْوَامًا كَانُوا لَا يَفْرَحُونَ بِشَيْءٍ مِنَ الدُّنْيَا أَتَوْهُ وَلَا يَأْسُونَ عَلَى شَيْءٍ مِنْهَا فَاتَهُمْ .

**1480.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: நான் பல மக்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் உலக செல்வத்தில் தங்களுக்கு கிடைத்ததின் மூலம் மகிழ்ச்சியடையவும் மாட்டார்கள். அதில் தாங்கள் தவறவிட்டவற்றுக்காக வருத்தப்படவும் மாட்டார்கள்.

**கருத்து:**

அல்லாஹு அக்பர், அந்த சான்றோர்கள் எப்படி வாழ்ந்திருக்கிறார்கள்! நாம் இன்று மகிழ்வதெல்லாம் இந்த உலக செல்வத்தைக் கொண்டுதான்.

அது இருந்தால் ஒரு தைரியம், மனதில் ஒரு தெம்பு, முகத்தில் ஒரு கலை, உடம்பில் ஒரு சுறுசுறுப்பு, பேச்சில் ஒரு வித்தியாசமான தொனி, பார்வையில் ஓர் எளக்காரம், இப்படி இன்னும் பல மாற்றங்களை நம் மனதில் இந்த செல்வம் ஏற்படுத்துகிறது.

இப்படிப்பட்டவர்கள் தங்கள் வசதியில் ஏதும் குறைந்துவிட்டால் அவர்களது சிரிப்பெல்லாம் காணாமல் போய்விடும். முகம் தொங்கிவிடும். உடல், உள்ளம், பேச்சு, பார்வை, பாவனை எல்லாம் சோர்ந்துவிடும். ஏதோ வாசலில் மலக்குல் மௌத்து வந்து நிற்பதைப் போன்று காட்சி அளிப்பார்கள்.

உலகம் தேவைதான். ஆனால், அதில் மனதை பறிகொடுத்து விடக் கூடாது.

செல்வம் அவசியம்தான். ஆனால், அதைப் பெரிதாக மதித்து விடக் கூடாது.

வசதி இருந்தால் நல்லதுதான். ஆனால், அதற்காக அலையக் கூடாது.

பொருள் முக்கியம்தான். ஆனால், அதற்காக அலட்டிக் கொள்ளக் கூடாது.

இந்த உலகத்தில்...

அல்லாஹ்வின் விதியை நாம் மீறிவிட முடியாது.

நமது அறிவு விதியை வென்றுவிடாது.

நமது திட்டங்கள் விதியை மாற்றிவிடாது.

நமது அனுபவம் விதியை ஏமாற்றிவிடாது.

நமது ஆற்றல் விதியை தோற்கடிக்காது.

நமது படைபலம் விதியிலிருந்து நம்மை காப்பாற்றிவிடாது.

நமது சூழ்ச்சிகள் விதியை திசை திருப்பிவிடாது.

நமது சொந்த பந்தம் விதிக்கு முன் குறுக்கே நிற்காது.

நமது வசதி வாய்ப்பு விதியை விட்டு நம்மை அரவணைக்காது.

செல்வம், ஏழ்மை, இன்பம், துன்பம், சுகம், துக்கம், வசதி, வறுமை, வெற்றி, தோல்வி, ஏற்றம், இறக்கம், முன்னேற்றம், பின்னேற்றம், ஆதரவு, எதிர்ப்பு, பலம், பலவீனம், இப்படி எல்லாம் அல்லாஹ்வின் விதிப்படிதான் நடக்கிறது. இதில் நமக்கு என்ன இருக்கிறது.

விதியை நம்பாதவர்கள் அல்லாஹ்வை நம்பவில்லை.

விதியை மறுப்பவன் ஒரு மடையன், அகம்பாவக்காரன். அவன் தனது எண்ணத்தில் ஆணவக்காரன்.

விதியை ஏற்றுக்கொள்வதற்கு அர்த்தம் சோம்பேறியாக இருப்பதல்ல, வேலை வெட்டி செய்யாமல் தூங்கிக் கிடப்பதல்ல. உழைக்காமல் ஊதாரியாக சுற்றித் திரிவதல்ல.

விதையை விதைக்காமல், பூமியை உழாமல், தண்ணீர் பாய்ச்சாமல், வியர்வை சிந்தாமல் விளைச்சலை எதிர்பார்ப்பதல்ல. கடையை திறக்காமல் கல்லா நிரம்பும் என்று நம்புவதல்ல. கல்வி கற்காமல் அறிவு வரும் என்று கனவு காண்பதல்ல.

மாறாக, அல்லாஹ்வின் விதியை அவன் விதித்த விதிப்படிதான் அடைய வேண்டும், தேடவேண்டும்.

பசிக்கு உணவு உண்ண வேண்டும்.

தாகத்திற்குத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

நோய்க்கு மருத்துவம் பார்க்க வேண்டும்.

வருமானத்திற்கு உழைக்க வேண்டும்.

அறிவுக்கு கல்வியைத் தேட வேண்டும்.

இப்படி காரணங்களோடுதான் விதியை அல்லாஹ் இணைத்துள்ளான்.

ஆனால், அல்லாஹ் நாடாமல் எந்தக் காரணமும் தனது வேலையைச் செய்யாது.

ஆகவே, செல்வம், வெற்றி, முன்னேற்றம், புகழ், இவை வரும்போது அல்லாஹ்வின் விதியை மறந்து நான், நான், என்ற ஆணவம், மமதை வந்துவிடக்கூடாது. அல்லாஹ்வின் நாட்டப்படிதான் இவை எனக்கு கிட்டின என்று பணிவு வரவேண்டும்.

வறுமை, தோல்வி, பின்னேற்றம், இகழ்வு இவை ஏற்பட்டால் மனம் தளர்ந்துவிடக் கூடாது; உள்ளம் சோர்ந்துவிடக்கூடாது; இதயம் பலவீனப்படக்கூடாது; நம்பிக்கை இழந்துவிடக்கூடாது; நிராசையடையக்கூடாது.

இதுதான் விதியின் மீது வைக்கவேண்டிய நம்பிக்கை.

இப்படி நம்பிக்கை ஆழமாக பதியும்போதுதான் இந்த சான்றோரின் பண்பு நமக்கும் ஏற்படும்.

இன்னொரு பக்கம் மறுமை நம்பிக்கை.

ஆம், இந்த உலகம்தான் எல்லாம் என்று நம்பியவன்தான் இந்த உலகத்தைக் கொண்டு இறுமாப்புக் கொள்வான். உலகம் இல்லை என்றால் உள்ளம் இறுகிச் செத்து விடுவான்.

ஆனால், மறுமைதான் உண்மை என்று உணர்ந்தவன் இந்த உலகத்தை பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டான். கிடைத்தால் அல்ஹம்துலில்லாஹ் கூறி அல்லாஹ்வைப் புகழ்வான். கிடைக்க வில்லை என்றால் அல்லாஹ்விற்காக பொறுமையாக இருப்பான்.

இந்த பண்புதான் நபியவர்களின் நற்குணமாக இருந்தது; தோழர்களின் அடையாளமாக இருந்தது; தூயவர்களின் தனித் தன்மையாக இருந்தது; சான்றோரின் அழகிய வழக்கமாக இருந்தது.

அவர்கள்.....

கோடியினால் குணம் மாறாதவர்கள்.

செல்வத்தால் செருக்குராதவர்கள்.

கோபுரத்தில் வாழ்ந்தாலும் அடக்கமானவர்கள்.

குடிசையில் வாழ்ந்தாலும் தன்மானம் உள்ளவர்கள்.

வறுமையிலும் வாக்கு மீறாதவர்கள்.

பசி பட்டினியிலும் யாசிக்காதவர்கள்.

ஆயிரம் சோதனைகள் இருந்தாலும் எப்போதும் அல்ஹம்து லில்லாஹ் சொல்பவர்கள்.

போர்முனையிலும் பதட்டப்படாதவர்கள்.

எதிரிகளைக் கண்டும் மனம் கலங்காதவர்கள்.

ஹஸ்பியல்லாஹ் என்பதே அவர்களின் நிறைவு, வீரம், துணிவு, தைரியம், நம்பிக்கை, மகிழ்ச்சி, உத்வேகம், வலிமை, ஆற்றல் எல்லாம்.

ஆகவே, இவர்கள் செல்வத்திலும் வறுமையிலும் அல்லாஹ்வையே சார்ந்திருப்பார்கள்.

இன்பத்திலும் துன்பத்திலும் அல்லாஹ்வையே நம்பி இருப்பார்கள்.

- **அல்லாஹ்வே! நீ தடுத்த பாவங்களிலிருந்து எங்களைத் தடுக்கின்ற உனது பயத்தைத் தா!**
- **துன்யாவின் சோதனைகளை எளிதாக்கும் நம்பிக்கையை (யகீனைத்) தா! சொர்க்கத்தில் சேர்க்கின்ற அமலைத் தா!**
- **அல்லாஹ்வே! செல்வ மோகத்தை விட்டும் எங்களைக் காத்துக் கொள்!**
- **வறுமையில் மனம் தளர்வதைவிட்டும் எங்களைப் பாதுகாத்துக் கொள்!**
- **உன்னையே நம்பி, உன்னையே சார்ந்திருக்கின்ற, உன் பக்கமே திரும்பி இருக்கின்ற, உன்னிடமே உதவிதேடுகின்ற நற்பாக்கியத்தை எங்களுக்குத் தா!**

ஆமீன்.

## பெற்றோரைப் பேணுவோம்...

١٤٨١ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ حَدَّثَنَا سَعِيدُ بْنُ عَامِرٍ عَنْ حَزْمٍ عَنْ عَمَّارٍ قَالَ قُلْتُ لِلْحَسَنِ يَا أَبَا سَعِيدٍ مَا الْبِرُّ؟ قَالَ الْبَذْلُ وَاللُّطْفُ قُلْتُ فَمَا الْعُقُوقُ؟ قَالَ أَنْ تُحْرِمَهُمَا وَتَهْجُرَهُمَا قَالَ أَمَا عَلِمْتَ أَنَّ نَظَرَكَ فِي وَجْهِ وَالِدَيْكَ أَوْ وَالِدَتِكَ عِبَادَةٌ .

**1481.** அம்மார் அறிவிக்கிறார்: இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம், “அபூஸயீது அவர்களே! (பெற்றோருக்கு) நன்மை செய்தல் என்றால் என்ன என்று நான் கேட்டேன்?”

அவர்கள் கூறினார்கள்: “அவர்களுக்காக செல்வத்தை செலவழிப்பது, அவர்களுடன் மென்மையாக நடந்து கொள்வது.”

“நான் (பெற்றோருக்கு) மாறுசெய்வது என்றால் என்ன?” என்று கேட்டேன்.

அவர்கள் கூறினார்கள்: “அவர்களுக்கு செலவு செய்யாமல் இருப்பது, அவர்களை சந்திக்காமல் இருப்பது.”

மேலும் கூறினார்கள், உனது பெற்றோரின் முகத்தைப் பார்ப்பது, உமது தாயின் முகத்தைப் பார்ப்பது ஒரு வணக்கமாகும்.”

**கருத்து:**

இமாம் அவர்களின் கூற்று இன்றைய மக்களுக்கு மிகப் பெரிய ஒரு வழிகாட்டுதல் ஆகும்.

இன்றைய இயந்திர வாழ்க்கையில் மக்கள் பொருளாதாரத்தை மட்டுமே குறிக்கோளாக வைத்து வாழ்கின்றனர்.

அவர்களிடம்.....

உறவுகளுக்கு முக்கியத்துவம் இருப்பதில்லை;

உறவுகளைப் பேணுவதற்கு நேரம் கொடுப்பதில்லை;

உறவுகளை சந்திக்கச் செல்வதில்லை;

உறவுகளின் சுக துக்கங்களில் பங்கெடுப்பதில்லை;

அவர்கள்.... உறவுகளிடம் பேசுவதில்லை;

உறவுகளுக்காக அவர்களது நெஞ்சம் விரிவதில்லை.

உறவுகளை பார்க்கும்போது அவர்களது முகம் மலர்வதில்லை.

உறவுகளுக்கு செலவழிக்க அவர்களது கைகள் நீளுவதில்லை.

ஆனால், ஒரு முஸ்லிம் அப்படி இருக்கக் கூடாது.

முஸ்லிம் எல்லா வகையான உறவுகளையும் அவற்றின் தகுதிக்கு ஏற்ப பேணுபவராக இருக்க வேண்டும்.

உறவுகளை பேணும்படி அறிவுரை கூறுகின்ற வசனங்களும் நபிமொழிகளும் ஏராளம் உள்ளன.

அவ்வாறே, உறவுகளை அலட்சியம் செய்வது குறித்து எச்சரிக்கின்ற வசனங்களும் நபிமொழிகளும் அநேகம் உள்ளன.

உறவுகளில் உன்னதமான, அற்புதமான, அழகான, ஆழமான, உறவு என்பது பெற்றோர், பிள்ளைகள் உறவு.

ஆம், பெற்றோரை பேணுவது, அவர்களை கவனிப்பது, அவர்களுக்கு பணிவிடை செய்வது, அவர்களது தேவைகளை நிறைவேற்றுவது, அவர்களது சிரமங்களை நீக்குவது, அவர்களுக்கு

அவசியமானவற்றை வாங்கித் தருவது, அவர்களுக்கு மருத்துவம் பார்ப்பது, அவர்களை ஹஜ், உம்ராவிற்கு அழைத்துச் செல்வது, அவர்களின் கடன்களை அடைப்பது, அவர்களோடு நேரம் கழிப்பது, அவர்களிடம் அன்பாக, மரியாதையாக, கனிவாக, கண்ணியமாக, பணிவாக, பண்பாக, பாசமாக, பரிவாக பேசுவது இவையெல்லாம் முஸ்லிமின் இஸ்லாமிய பண்பாடாகும்.

பெற்றோருக்கு பணிவிடை செய்வதால்......

பெற்றோரைப் பேணினால்......

பெற்றோரை மகிழ்வித்தால்......

அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான்;

அல்லாஹ் சொர்கத்தைத் தருகிறான்;

நரகத்தை விட்டுப் பாதுகாக்கிறான்;

இம்மையின் துன்பங்களை அகற்றுகிறான்;

பொருள் செல்வத்தை வளமாக்குகிறான்;

வாழ்வாதாரத்தில் அபிவிருத்தி செய்கிறான்;

வாழ்நாளை அதிகரிக்கிறான்;

மக்களிடம் நற்பெயரை ஏற்படுத்துகிறான்;

நல்லோரில் சேர்த்து விடுகிறான்.

அவர்களைப் புறக்கணித்தால்......

பெற்றோரைத் துன்புறுத்தினால்......

அவர்களை அவமரியாதை செய்தால்......

அல்லாஹ் கோபப்படுகிறான்;

நரகத்தில் தள்ளிவிடுவான்;

முகத்திலிருந்து நல்லோரின் ஒளியைப் பறித்து விடுகிறான்;

செல்வம் மற்றும் வாழ்க்கையிலிருந்து பரக்கத்தை எடுத்து விடுகிறான்;

சிரமத்தில் கை விட்டுவிடுவான்.

இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது இணை வைக்கின்ற தந்தையிடம் கூட பரிவும் பாசமும் காட்டினார்கள். அல்லாஹ்விடமிருந்து தடைவருகின்றவரை அவருக்காகப் பாவமன்னிப்பு தேடினார்கள்.

ஆம், இவ்வுலகத்தில் இறையருட்கொடைகளில் பெரும் அருட் கொடை பெற்றோர் ஆவர்.

அவர்களை இழந்தவர்களிடம் அவர்களின் அருமையை கேட்டுப் பாருங்கள்.

“அருட்கொடையின் அருமை அது இல்லாத போதுதான் தெரியும்” என்பர்.

ஆம், அந்த பெற்றோர் நமக்காக வாழ்ந்தவர்கள்; நம்மை வளர்த்தவர்கள்; நம்மைப் பேணியவர்கள்; நமக்காக சொல்லில் அடங்கா சிரமத்தை அனுபவித்தவர்கள்; நம்மை உருவாக்கியவர்கள்; நமக்காக விழித்திருந்தவர்கள்; நமது சிரிப்பில் சிரித்தவர்கள்; நமது அழுகையினால் நிம்மதி இழந்தவர்கள். அவர்கள் நமது வாழ்க்கையின் நிழல்.

நாம் நமது வாழ்நாளை எல்லாம் அவர்களுக்கு பணிவிடை செய்வதில் செலவழித்தாலும் அவர்களுக்கு நன்றிக் கடன் செய்துவிட முடியாது.

அவர்களை தோளில் சுமந்து ஹஜ், உம்ரா செய்ய வைத்தாலும் அவர்கள் செய்த புண்ணியத்திற்குக் கைமாறு செய்துவிட முடியாது.

செல்வத்தை எல்லாம் அவர்களுக்காக செலவழித்தாலும் அவர்கள் பட்ட ஒரு சிரமத்திற்கு கூட ஈடு செய்துவிட முடியாது.

ஏகத்துவத்திற்கு அடுத்த நன்மை பெற்றோருக்கு நன்மை செய்வது.

இணைவைத்தலுக்கு அடுத்த பாவம் பெற்றோரைத் துன்புறுத்துவது.

இன்று பல வாலிபர்களின் வாழ்க்கை பெற்றோரை விட்டு தூரமாகவே கழிவது வேதனையான விஷயமாகும்.

பெற்றோரைப் பார்க்காமல் பல நாள்கள், பல மாதங்கள், பல ஆண்டுகள்!

என்னே கைசேதம்! இதைவிட ஓர் இழப்பு இருக்குமோ இப்பூலோகத்தில்!

ஒருவருக்கு தன்னைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கிய பெற்றோரை அவர்களது முதுமையில் பராமரிக்க முடியாமல் போனால், அவர்களை அன்றாடம் பார்க்க முடியாமல் போனால், அவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாமல் போனால் அவருக்கு அதைவிட வேறு என்ன துர்பாக்கியம் இருக்க முடியும் இந்த வாழ்க்கையில்?

செல்வம் முக்கியமா? பெற்றோர் முக்கியமா?

வசதி முக்கியமா? தாய் தந்தை முக்கியமா?

வெளி நாடு வேண்டுமா? அத்தா அம்மா வேண்டுமா?

அயல் நாட்டின் வசதி வேண்டுமா? அன்னையின் அன்பான அரவணைப்பு வேண்டுமா?

பங்களா வாழ்க்கை வேண்டுமா? தந்தையின் நிழல் வேண்டுமா?

பலருக்கு பெற்றோருடன் வாழ்க்கை சலித்துவிட்டது போலும்!

பலருக்கு பெற்றோருடன் வாழ்க்கை புளித்துவிட்டது போலும்!

பலருக்கு பெற்றோருடன் வாழ்க்கை கசந்துவிட்டது போலும்!

பெற்றோரை சுமையாக, செலவாக, சிரமமாக கருதுகின்றவர்கள் அதிகமாகி விட்டனர்!

எங்கோ நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்? எங்கோ நாம் பாதை மாறியுள்ளோம்?

- **இறைவா! இரட்சகா! எங்களை துர்பாக்கியவான்களாக ஆக்கிவிடாதே!**
- **பெற்றோரை பேணுகின்ற நன்மக்களாக எங்களை ஆக்கு!**
- **பெற்றோருக்கு பணிவிடை செய்யும் நற்பாக்கியத்தைத் தா!**
- **அவர்களுக்கு எங்கள் மீது திருப்தியைத் தா!**
- **அவர்களுக்கு மாறுசெய்வதிலிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்!**
- **அவர்கள் விஷயத்தில் நாங்கள் செய்த குறைகளை, குற்றங்களை மன்னித்தருள்! மன்னித்தருள்! மன்னித்தருள்!**
- **அவர்களை எங்களுக்கு சொர்க்கமாக ஆக்கு!**

ஆமீன்!

• • •

## இரவு வணங்குவதற்காக...!

١٤٨٢ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ حَدَّثَنَا يُوسُفُ بْنُ يَعْقُوبَ الدَّوْسِيُّ حَدَّثَنَا هِشَامٌ عَنِ الْحَسَنِ فِي هَذِهِ الْآيَةِ {كَانُوا قَلِيلًا مِنَ اللَّيْلِ مَا يَهْجَعُونَ} [الذاريات ١٧] كَانُوا قَلِيلًا مِنَ اللَّيْلِ مَا يَرْقُدُونَ {وَبِالْأَسْحَارِ هُمْ يَسْتَغْفِرُونَ} [الذاريات ١٨] قَالَ مَدُّوا الصَّلَاةَ إِلَى السَّحَرِ ثُمَّ دَعُوا وَتَضَرَّعُوا .

1482. "***அவர்கள் இரவில் குறைவாக தூங்குவார்கள். அதிகாலையில் அவர்கள் பாவமன்னிப்புத் தேடுவார்கள்.***" (51: 17,18) என்ற வசனத்திற்கு இமாம் ஹசன் பஸரி ﵀ விளக்கம் கூறினார்கள்.

அதாவது, அவர்கள் இரவில் தூங்குவது குறைவாக இருக்கும். இரவின் முற்பகுதியில் கொஞ்சம் தூங்கிவிட்டு, பின்னர் தொழுகைக்காக எழுந்து விடுவார்கள். அப்படியே, சஹர் நேரம் வரை தொழுதுகொண்டே இருப்பார்கள். பின்னர், சஹர் நேரம் வந்தவுடன் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதிலும் அழுது மன்றாடுவதிலும் ஈடுபடுவார்கள்.

**கருத்து:**

அல்லாஹ்வின் அடியார்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை விளக்குகின்ற இந்த வசனத்தை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் இவ்வுலக வாழ்வை நாம் அவனை வணங்குவதற்காக மட்டும்தான் நமக்கு வழங்கியுள்ளான்.

வாழ்க்கைக்குத் தேவையான பல விஷயங்களை அல்லாஹ் நமக்கு அனுமதித்துள்ளான். இது அவனது அருளும் கருணையுமாகும்.

வணக்க வழிபாட்டில் பலவற்றை நம்மீது கடமையாக்கினான். அப்படி கடமையாக்கியிருக்கவில்லை என்றால் நம்மில் பலர் அல்லாஹ்வை வணங்கியே இருக்க மாட்டார்கள். இன்று முஸ்லிம்களில் பலர் கட்டாயக் கடமையான வணக்கங்களைச் செய்யாமல் இருப்பது அதற்கு சாட்சியாகும்.

பல வணக்கங்களை நம்மீது கடமையாக்காமல் நமது விருப்பத்தில் விட்டு விட்டான். அவற்றை நஃபிலான - உபரியான வழிபாடுகள் என்று சொல்லப்படும். அவற்றை செய்வதற்கு எண்ணில் அடங்கா நன்மைகளை நமக்கு வாக்களித்தான்.

நம்மில் பலர், அந்த உபரியான வழிபாடுகளை மிகவும் அலட்சியம் செய்கின்றனர்.

பலர், அவற்றை ஒரு வீணான செயலைப் போல் கருதுகின்றனர்.

பலர், அவற்றை மார்க்கத்தில் தேவையில்லாத ஒரு தீவிரமான ஈடுபாடாக எண்ணுகின்றனர்.

பலர், அவற்றை செய்வதை நேரங்களை வீணடிப்பதாக கருதுகின்றனர்.

பலர், அவை இக்காலத்தில் தேவை இல்லை என்று கருதுகின்றனர்.

பலர், இவை எல்லாம் நாம் செய்ய வேண்டியவை அல்ல என்று நினைக்கின்றனர்.

இந்த காலத்தில் நாம் ஃபர்ழான -கடமைகளை மட்டும் செய்தால் போதும், இவை எல்லாம் நம்மால் செய்ய இயலாதவை என்று சாக்குப்போக்கு கூறுகின்றனர்.

ஆனால், இப்படிப்பட்டவர்கள் உலக இன்பங்களுக்காக, உலக சுகங்களுக்காக, உலக தேவைகளுக்காக, உலக வசதிகளுக்காக, உலக பொருளுக்காக விவரித்து கூறமுடியாத அளவு சிரமங்களையும் செலவுகளையும் மேற்கொள்வதைப் பார்க்கிறோம்.

உலகத் தேவை என்றால், உலக சுகம் என்றால் எவ்வளவு சிரமமானாலும் எத்தகைய செலவானாலும் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்வார்கள்.

மறுமை என்று வந்துவிட்டால்,

இவ்வளவு தேவையா?! இந்த அளவு சிரமப்படவேண்டுமா?! மார்க்கம் சுலபமான ஒன்றுதானே! இப்படி எல்லாம் கூறினால் மக்கள் மார்க்கத்தை விட்டு ஓடிவிடுவார்கள்! ஃபர்ழுகளை சுட்டிக் காண்பித்து நமக்கு இதுவே அதிகம். ஆகவே, இவையெல்லாம் நமக்குத் தேவையா? என்று பலவாறாகக் கூறுவார்கள்.

ஆம், மறுமையை அறியாத, சொர்க்கலோக இன்பங்களை அறியாத மக்கள்தான் இப்படிப் பேசுவார்கள்.

சொர்க்க வாழ்க்கையைப் பற்றி அறிந்த ஒருவன் அதை அடைவதற்காக தன்னை வருத்திக் கொள்வான்.

அல்லாஹ்வின் அன்பின் மதிப்பை அறிந்தவன் அல்லாஹ் விற்காக தன் உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருப்பான்.

இப்படிப்பட்ட நல்லவர்களைப் பற்றித்தான் அல்லாஹ், “அவர்கள் இரவில் குறைவாகத் தூங்கி, அதிகமாக வணக்க வழிபாடு செய்து, அதன் தொடர்ச்சியில் இரவின் இறுதிப் பகுதியில் அல்லாஹ்விடம் மன்னிப்பை வேண்டியும் சொர்க்கத்தை வேண்டியும் நரகத்தை விட்டுப் பாதுகாவல் கேட்டும் அழுது மன்றாடிக் கொண்டு இருப்பார்கள்” என்று கூறுகின்றான்.

மேற்கண்ட வசனத்தின் பொருள், அந்த நல்லவர்கள் இரவின் இறுதியில் மட்டும் எழுந்து அல்லாஹ்வை வணங்குவார்கள் என்பதல்ல. மாறாக, இரவில் அதிக நேரம் வணங்குவார்கள். பின்னர், இரவின் இறுதியில் துஆக்களில் ஈடுபடுவார்கள் என்பதாகும்.

- மக்களில் இருவகையினர் உள்ளனர். ஒருவர் மறுமைக்காகப் பிறந்தவர்.

ஆம், மறுமைக்காகப் பிறந்தவர்கள் உலகத்தில் மறுமைக்காக வாழ்வார்கள். மறுமைக்காக வாழ்பவர்கள் உலகத் தேவைக்கு குறைவாக சிரமப்படுவார்கள்; மறுமைக்கு அதிகம் சிரமம் எடுப்பார்கள். மறுமைக்கான சேமிப்பைப் பற்றித்தான் கவலைப்படுவார்கள்; அதற்காக கால் வீங்கும் அளவு நின்று வணங்குவார்கள்; உடல் இளைக்கும் அளவிற்கு நோன்பிருப்பார்கள்; தனக்கு வறுமை வந்தாலும் பயப்படாமல் அல்லாஹ்வின் பாதையில் தான தர்மம் செய்வார்கள். அல்லாஹ்வின் பாதையில் மார்க்கத்திற்காகப் படுகின்ற சிரமங்களிலும் அல்லாஹ்வை வணங்குவதற்காக அவர்கள் மேற்கொள்கின்ற பிரயாசைகளிலும் அவர்களுக்கு இன்பமும் சுகமும்தான் தெரியும். இந்த சிரமத்தை மறுமையில் இதற்காக கிடைக்கும் இன்பத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். இந்த சிரமத்தை நரகத்தின் வேதனையோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். ஆகவே, உலகத்தின் எத்தகைய துன்பமும் சிரமும் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல.

- மற்றொருவர் உலகத்திற்காகப் பிறந்தவர்.

உலகத்திற்காகப் பிறந்தவர்கள் இந்த உலகமே கதி என்று எல்லா இன்பங்களையும் சுகங்களையும் இந்த உலகத்திலேயே தேடுவார்கள். இந்த உலகத்திற்காகவும் அதன் இலாபத்திற்காகவும் அதன் வாழ்க்கை சுகத்திற்காகவும் அல்லல் படுவார்கள்; அயராது உழைப்பார்கள்; கழுதையைப் போன்று உழைப்பார்கள்; அற்ப உணவுக்காக அலையும் நாயாக சதா அலைந்துகொண்டே இருப்பார்கள்; சேர்த்த செல்வங்களை எண்ணி எண்ணிப் பார்ப்பார்கள்; வாங்கிய சொத்துகளை சொல்லி சொல்லி மகிழ்வார்கள்; சுற்றிய இடங்களையும் சொந்தமாக்கிய பொருள்களையும் புகழ்ந்து பெருமைப்படுவார்கள். வாலிபத்தை பகட்டில் வீணடித்தார்கள். வயோதிகத்தை பெருமை பேசுவதில் வீணடிப்பார்கள்.

இறுதில், மரணப்படுக்கையில் வீழ்ந்து, மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு, அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டு, அங்கு

துணையின்றி தூங்கி, இறந்த சடலமாக உறவினரிடம் கொடுக்கப்படுவார்கள்.

அல்லாஹ் பாதுகாப்பானாக!

- **அல்லாஹ்வே, உன் வழிபாட்டில் எங்களுக்கு இன்பத்தைத் தா! உன்னை வணங்குவதற்காக எங்களை தேர்ந்தெடுத்துக்கொள்! உனது இபாதத்துகளை எங்களுக்கு எளிதாக்கு! உலகில் ஏமாறுவதை விட்டு எங்களைக் காப்பாற்று!**

  **நாங்கள் ஃபர்ழுகளையும் நஃபில்களையும் பேணுதலாக நிறைவேற்ற எங்களுக்கு நற்பாக்கியத்தைத் தா!**

- **அல்லாஹ்வே! ஏற்றுக்கொள்! அல்லாஹ்வே! ஏற்றுக்கொள்! நீ நன்கறிந்தவன்; நன்கு செவியிறுபவன்!**

ஆமீன்!

● ● ●

## எது ஈமான்...?

١٤٨٣ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا اللَّيْثُ بْنُ خَالِدٍ أَبُو بَكْرٍ الْبَلْخِيُّ حَدَّثَنَا جَعْفَرُ بْنُ سُلَيْمَانَ عَنْ زَكَرِيَّا عَنِ الْحَسَنِ قَالَ « كَانَ يُقَالُ إِنَّ الْإِيمَانَ لَيْسَ بِالتَّحَلِّي وَلَا بِالتَّمَنِّي وَإِنَّمَا الْإِيمَانُ مَا وَقَرَ فِي الْقَلْبِ وَصَدَّقَهُ الْعَمَلُ ».

**1483.** இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: "நிச்சயமாக ஈமான் -இறைநம்பிக்கை- (ஆடைகளால்) அலங்கரித்துக் கொள்வதால் அல்ல, (மனதால்) ஆசைப்படுவதால் அல்ல. நிச்சயமாக ஈமான் -இறைநம்பிக்கை- என்பது அது உள்ளத்தில் உறுதியாகப் படிந்திருக்க வேண்டும். அதை நல்அமல் உண்மைப்படுத்த வேண்டும்." இப்படித்தான் (சான்றோர் காலத்தில்) பேசப்பட்டு வந்தது."

**கருத்து:**

இமாம் அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! அவர்களின் கப்ரை ஒளியால் நிரப்புவானாக! அவர்களை நல்லோருடன் சேர்ப்பானாக! ஆமீன்!

அணிகின்ற ஆடை இறைநம்பிக்கையின் அடையாளமல்ல. ஆடையை வைத்து ஒருவரை முஃமின் என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட ஆடையில் இறைநம்பிக்கையைப் புகுத்திவிட முடியாது.

தன்னைப் பற்றி ஒருவர் முஃமினாக நினைப்பதால் அவர் முஃமினாக ஆகிவிட முடியாது!

மாறாக ஈமான் என்பது உள்ளத்தில் உறுதியாக வேரூன்றி இருக்க வேண்டும். அந்த நம்பிக்கைக்கு ஏற்ப அமல்கள் இருக்க வேண்டும்.

ஈமான் என்பது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல. அல்லது வெறும் நல்ல செயல்கள் மட்டுமல்ல.

மாறாக, நம்பிக்கையுடன் கூடிய அமல்தான் ஈமான். நல்ல அமல்களுடன் கூடிய நம்பிக்கைதான் ஈமான்.

நம்பிக்கையும் செயலும் சேர்ந்ததுதான் ஈமான்.

வெளிரங்கமான நல்ல செயல்களுடன் உள்ளத்திலும் நம்பிக்கை இருக்க வேண்டும்.

உள்ளத்தில் நம்பிக்கை இருப்பதுடன் வெளிரங்கமான நல்ல செயல்களும் இருக்க வேண்டும்.

ஒருவர், என் உள்ளத்தில் நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, என் அமலைப் பார்க்காதீர்கள் என்று கூறமுடியாது.

நபிக்கையுடன் அமல் சேரவில்லை என்றால், அவர் தன்னிடம் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்வது பொய். அவர் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர் அந்த நம்பிக்கையின் படி செயல் பட்டிருப்பார்.

தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் ஆகிய இவை கட்டாயக் கடமைகள். இவை தவிர்க்க முடியாதவை. இவற்றை விடுவது பெரும்பாவத்தைச் செய்வது போன்றல்ல.

மாறாக, இவற்றை விடுவது குற்றத்தால் பெரும் பாவத்தை விடக் கடுமையானது.

மேற்கண்ட நான்கில் தொழுகை விஷயத்தில் முஸ்லிம்கள் எந்தக் காரணத்தையும் சொல்ல முடியாது. பைத்தியம், சுய நினைவற்றவர் ஆகிய இருவரைத் தவிர மற்ற அனைவரும் தொழுதே ஆகவேண்டும். எந்தக் காரணமும் சொல்ல முடியாது. எனவேதான், தொழுகையை விட்டவரை நபித்தோழர்கள் எல்லோரும் ‘காஃபிர்’ என்றே முடிவாகக் கூறினார்கள்.

அவ்வாறே, செல்வந்தர்கள் ஜகாத்தை (முஸ்லிம்களின் கலீஃபாவிடம் அவர் கேட்கும்போது) கொடுக்க மறுத்தாலும் அதுவும் குஃப்ர் ஆகும்.

மற்ற இரு வணக்கங்களைப் பற்றி சற்று விளக்கம் உள்ளது.

ஆகவே, "ஒருவர் தனது உள்ளத்தில் நம்பிக்கை இருக்கிறது. எனவே என் செயலைப் பற்றி நீங்கள் விசாரிக்க வேண்டாம்" என்று கூறிவிட முடியாது. அவரது செயலை வைத்துத்தான் நாம் அவரை "முஃமின், முஸ்லிம்" என்று ஏற்றுக் கொள்வோம்.

மற்றொரு பக்கம், ஒருவர் அதிகமாக நல்ல அமல்கள் செய்கிறார். ஆனால், ஈமானை - நம்பிக்கையை- சரியாக கற்றுக் கொள்ளவில்லை என்றால், அவருடைய நம்பிக்கையில் கோளாறு இருந்தால் அவர் செய்கின்ற அமல்கள் எல்லாம் நாசமாகிவிடும். கொள்கையில் உள்ள சீர்கேடு அமல்களை வீணாக்கிவிடும்.

ஈமான் என்பது, "அல்லாஹ் இருக்கின்றான்" என்று நம்புவது மட்டுமல்ல.

அல்லாஹ்வையும் அவனது அழகிய பண்புகளையும் அழகிய செயல்களையும் அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறிய முறைப்படி நம்பிக்கை கொள்ளவேண்டும்.

அத்துடன், நமது அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் எவை எல்லாம் அல்லாஹ்வின் வேதத்திலும் நபி ﷺ அவர்களின் ஆதாரப் பூர்வமான சுன்னாவிலும் சொல்லப்பட்டுள்ளதோ அவை அனைத்தையும் சந்தேகமின்றி உறுதியாக நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நம்பிக்கை கொள்வதிலும் ஏற்றுக்கொள்வதிலும் ஆதாரத்தைத்தான் அடிப்படையாக்க வேண்டும். அறிவை அல்ல. ஆதாரத்தை புரிவதற்கும் ஆதாரத்தை தேடுவதற்கும்தான் அறிவே தவிர, ஆதாரத்தில் முரண்பாடு காணவோ, ஆதாரத்தை மறுக்கவோ அல்ல அறிவு.

வாழ்வதற்குத்தான் நெருப்பே தவிர, வாழ்க்கையை எரித்துக் கொள்வதற்கல்ல!

மனிதனின் அறிவுதான் எல்லாவற்றுக்கும் அளவுகோல் அல்ல. அறிவைக் கொடுத்த அல்லாஹ்வின் ஆதாரம்தான் அளவுகோல். அல்லாஹ் அனுப்பிய தூதரின் சரியான கூற்றுகள்தான் அளவுகோல்.

இந்த இரண்டையும் புரிவதற்கும் செயல்படுத்துவதற்கும்தான் அறிவு படைக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வையும் அவனது கூற்றையும் அல்லாஹ்வின் தூதரையும் அந்த தூதரின் கூற்றையும் நம்பிக்கை கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும்தான் அறிவு கொடுக்கப்பட்டுள்ளது. மறுப்பதற்கு அல்ல.

இப்லீஸ் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டாலும் தனது அறிவினால் தர்க்கம் செய்து அல்லாஹ்வின் கூற்றை மறுத்த காரணத்தினால் அவன் ‘காஃபிர்’ ஆக ஆகிவிட்டான்.

இவ்வாறே, எவன் ஒருவன் அல்லாஹ்வின் கூற்றையோ அவன் அனுப்பிய நபி ﷺ அவர்களின் கூற்றையோ தனது அறிவால் நிறுத்துப் பார்த்து தனது அறிவுக்கு பொருந்த வில்லை என்று காரணம் கூறி அந்த இருவரின் கூற்றுக்கோ அல்லது அவ்விருவரில் ஒருவரின் கூற்றுக்கோ மாறாக செயல்பட்டால், அல்லது மாறாக கருத்துக் கூறினால் அவன் “காஃபிர்” ஆவான் என்பதில் ஒரு முஸ்லிமுக்கு சந்தேகம் இருக்க முடியாது.

முஸ்லிம் என்பவன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுபவன்; அறிவுக்கு அல்ல. அவன் தனது அறிவை அல்லாஹ்விற்கும் தூதருக்கும் கட்டுப்படுவதற்குப் பயன்படுத்துவான்.

காஃபிர் தனது அறிவை அல்லாஹ்வையும் அவனது தூதரையும் மறுப்பதற்கு அல்லது அவர்களின் கூற்றை மறுப்பதற்குப் பயன்படுத்துவான்.

எப்படி, அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டேன் என்று ஒருவன் கூறிவிட்டு அவனது கூற்றை ஏற்க மறுத்தால் அவன் 'காஃபிர்' ஆக ஆவானோ, அப்படியே, ஒருவன் தூதரை நம்பிக்கை கொண்டேன் என்று கூறிவிட்டு அந்த தூதரின் கூற்றை ஏற்க மறுத்தாலும் அவனும் காஃபிர்தான். அவன் அதற்கு எந்தக் காரணத்தைக் கூறினாலும் சரியே!

இன்று நம்மில் பலர், "தங்களது நம்பிக்கை உள்ளத்தில் பாதுகாப்பாக இருக்கிறது" என்று கூறி, அமல்களை அலட்சியம் செய்கின்றனர்; அமல்களை விட்டுவிடுகின்றனர். அல்லது, அமல்களை அறவே செய்வதில்லை.

இது பெரும் வழிகேடாகும். இது அவரை குஃப்ரில் தள்ளிவிடும்.

இன்னும் பலர், "தாங்கள் அமல்களை அதிகமாகச் செய்கிறோம்; அமல்களில் கவனம் செலுத்துகிறோம்" என்று கூறி நம்பிக்கையை அவர்கள் கண்டு கொள்வதில்லை; சரியான நம்பிக்கையை சரியான ஆதாரங்களில் இருந்து அவர்கள் கற்றுக் கொள்வதில்லை. ஆகவே, இவர்களது அமல் எந்த நேரத்தில் எந்தத் தவறான நம்பிக்கையால் பாழாகிவிடுகிறது என்பதை இவர்கள் அறியமாட்டார்கள்.

ஒருவனின் நம்பிக்கை பாழாகிவிட்டால் அவன் உலக உருண்டை அளவு அமல்களோடு வந்தாலும் அந்த எல்லா அமல்களும் நாசம்தான்.

அல்லாஹ் பாதுகாப்பானாக!

இதைத்தான் இமாம் அவர்கள் அழகாக கூறுகிறார்கள்: "ஈமான் என்பது ஒரு குறிப்பிட்ட வேடத்தில் இல்லை. அல்லது தன்னைத் தானே முஃமின் என்று கற்பனை செய்துகொள்வதால் ஈமான் இல்லை. மாறாக உள்ளத்தின் ஆழமான நம்பிக்கையிலும் நல்ல அமல்களிலும்தான் ஈமான் இருக்கிறது.

- **அல்லாஹ்வே! எந்த ஈமானை உனது நபியின் தோழர்களுக்கு நீ வழங்கினாயோ அந்த ஈமானை எங்களுக்கும் தா!**
- **நயவஞ்சகம் கலக்காத, சந்தேகம் இல்லாத, குழப்பங்கள் ஊடுருவாத, தடுமாற்றம் சேர்ந்திருக்காத, மறுத்தலும் புறக்கணிப்பும் நிராகரிப்பும் பின்தொடராத ஈமானை எங்களுக்குத் தா!**

ஆமீன்!

## எது நன்மை தரக்கூடியது?

١٤٨٤ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا اللَّيْثُ بْنُ خَالِدٍ حَدَّثَنَا أَبُو رَوْحٍ عَوْنُ بْنُ مُوسَى قَالَ سَمِعْتُ مُعَاوِيَةَ بْنَ قُرَّةَ قَالَ تَذَاكَرُوا عِنْدَ الْحَسَنِ أَيُّ الْأَعْمَالِ أَفْضَلُ؟ قَالَ فَكَأَنَّهُمْ عَلَى قِيَامِ اللَّيْلِ قَالَ فَقُلْتُ أَنَا تَرْكُ الْمَحَارِمِ قَالَ فَانْتَبَهَ الْحَسَنُ لَهَا فَقَالَ تَمَّ الْأَمْرُ تَمَّ الْأَمْرُ.

**1484.** முஆவியா இப்னு குர்ரா கூறுகிறார்கள்: இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம், “அமல்களில் மிக சிறந்தது எது என்று (அவர்களின்) தோழர்கள் பேசிக்கொண்டனர். அவர்கள் எல்லோரும் இரவுத் தொழுகையை ஒருமித்து கூறியது போன்று இருந்தது. அப்போது நான், “ஹராமானவற்றை விடுவது” என்று கூறினேன். இதை இமாம் அவர்கள் கவனித்துவிட்டார்கள். உடனே, “விஷயம் முடிந்துவிட்டது; விஷயம் முடிந்துவிட்டது” என்று கூறினார்கள்.

**கருத்து:**

சுப்ஹானல்லாஹ்! அந்த சான்றோர்களைப் பாருங்கள். அவர்கள் எப்போதும் நல்ல அமல்களைப் பற்றிய கவலையிலும் அவற்றை செய்ய வேண்டுமென்ற ஆர்வத்திலும் இருந்தார்கள்.

அவர்கள் ஒரு சபையில் ஒன்றுகூடினால் அவர்களது பேச்சும் கலந்துரையாடலும் அமல்களைப் பற்றியும் மறுமையைப் பற்றியும்தான் இருந்தது.

அவர்களது தனிமையோ வணக்க வழிபாட்டிலும், குர்ஆன் ஓதுவதிலும், அழுது துஆக் கேட்பதிலும், அல்லாஹ்விடம் பேசுவதிலும்தான் கழிந்தது.

அவர்கள் ஒன்று சேரும்போது ஒருவர் மற்றவர்களை அமல்களின் பக்கம் தூண்டுபவராக இருந்தார். தங்களுக்கு மத்தியில் மறுமையைப் பற்றியும் மார்க்கத்தைப் பற்றியும் பேசுபவர்களாகவே அவர்கள் இருந்தனர்.

உலக விஷயங்களைப் பற்றி பேசி நேரங்களை வீணடிப்பவர்களாக அவர்கள் இருக்கவில்லை. அல்லது தங்களிடம் உள்ள உலக வஸ்துக்களை எடுத்துக் கூறி பெருமை பேசுபவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை.

மேலும், அமல்கள் அனைத்தையும் -கடமையானவை உபரியானவை என அனைத்தையும்- ஆர்வத்தோடு செய்து வந்ததுடன் அமல்களில் எது மிக சிறந்தது என்ற தேட்டம் உள்ளவர்களாகவும் இருந்தனர். ஆகவேதான் அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டனர்.

இப்படி அவர்கள் பேசுகையில் பல அமல்களைப் பற்றி பேசி இறுதியாக இரவுத் தொழுகையைப் பற்றி அனைவரும் ஒருமித்து கருத்துக் கூறினர்.

ஆனால், இமாம் அவர்களின் மாணவர்களில் ஒருவரான முஆவியா இப்னு குர்ரா அவர்கள், “பாவங்களை விடுவது” தான் சிறந்த அமலாகக் கருதுவதாகக் கூறினார்கள்.

தனது இந்த மாணவரின் கருத்தை செவியேற்ற பின்னர், இதற்கு மேல் ஏதும் பேச வேண்டியதில்லை. இந்த உரையாடலை இத்துடன் நிறுத்திக் கொள்வோம் என்று இமாம் அவர்கள் கூறினார்கள். ஆம், அவர்களின் இறையச்சம் அவர்களை தடுத்துவிட்டது.

இன்று வணக்க வழிபாடுகளை ஏராளம் செய்கின்ற எத்தனையோ பலர் இந்த விஷயத்தில் அலட்சியம் செய்துவிடுகின்றனர்.

ஹராமான சம்பாத்தியம், ஹராமான தொழில், ஹராமான வருவாய், தனக்கு ஆகுமாகாத ஒன்றை தனதாக்கிக் கொள்வது, கூட்டு வியாபாரத்தில் மோசடி செய்வது, பொய்க் கணக்கு எழுதுவது,

வாரிசு சொத்தில் அநியாயம் செய்வது, அனாதைகளின் சொத்தை அபகரிப்பது, பொது சொத்தில் கையாடல் செய்வது இப்படி எண்ணிலடங்கா பல ஹராமான செயல்களை மக்கள் செய்கின்றனர். இந்தவகை மக்களில் பலர் இபாதத்துகளை மிகுந்த கவனத்துடனும் ஆர்வத்துடனும் செய்தும் வருகின்றனர்.

ஆனால், இவர்களின் உடலிலும் உடையிலும் உரைவிடத்திலும் ஹராம் கலந்துவிட்ட காரணத்தால் இவர்களின் வழிபாடுகளால் மறுமையில் இவர்களுக்கு எவ்வித நன்மையையும் கிடைக்காது. மாறாக, அந்த இபாதத்துகளின் நன்மைகள் இவரிடம் இருந்து பறிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டுவிடும்.

அனாதையின் சொத்தை சாப்பிடுபவன் தனது வயிற்றில் நரக நெருப்பை சாப்பிடுகிறான் என்று அல்லாஹ் மிகக் கடுமையாக எச்சரிக்கின்றான்.

அவ்வாறே, ஹராமான இச்சைகளை விட்டும் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவையும் மிகப் பெரும் கேவலத்தை மறுமையில் நமக்கு ஏற்படுத்திவிடும்.

ஆகவே, நல்ல அமல்களை செய்வதில் கவனமும் ஆர்வமும் ஈடுபாடும் அதிகம் இருப்பதுடன் அந்த அமல்களை பாழாக்கி விடாமல், வீணாக்கிவிடாமல் பாதுக்காக்கவும் வேண்டும்.

ஆம், ஹராமான காரியங்களில் பல, பாவங்களில் பல நன்மைகளை அழித்துவிடுகின்றன. மறுமையில் மிக கைசேதமான நிலையை ஏற்படுத்தி விடுகின்றன.

இதை உணர்த்தும்விதமாகத்தான் இமாம் அவர்கள், நீங்கள் அமல்களில் கவனம் செலுத்துவது போன்று இதிலும் நீங்கள் கவனம் செலுத்துங்கள், இத்துடன் பேச்சை முடிப்போம். அதிகம் பேசுவதை விட குறைவாக பேசி அதிகமாக அமல் செய்வதே மேல் என்று சபையை நிறைவு செய்துவைத்தார்கள்.

- **அல்லாஹ்வே! எங்களுக்கு உனது மார்க்கத்தை புரிவதற்கும் அதன்படி அமல் செய்வதற்கும் நல் வழிகாட்டு!**

- **ஹராமான, உனக்குப் பிடிக்காத, உனக்கு வெறுப்பான - எல்லா சொல் செயல்களை விட்டும் எங்களை என்றும் பாதுகாத்துக் கொள்!**

- **உன்னை திருப்திபடுத்துகின்ற, உன்னை மகிழ்விக்கின்ற அமல்களையும் காரியங்களையும் செயல்களையும் மட்டும் நாங்கள் செய்வதற்கு எங்களுக்கு அருள்புரி!**

ஆமீன்!

• • •

- Note -

- Note -